148

முத்தாரம்



198949

198949

உள்ளே

ஆரம் : 1 | அக்டோபர், 1956 | முத்து : 3

கதை :

கி. ஆ. பெ. விசுவநாதம் ... 6
மு. கருணாநிதி ... 8
கே. ஏ. மதியழகன் ... 41
முல்லை சத்தி ... 60
அதிகமான் ... 68
ப. உ. சண்முகம் ... 75
இரெ. இளம்வழுதி ... 99

கட்டுரை :

நாவலர் நெடுஞ்செழியன் ... 15
ஈ. வெ. கி. சம்பத் ... 21
இரா. மதனகோபால் ... 27
வித்துவான் கி. சண்முகம் ... 31
பி. சி. கணேசன் ... 33
தில்லை. வில்லாளன் ... 51
செ. கந்தசாமி ... 58
முதல்வன் ... 81

கவிதை :

கவிஞர் வாணிதாசன் ... 5
கருணானந்தம் ... 14

பெருங் கதை :

டால்ஸ்டாய். தமிழில்: சொர்ணம் ...109

'முத்தாரம்'— இலக்கியத் திங்கள் ஏடு. தனிப் பிரதி அணா எட்டு ஆண்டு சந்தா ரூ. 6-0-0. ஆசிரியர்: மு. கருணாநிதி. வெளியிடுபவர்: மாறன், எம். ஏ., அச்சிட்டோர்; முரசொலி அச்சகம், சென்னை-6. அலுவலகம்: தபால் பெட்டி எண்: 712, 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6.

உங்கள் பார்வை!

● ...தங்களின் "முத்தாரம்" கண்டேன். மேலை நாட்டுக் கடல் முத்துக்களாயிருப்பினும் தமிழ்த் தங்கத்தால் வேயப்பட்டிருப்பது சிறந்த வேலைப்பாட்டுடன் காட்சியளிக்கிறது. "தமிழிலக்கிய மாளிகை"க்கு "முத்தாரம்" சபா மண்டபமாக அமைந்திருக்கிறது என்றால் அது மிகையில்லை. வாழ்க முத்தாரம்!

—ஏ. எல். நாராயணன்,
சென்னை—24.

● ...அளவைப் பெரிதாக்க வேண்டாம். இதே கையடக்கமாய் எழிலுடன் இலங்குகிறது!

—சி. காந்தி,
மாயூரம்.

● ...அடுத்த வீட்டு மல்லிகைப் பூவின் மணத்தை நுகர்ந்து கொண்டு இருந்தவனுக்கு தன் வீட்டிலேயே ஒரு ரோஜாச் செடி பூவோடு, நறுமணம் வீசத் தொடங்கி விட்டால் என்ன நிலையில் இருப்பானோ அதே நிலையை அடைந்தேன், தங்களின் முத்தாரத்தைக் கண்ட போது...

—எஸ். கே. எஸ். ஏ. கனி,
ஏர்வாடி.

● ...இரண்டாவது 'முத்தார'த்தின் அட்டைப்படம் வரைந்தவருக்கு (பெயர் தெரியவில்லை) எங்களின் பாராட்டும் நன்றியும்.

—சா. தி. அண்ணாமலை,
ஏ. வேலன்.
ஆலந்தூர்.

[சென்ற இதழின் அட்டைப் படத்தை வரைந்தவர் பிரபல 'ஆர்ட் டைரக்டர்' "தோட்டா" அவர்கள்—ஆர்.]

● ...கேள்வி பதில் என ஓர் பகுதி வேண்டும். முதல் முத்தாரத்தை விட நன்றாக அமையப் பெற்றது இரண்டாம் முத்தாரம்.

—பொன்னு சுந்தரம்,
புத்தூர்.

● ...சித்திரத் தொடர்கதையை இன்னும் அதிகமாகப் பிரசுரிக்க வேண்டும்.

கொ. செ. சென்னகிருட்டினன்
கொளத்தூர்.

● ...தமிழறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சென்ற இதழில் எழுதியுள்ள குட்டிக் கதை, ஆச்சாரியாருக்கு 'சவால்' விடும் வகையில் அமைந்துள்ளது.

—அ. ஆறுமுகம்.
இலுப்பக்குடி.

● ...வெறும் கதைகள் மட்டும் போதாது. அரசியலும் தேவை.

—ர. ரங்கராசன்,
கொண்டாலம்பட்டி.

● ...முத்தாரத்தை மேன் மேலும் அழகு செய்ய, திரைப்படச் செய்திக்கென தனிப்பகுதி தேவையில்லை.

—செ. கிருட்டினன்,
திருவாரூர்.

● ...ஆசிரியர் கருணாநிதி அவர்களின் தொடர் கதை ஒன்று கவிதை நடையில் ஆரம்பமாக வேண்டும்...

—சென்னை மாநில முதலாவது மூவர் கைப்பந்தாட்டப் போட்டிக் குழு, சாப்டூர்.

● ...செப்டம்பர் 'முத்தாரம்' இதழில் வெளி வந்துள்ள 'மறைந்த அடிவானம்' 1957ம் ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேர்வுக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. அது எனக்கு—ஏன், எல்லா மாணவர்களுக்கும் மிகவும் பயன்படும்.

—எஸ். சண்முகம்,
மேட்டுப்பாளையம்.

● ...திங்கள் இரு ஏடாக்கி விலையை நான்கு அணுவாகக் குறைத்தால் என்ன ?

—ஜி. ஜி. கிருட்டினன்,
இராயபுரம்.

● ...இன்றைய இளைஞர்கள் எதைப் படிப்பதற்கு விரும்புகிறார்கள் என்பதை நன்குணர்ந்து, அவர்கள் எண்ணத் திரையிலே ஓடும் கருத்தை அழகாக படம் பிடித்து காட்டியுள்ளது "முத்தாரம்."

—தஞ்சை நா. ல. பதி,
சென்னை—2.

● ...நாடகப் பகுதி மிகுதியாக இருந்தால் முத்தாரம் மிக நன்றாக இருக்கும்.

—வி. சீனிவாசன்,
சிங்கம்புணரி.

● ...தாங்கள் முரசொலியில் குறளோவியம் தீட்டுவது போல இதில் புறநானூற்றிலிருந்து மாதம் ஓரிரண்டு செய்யுட்கள் எடுத்து விளக்கி வரைந்தால் மிக நன்றாக இருக்கும்.

—ச. நாகலிங்கம்,
மதுரை.

கார் விபத்திலே குதிரைப் பந்தயக்காரர் ஒருவர் மாட்டிக் கொண்டு இறந்து விட்டார். அதன் காரணமாக இன்ஷூரன்ஸ் கம்பெனி ஒரு லட்சம் ரூபாய் தரவேண்டியிருந்தது.

ஆனால் விபத்திலே அந்த நபர் இறந்த செய்தியை அவரது மனைவிக்குத் தெரிவிக்கும் வேதனையான பொறுப்பு நிர்வாகியிடம் ஒப்படைக்கப்பட்டது.

நிர்வாகி நேராக மாண்டவனுடைய மனைவியிடம் சென்று, இப்படிக் கூறினார்:

"அம்மா! உங்கள் கணவர் சற்று நேரத்துக்கு முன்பு ஒரு கார் விபத்திலே ஒரு லட்சம் ரூபாய் ஜெயித்திருக்கிறார்!"

முத்துக்கள்

முத்தாரம் மூன்றாவது இதழ் உங்கள் கரத்தையும், கருத்தையும் அலங்கரிக்கும் இந்த நேரத்தில், 'இவ்வளவு தாமதமா'—என்று உங்கள் வாய் முணுமுணுப்பது இங்கே கேட்காமலில்லை. இனிமேல் கூடியவரையில் காலத்தில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

இந்த இதழில் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இலக்கியக் கடல் மூழ்கி உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கும் எழில் மிகு கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன. அது சென்னை கோகலே மண்டபத்தில் சென்ற திங்கள் அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரமாகும்!

அதேபோலவே அருமை மிகு நண்பர் சம்பத் அவர்களது 'குடியாட்சி' பற்றிய அரும் பெரும் எண்ணக் குவியல் இங்கே உங்களுக்குக் கிடைக்கிறது. இது சென்னை தியாகராயர் கல்லூரியில் அவர் ஆற்றிய சொற்பொழிவுத் திரள்.

—நேரில் கேட்டு செவிகளில் தேன் பாயப் பெறாதவர்கள் இங்கே அதன் பயனை நுகரலாம்!

இளம் எழுத்தாளர்களில் பலர் தங்களுக்கு இடமில்லையா?—எனக் கேட்கின்றனர்.

ஏன் இல்லை? நிறைய அவர்கட்கு இடமுண்டு. கற்பனை வளம் செறிந்த கதை கட்டுரைகளோடு, எழில்மிகு வெளிநாட்டுக் கதைகளையும் தழுவலின்றி மொழிபெயர்த்து அனுப்புங்கள்; வெளியிடுகிறோம்.

இவ்வேளை எங்கிருப்பாய்? என்செய்வாய் என்றே
ஏதேதோ நான் எண்ணி ஏங்குகின்ற மாலை!
செவ்வல்லி தீச்சுடர்போல் குளத்தினிலே பூக்கும்;
சென்றடையும் வெய்யோனை நின்றிருந்து பார்த்தேன்.
அவ்வேளை நீவந்தாய்! மாவடுவோ பூத்த
அழகுதாமரை காய்த்தல் இங்குத்தான் கண்டேன்!
ஒவ்வாதே இச்செய்கை; முகம் மறைத்தல் கண்டே
உயர்வல்லம் சிரிக்குததோ! அதற்கென்ன செய்வாய்?

தேக்குநிறை மலைச்சாரல் சென்றலுத்து நின்றேன்:
சிற்றோடை நீர்அருந்தும் பிடிகண்டு வந்தேன்:
பூக்காட்டு வண்டிரண்டு முழுமதியில் மொய்க்கும்
புதுமையினை நான்கண்டேன்: உனைக்கண்டேன்; என்ன
நோக்கத்தால் முகம்மறைத்தாய்? ஆனாலும் உன்றன்
நூலிடைக் கோயார்காவல்? உயிர்பறிக்கும் அந்தப்
பூக்காத தாமரையின் இருமொட்டோ உன்றன்
போக்கெண்ணிச் சிரிப்பதற்கு நீஎன்ன செய்வாய்?

வருமான வரி

(இன்கம்டாக்ஸ் ஆபீஸர் தன் மேஜை மணியை ஓங்கி அடித்தார். பியூன் ஓடிவந்தான்.)

ஆபீஸர்: நான் யாரைக் கூப்பிடச் சொன்னேன்?

பியூன்: மயிலம் சுப்பிரமணியஞ் செட்டியாரை!

ஆபீ: செட்டியார் இப்படித்தான் கைலியும் குல்லாயும் தரித்திருப்பாரோ? இவரை ஏன் உள்ளே அனுமதித்தாய்?

பியூ: இல்லிங்க சார்: அவருடைய கணக்கப்பிள்ளையாங் காட்டியுபின்னு நினேச்சேன்!

ஆபீ: நினைப்படா...நினைப்பே (வந்தவரை நோக்கி) நீர் யார்?

வந்தவர்: இரும்புக்கடை இஸ்மாயில் சாயபு!

ஆபீ: ஓஹோ...உமது பெயரை பதினொன்றரை மணிக்கே கூப்பிட்டுப் பார்த்து. 'ஆப்சண்ட்' போட்டாகி விட்டது. இப்போது மணி ஒன்னரை: நீர் போகலாம்.

இஸ்: சார்...சார். சாப்பிட்டு வர நேரமாயிட்டதுங்க சார். 11 மணிக்கெல்லாம் எப்படி சார் சாப்பிட்டு வர முடியும்?

ஆபீ: உமது சவுகரியத்திற்காக இங்கு ஆபீஸ் வைத்திருக்கவில்லை. நீர் போகலாம்.

இஸ்: மன்னிக்கணுங்க சார். 21-ம் தேதியன்று சரியாக 11 மணிக்கெல்லாம் சாப்பாடில்லாமல் பட்டினியோடேயே இங்கே வந்து நின்று காத்துக்கிட்டிருந்தேன். எஜமான் சாயந்திரம் 5-மணிக்குகூப்பிட்டு. இன்றைக்கு வரும்படி 'ஈரங்கி'யை மாத்திப்போட்டிருப்பதாகக் கூறினீர்கள். நாங்கள் இங்கு வந்து பட்டினி கிடக்க கவர்மெண்ட் கைதிகள் இல்லையே! கவர்மெண்டுக்குப் பணம் கொடுக்கும் ஆசாமிகள் அல்லவா நாங்கள்...... தாங்கள்...

ஆபீ: சரி... சரி... போதும் கணக்கை எடும்: அதிகப் பேச்சு வேண்டாம்.

(கணக்குகள் காண்பிக்கப் பெற்றன.)

ஆபீ: இதென்னய்யா இது? சென்ற வருடம் ரூபாய் 2713—0—0 ஆதாயம் கிடைத்திருக்க, இவ்வருடம் ரூபாய் 946—0—0 ஆதாயம் காட்டியிருக்கிறீரே? என்ன செய்தி?

இஸ் : நான் காட்டவில்லை சார். கணக்குக் காட்டுகிறது.

ஆபீ : தெரிகிறது. கணக்கைப் பார்த்துத்தான் கேட்கிறேன்.

இஸ் : நான் என்ன செய்வேன்? வியாபாரம் நடந்தால் தானே லாபம்?

ஆபீ : எல்லோருக்கும் நடந்திருக்கும் வியாபாரம் உமக்கு மட்டும் நடக்காமற்போன காரணம் என்ன?

இஸ் : இன்கம் டாக்ஸ்தான் காரணம்!

ஆபீ : அது எப்படி?

இஸ் : சென்ற வருடத்தில் நானும் கணக்கப்பிள்ளையும் கடையைப் பூட்டிவிட்டு தங்கள் ஆபீசிற்கு ஒன்னரை மாதமும், மதுரை அப்பீல் ஆபீசுக்கு ஒன்னரை மாதமும் அலைந்தோம். எப்படி வியாபாரம் நடக்கும்? இதோ பாருங்கள். கடை சாவிக்கோத்து—

என்று இஸ்மாயில் சாயபு இடுப்பிலிருந்து சாவியை எடுத்துக் காட்டினார். ஆபீசர் என்ன செய்திருப்பார்?

முத்துமாலை

மு.கருணாநிதி

சோலையிலே தென்றலிலே இன்பம் பின்னர்-சொந்த நாட்டைக் காப்பாற்ற சுழற்றுவேன் வாளை என்று முழங்குகின்ற காளை! மொட்டவிழாப் பருவ மலராயிருக்கும்போதே சுட்டெரிப்பேன் பகையை என்று சுடர் முகந் தூக்கி நின்ற குல விளக்கு! அவன் கட்டவிழா மேனிதனைக் கரந்தொட்டுத் தழுவியாடக் காத்திருந்தாள் பூவை யெனும் பாவை! தொழிற் குலத்துக்கோர் முத்தென்பார் அவனை! எழிற்சத்து மிகும் கனி யென்பார்—பனி நனைந்த மலரென்பார் அவளை! இருவருமே ஒருவராய் ஆவதெப்போ—உருவிய வாளைச் சற்று உறையிலே போடுமேயத்தான்-என்று முரசு உறுமுகின்ற களம் நோக்கி, வாள் தூக்கிப் பாய்கின்ற காதலனைத் தடுத்து நின்றாள்.

"விடுதலைக்குத் தாவுகின்ற என்னை உந்தன் காதலுக்குக் காவு கொடுக்க எண்ணாதே பெண்ணே! கெடுதலைக்கு ஆளாகிக் கீழோரால் சீழ் என்று இகழப்பட்ட எந்தன் செந்தமிழர் திருநாட்டை வாழ்விக்க எழுந்திருக்கும் அணிவகுப்பில் நிற்பேன்—மணிமாடம், கனிப்பேச்சு, வேண்டேன்!" என்றான்.

"முற்றிலுமே வெறுத்தீரோ?" என்றாள்.

"பற்றில்லை உன் மீது என்றுரைக்க மாட்டேன்—பாம்புப் புற்றில்லை தென்தமிழர் தோட்டத்தில் என்ற நிலை வரும்வரையில்—கற்றிட முடியாதடி காதல் படிப்பு" என்றான்: அவள் துடித்து நின்றாள்.

"இருவருமே போர்க்களத்தில் இணைந்து நிற்போம்—அணைந்து விட்டாலும் அப்படியே ஆகட்டும் இருவருக்கும்; இதற்கென்ன பதில் அத்தான்?"

"இஃதோர் முறை காதலர்கள் கடைப்பிடிப்பதுண்டு! ஆயின் எனக்கது சரிப்பட்டு வராது தங்கம்! களம் புகுந்து வரும் பகையைச் சாடுகின்ற நேரம்—என் உளம் புகுந்த

நேரிழையாளுக்கு யாது நேர்ந்ததோ என ஒருக் கணம் தயங்கும்...அதற்குள் என் படை மயங்கும்....வேண்டாமடி பெண்ணே! விடை கொடடி என் கண்ணே!"

"மணத்திற்குத்தான் இசைய மறுக்கின்றீர்; மங்கையென்னை உண்பதற்குப் போட்டு வைத்த இலை போல பூப்படுக்கை உண்டே! அங்கு வாரீர்!"

"பால் சோறு பானையிலே இருக்கட்டும்; பசியுண்டு இப்போது என்றாலும் உன்னைப் பாழாக்கிப் போகமாட்டேன். அட்டியின்றி விடை தருவாய் அன்னமே!"

"மாம்பழக் கன்னத்தின் அழைப்புக்கும் தடையுண்டா?"

"தடையுண்டு! படை கொண்டு செல்கின்ற நான், பிணமாகி விட்டாலும் உனக்கு மணமாகித் தீரவேண்டும்—என் அன்பே! உன்னை எச்சில் படுத்திவிட்டால் எனக்கென்ன லாபம்? உனக்குத்தான் பெரு நஷ்டம்!"

"முடியாது! ஒரு முத்தம்...!"

"வேண்டாம்........திரும்பிய பின் மொத்தமாக!"

"அழவிட்டுப் போகாதீர் அத்தான்!"

"காலமெல்லாம் மகிழ்ந்திருப்போம்—கவலைவிடு!"

"நீங்கள் களவெற்றி பெற்றவுடன்—நான் காதல் வெற்றி பெற்றதாய் மகிழ்வதற்கு இசைவு தாரும்!"

"அசைவொன்றில் ஆயிரம் வண்ணங்கள் காட்டுகின்ற அழகு மயிலே! பசையற்ற தென்புலத்தார் திசை கெட்டு வாடுவதை மாற்றியபின் நாம், மாலை மாற்றிக் கொள்வதிலே தடையில்லை: அறிவாய்!"

"வெற்றி பெற்று விரைவில் வாரீர்! கத்துகடல் விளைகின்ற முத்தெடுத்து மாலை தொடுத்து வைக்கின்றேன். எந்தன் தென்பாண்டித் தேவே! நீர் திரும்பும்வரை இங்கேயே நிற்கின்றேன். இல்லையேல், இக்கடற்கரையே எனக்கமைந்த கல்லறையாம்!"

"சிப்பியிலே விளையாத சிரிப்பு முத்து காட்டிடுவாய்! என் சிந்தையிலே உறவாடும் செந்தமிழின் நலம் பாடித் திரும்புகின்றேன்" எனப் பிரிந்தான்—கடற்கரையின் வெண்மணலில் காரிகையைத் தனிப்ப விடுத்து! ....அழகு சிப்பிகளால் முத்தளித்து, ஆடும் அலைகளால் உப்பளித்து, உயர்வளிக்கும் பெருங்கடல் நீர், வாய் கொப்பளிப்பதற்குப் பயனில்லை என்பதற்காக வெறுப்பாருண்டோ? அஃதேபோல் நாட்டுக்கு உழைக்கின்ற உத்தமனும் பெருவீரன் தன்னை

அட்டைப்படக்கதை

உடனே தழுவிடவில்லையென்று வெறுக்கவில்லை அந்த வேல் விழியாள்!

விடைபெற்றுப் போன சிங்கம், தலைவனைக் கண்டு பேசி, நிலைதனை அறிந்து தேர்ந்து, நீதிக்குத் தொடுக்கும் யுத்தத் தளபதியாய் நின்றிருந்தான்: பெருஞ்சேனை முகப்பதனில்!

நாடழிக்கும் குணக் கேடர் களைக் கூடி யெதிர்ப்பதற்குக் கூவுகின்றான் நல்வீரன். தெருவெல்லாம் பாசறைகள்! தென் பாண்டி மண்டிலத்தில் பாடி வீடு அமையாத பகுதியில்லை!

போருக்கு நாள் பார்க்க வேண்டியதுதான் பாக்கி! தோளுக்கு நிகரான வாளில்லை: வேலில்லை எனச் சொல்லி தொகை தொகையாய்க்குவிந்து விட்டார் தொல்புவியில் முதன் முதலாய்த் தோன்றி நின்ற தமிழ்க் குலத்தார்! தென்புலத்தார் எழுந்து விட்ட சேதி கேட்டு, திக்கெல்லாம்திகைப்பு காட்டும்! இன எழுச்சி பெற்ற வெள்ளம் — இளைஞரது பட்டாளம்! பாட்டாளிப் படை வரிசை! இத்தனையும் அணி வகுப்பில் சேர்த்துக் கொண்டு "நாள் குறிப்பீர்!" என ஒலி விடுத்தான் தலைமைத் தளபதிக்கு!

தன்வலியும் மாற்றான் வலியும் அறிந்து செயலாற்றுதலே குறள் வகுக்கும் இலக்கணமெனக் கொண்டிருக்கும் தலைவனவன், "விரைவில் போர் துவங்கும்— பொறுத்திருங்கள்!" எனப் பதில் இறுத்தான்.

படை கொண்டு செல்லுதற்கு இன்னும் சில நாளே எனக் கண்டு சிந்தை மகிழ்ந்தான்!.........அதற்குள் கொடும் விந்தை யொன்று உருவாகும் என யார் கண்டார்?...பாசறைக்குப் பக்கத்தே படை நடத்தும் விதம் பற்றித் தனிமையிலே நின்று யோசனைக்கு அடிமை யானான். அப்போது ஆறேழு நரிக் குணத்தார் அவன்மீது பாய்வதற்கு ஓடி வந்தார். "ஒதியமிலாறுகளே! ஒன்றுக்கும் பயனற்ற பிறவிகளே! என்ன வேண்டும்?" எனக் கேட்டான். "உந்தன் உயிர் வேண்டும்!" எனச் சொன்னார் உருவத்தால் மனிதராய்த் திரிகின்ற நாய் நரிகள்! "கழுகுக்கும் பருந்துக்கும் இவ்வுடலைக் கொடுப்பதற்கேக் களம் செல்ல இருக்கின்றேன்—அதற்குள்ளே உமக்கு 'முடை' என்றால் எடுத்துச் சொல்வீர்! ஆயின் ஒன்று: என்னொருவன் உயிர் பறித்தல் மட்டும்தான் உம்மாலே ஆவதன்றி, நான் வளர்த்த உணர்ச்சிகளை — உண்மை வீரர்களை — அழித்துப் போட ஆகாதென அறிவீர்" என்றான். தமிழ் கேட்கும் செவியில்லாப் பாம்பு மனிதர் படபடவென சுற்றிக் கொண்டார். படைவீரன் அங்கங்களை ஆலமரத்து விழுது போல் அறுத்தெறிந்தார்...வாள் தடுக்க எழுந்த கரத்தினிலே விரல்களெல்லாம் 'பொலபொல'வென உதிர்ந்தன தரையில்! மலைபிளக்க வெடிவைத்தது போல், மாவீரன் மண்டையைப் பிளப்பதற்கும் துணிந்து விட்டார்: தலை நொறுங்கித் தரையில் சாய்ந்தான்! அத்தை மகள் முத்தமிடத் துடித்த

செல்லப்பன்

ஒரு சினிமாக் கொட்டகைக்காரர் வியாபார அபிவிருத்தியைக் கருதி ஒரு அழகான, கவர்ச்சி மிக்க பெண்ணை டிக்கெட் விற்பனையாளராக நியமித்திருந்தார். எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியும் கிடைத்தது.

ஒரு நாள் திடீரென்று அந்தப் பெண் முதலாளியிடம் வந்து முறையிட்டுக் கொண்டாள்.

பெண்: எனக்கு பத்து நாள் விடுமுறை வேண்டும்.

முதலாளி: (திகைப்புடன்) என்ன, விடுமுறையா? அதற்குள்ளா? ஏன் அப்படி?

பெண்: அப்போதுதான் இழந்த என் அழகைத் திரும்ப புதுப்பித்துக் கொள்ள முடியும்!

முதலாளி: என்ன; உன் அழகு போய்விட்டதா?

பெண்: ஆமாம்; இல்லாவிட்டால் இப்போதெல்லாம் டிக்கெட் வாங்குபவர்கள் நான் கொடுக்கும் பாக்கிச் சில்லறையை மெனக்கட்டு எண்ணிப் பார்ப்பார்களா? இதிலிருந்தே என் அழகெல்லாம் போய்விட்டது என்று தெரியவில்லையா, உங்களுக்கு?

முதலாளி என்ன செய்திருப்பார்? வாயடைத்துப் போய் உட்கார்ந்து விட்டார்!

இதழில் அரிவாள் வீச்சு!.........
மலர் முகம் புதைத்திருக்க அவள் தேர்ந்தெடுத்த மணி மார்பில் உதிர வெள்ளம்!

ஓடிவிட்டார் உயிர் எடுக்க வந்த கொடியோர்! உத்தமனும் கடைசி மூச்சை நாட்டுக்கே அளித்துவிட்டுத் துயில் நீங்காத் தொட்டிலிலே படுத்துக் கொண்டான்.

சித்திரம் சிதைந்தது எனக் கேள்வியுற்றாள். முத்துமாலை கட்டிக்கொண்டு கடல் அலையின் ஓரம் நின்ற கட்டழகி!

மாலைதனை அறுத்துவிட்டார் மாபாவிகள்! சேனைதனை நடத்திச் செல்லும் சிங்கம்—அங்கம் அறுபட்டுத் துரோகிகளால் துடித்து வீழ்ந்த காட்சி—அம்மவோ; கேட்பதற்கு இத்தனை நாள் வாழ்ந்தேனோ?

"வெண் மணலில் நின்றிருப்பாய் பெண்ணே! விரைந்து வந்து மணந்திடுவேன் உன்னை!" எனச் சொன்ன வாய் மூடிற்றாமே!...கம்பீர நடை போடும் கால்கள் சோர்ந்து விட்டனவா? கனல் பொழியும் கண்களிலே, எனை மணக்கும்போது குளிர்பொழியும் எனச் சொல்லி வாழ்ந்தேனே; என் நறுந்தேனே! உன்னைச் சாவுச் சகதியில் ஊற்றி விட்டார்களாமே சண்டாளப் பிறவிகள்! இனி எனக்கேன் வாழ்வு?" என்றாள். முத்துமாலையைக் கடலில் வீசி எறிந்தாள். அதைத் தொடர்ந்து தானும் அத்தானை நினைத்தவாறு ஆழ்கடலின் அடியிற் சென்றாள்!

●

ஒருபாய்க்கு பெரியவீடு வாடகைக்கு கிடைக்கும்.
என்.ஜி.ஓ.வுக்கு கூடுதல் சம்பளம்
'செலக்ஷன்' பரிட்சை கூடாது
மாப்பிள்ளை தேவை.
வேலை காலி.

காலையிலே கண்விழித்துப் பார்க்கும் போது
காணவில்லை ! "அவள்" பகைவன் கதிரோன் வந்தான் !
'வேலையில்லா வீணனிவன்' என்று சொல்லி,
மெதுவாக மனத்தினுள்ளே வைது கொண்டேன் !
சோலையிலே இணைந்திட்ட அன்றில் போலச்
சுகங்கண்டேன் இதுகாறும்; சோம்பல் தீர்ந்தேன் !
ஆலையிடைக் கரும்பாக அறுதி யுற்று,
அரும்பாடு படவேண்டும் பகலில் எல்லாம் !

அந்தியினை வரவேற்றேன் ஆர்வத் தோடு !
அயர்ந்தவுடல், தளர்ந்தமனம் உயரு மன்றோ ?
விந்தையெழில் காட்டுகின்ற வான மீதில்,
வெண்மதியும் தண்ணிலவை வீச வந்தான் !
சிந்தையிலே தீயெண்ணம் சேர்த்த வர்க்கும்,
திருடருக்கும், காமுகர்க்கும் சிரமம் தீர்த்து—
நொந்தமனக் காதலர்க்கும் துணையாய் நிற்க
நூதனப்பெண் இரவென்னும் பாங்கி வந்தாள் !

அள்ளியொரு கவளத்தை விழுங்கி விட்டு
"அவள்"வருகை எதிர்நோக்கிப் படுத்தி ருந்தேன்.
கள்ளனைப்போல் வருவாள்என் காதல் தோழி—
கண்பொத்தி அன்புமுத்தம் தருவாள்: இன்பம்
வெள்ளமெனப் பொங்கியெழும் உள்ள மெங்கும்;
வேதனைகள் மாய்ந்தொழியும்; உடலின் சோர்வு
துள்ளியெழுந் தோடிவிடும்; தூய நெஞ்சில்
தோன்றாத காட்சியில்லை; துன்பம் வெல்வேன்!
மறக்கவொண்ணா இன்பமழை பொழியும் அந்த
மாயமுகில். மங்கை"அவள்" வடிவ மில்லாள்!
துறக்கவொண்ணாப் பெருநோயால் தொடரப் பட்டோர்,
தொழிலாளர், உழைப்பாளர் துயரம் போக்கச்
சிறக்கவொரு மருந்தாவாள்; செல்வர் தம்மைச்
சேராது நீங்கிநிற்கும் சீர்மி குந்தாள்!
உறக்கமெனும் பெயருடையாள்! உலகம் வாழ
உதவிடுவாள்; "அவள்"என்றும் ஓங்கி வாழ்க!

இலக்கிய இன்பம்

கலைகளில் எல்லாம் தலைச் சிறந்த கலையாக இலக்கியக் கலை கருதப்படுகிறது.

அந்த இலக்கியம் தரும் இன்பம் மகத்தானது!

மனித வாழ்வை, உலகில், 'கலையியல்,' 'அறிவியல்' என்ற இரு கூறுகளாக்கியிருக்கிறார்கள்.

மூளையைத் தொடக் கூடியவை எல்லாம் அறிவியலிலும், உணர்ச்சியைத் தொடக் கூடியவை எல்லாம் கலையியலிலும் அடங்குபவையாகும்.

பொருள்களை உணர்ச்சியினால் அளவிடும்போது, அது கலையாகிறது; அந்தக் கலையை விஞ்ஞான விளக்கத்திற்கு உட்படுத்தக் கூடாது; உட்படுத்தினால் குழப்பமே விளையும்.

பொருள்களுக்கு விஞ்ஞான விளக்கம் தருவதுதான் அறிவியலாகும்; ஆகவே, அறிவியலையும் கலையியலையும் குழப்பிக் கொள்ளக் கூடாது.

கைவேலை செய்பவன் வேலைக்காரன்; கையாலும் மூளையாலும் வேலை செய்பவன் வினைஞன். கை, மூளை, உணர்ச்சி இவைகளை ஒன்றுபடுத்தி வேலை செய்பவன் கலைஞன் என்று பாகுபடுத்தலாம்.

பல கலைகளிலும் மிகச் சிறந்தது இலக்கியக் கலையாகும்; இலக்கியக் கலை மனித உணர்ச்சிக்குக் கிளர்ச்சியைத் தருவதாகும்.

ஓவியக் கலையை எடுத்துக் கொள்வோம் — நீல மலையை ஒரு ஓவியன் ஓவியமாக்குகிறான்; அந்த ஓவியத்தில் நீல மலையின் தோற்றத்தை மட்டுமே நாம் காண முடியும்; ஆனால் அந்த நீலமலையில் வீசும் தென்றலின் குளிர்ச்சியையோ, சிந்து பாடும் சிற்றாறுகளின் ஓசையையோ அனுபவிக்க முடியாது.

சிற்பக் கலையைக் காண்போம்—சிற்பி ஒரு மனித உருவத்தைச் செதுக்குகிறான்; இவன் தோற்றத்தோடு, உருவத்தின் பருமனையும் அழகுபட எடுத்துக்காட்ட முடியும்; உள்ளத்து உணர்ச்சிகளில் ஏதேனும் ஒன்றை மட்டுமே அந்தச் சிலையில் பிரதிபலிக்கச் செய்ய முடியும்.

ஆனால், இலக்கியக் கலை எப்படிப்பட்டது?

நீலமலையை நம் கண்முன் நிறுத்துவான் கவிஞன். அங்கே மலர்ந்திருக்கும் மலர்களின் மணத்தை நாம் நுகரச் செய்

வான்; வீசுகிற தென்றலின் இனிமையை நமக்கு அள்ளித் தருவான்: ஓடுகிற சிற்றாறுகளின் ஓசையை நமக்குக் கேட்கச் செய்வான்; கோடிக் கணக்கான உணர்ச்சிகளையும் நமக்கு உணர்த்துவான். இதனால்தான், வேறெல்லாக் கலைகளையும்விட இலக்கியக் கலையைப் பெரியது—சிறந்தது என்கிறார்கள், அறிஞர் பெருமக்கள்!

ஆயுந்தோறும் ஆயுந்தோறும் இன்பம் தரும் தமிழில், அதுபோன்ற இலக்கியங்கள் எண்ணற்றவை உண்டு!

'தொட்டனைத்தூறும் மணற்கேணி—மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு' என்றான் வள்ளுவன்.

தோண்டத் தோண்ட மணற் கேணியில் நீர் ஊறுவது போல, மாந்தர் கல்வி கற்கக் கற்க அறிவு ஊறும் என்பது பொருள். இது போலத்தான் ஆராய ஆராயத் தமிழ், இனிமையைத் தரும்—இன்பம் தரும்.

மனித வாழ்வின் இலட்சியமே, அதிகபட்சமான இன்பத்தைப் பெறுவதுதான்.

உழைப்பைக் குறைத்து, வசதிகளைப் பெருக்கிக் கொண்டு, துன்பங்களைத் தவிர்த்து, அதிக பட்சமான இன்பம் துய்க்க வேண்டுமென்பது, உலக மக்களின் மிக உன்னதமான இலட்சியமாகும்.

அப்படி மனிதர்கள் இன்பம் பெறுவதற்காக உள்ள பல துறைகளில், இலக்கியமும் இன்பம் தரும் ஒரு துறையாகும்.

மக்கள், வாழ்வுக்காக அவதிப்படுகிற நேரத்தில், இது போன்ற இலக்கிய ஆராய்ச்சிகள் தேவைதானா — என்று கேட்கக்கூடும் சிலர்; நிச்சயமாகத் தேவைதான்.

உடல் சுகாதாரத்திற்காக, நாம் சில பல காரியங்களைச் செய்கிறோம் — சுத்தமான காற்று வேண்டும்; சுத்தமான இருக்கை வேண்டும்; சுகாதாரமான உடை வேண்டும்; சத்துள்ள சுகாதாரத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் சில பல காரியங்கள் தேவையல்லவா?

எந்த விளைவுகள் நாட்டில் மலரவேண்டும் என்று விரும்புகிறோமோ அதற்கான கருத்துக்கள், நாட்டு மக்களின் உள்ளத்தில் ஊன்றப்படுதல் வேண்டும். அப்படி உள்ளத்தில் கருத்துக்களை ஊன்றுவதற்கு முன்னால், மக்களின் உள்ளம் ஆரோக்கியமானதாக — சுகாதாரமானதாக இருத்தல் அவசியமாகும். ஆனால், இன்று,

நாவலர்
நெடுஞ்செழியன் எம்.ஏ

மக்களின் உள்
ளம் ஆரோக்
கியமான தாக-
சுகமான தாக
இல்லை. நெடி
வீசிக் கொண்
டிருக்கிற நிலை
யில் பெரும்
பாலான மக்க
ளின் உள்ளம்
முடை நாற்ற
மடிப்பதாக—
சுகாதாரமற்ற
தாக இருப்ப
தைக் காண்கிறோம்.

அந்த உள்ளங்களைச் சுகா
தாரப் படுத்துவதற்கு இலக்கிய
ஆராய்ச்சிகள் பயன் படக்
கூடியவைதான்.

இலக்கியம் ஒரு பெருங்
கடல்; நான் எத்தனைதான் எடுத்
துச் சொல்ல முயன்றாலும்,
'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்
கடலில், நாழிமுகக்காது
நானாழி' என்பதற்கொப்ப, என்
னால் அத்தனையும் எடுத்தியம்ப
முடியாது.

இலக்கியமென்பது, உள்
ளதை அப்படியே எடுத்துச்
சொல்வது அல்ல; உள்ள
தைக் காணும்போது எழக்
கூடிய உணர்ச்சிக்கு வயப்
பட்டு, இயற்கையோடு ஒத்த
கற்பனையைக் காட்டி, உள்
ளதை எடுத்துச் சொல்லுவது
இலக்கியமாகும்.

இலக்கியக் கர்த்தாக்கள்,
கவிஞர்கள், புலவர்கள் எல்
லாம் உள்ளதை மட்டுமின்றி,
அதிலிருந்து சற்று விலகி, 'இது
இப்படியும்
இருக்கலாம்'
என்று ஒரு
'வளைவு' — ஒரு
'கோடு' இட்
டுக் காட்டுவார்
கள்.

ஆனால், உல
கில் வேறெந்த
மொழி இலக்கி
யத்திலும் இல்
லாத ஒரு
சிறப்பு தமிழ்
மொழிக்கு
உண்டு. அகத்துறைப் பாடல்
கள் தமிழ் மொழியில் மட்டுமே
உள்ளன.

காதல் உணர்ச்சியை
சித்தரிக்க குறிப்பிட்ட பாத்தி
ரங்களைச் சிருஷ்டித்துக் கொள்
ளாமல், தலைவன் — தலைவி —
தோழி என்ற பொதுப் பெயர்
களை வைத்துக் கொண்டே,
காதல் எப்படிப்பட்டது என்
பதை எடுத்துரைக்கிற இலக்கி
யங்கள் தமிழில்தான் உண்டு.
மேலும், கூறப்படும் உவமை
களில் உள்ளுறைப் பொருள்
களைச் சொருகி, தமிழ்ப் புலவர்
கள் கவிதைகளைப் புனைந்திருக்
கின்றனர். பழங் காலத் தமிழ்ப்
புலவர்கள் உவமைகளைப்
பெரும்பாலும் உள்ளுறைப்
பொருள்களுடன்தான் அமைத்
துள்ளனர்.

அகநானூற்றில் உள்ள பாடல்
ஒன்றினை விளக்குகிறேன்.

தலைவன் ஒருவன் வெளியூர்
செல்கிறான்—பண்டைத் தமிழ
கத்தில்தான்! தலைவி, தலைவ
னைப் பிரிய நேரிடுகிறது என்ப

தால் வருந்துகிறாள் — கவலை கொள்கிறாள்: தலைவனும் பிரியா விடை பெற்றுச் சென்று விடுகிறான்.

தலைவனைப் பிரிந்த தலைவி ஏங்குகிறாள்; உடன் உள்ள தோழி ஏதேதோ கூறித் தலைவியைத் தேற்ற நினைக்கிறாள்.

அப்படி அவள் தலைவியைத் தேற்றுவதற்காகக் கற்பனைக் கதை ஒன்று கூறுவதாகக் கவிஞன் கற்பனை செய்கிறான்—

தலைவன் பல ஊர்களையும் தாண்டி, மலைப்பாங்கான பகுதிகளையும் தாண்டி நாடு ஒன்றை அடைகிறான். வெப்பம் மிகுந்த அந்த நேரத்தில் தலைவன் மிகவும் களைத்துப்போன நிலையில் நீர் அருந்த நினைக்கிறான்; அருகில் இருந்த குட்டை ஒன்றில் நீர் அருந்தச் செல்லுகிறான்; அங்கே ஒரு ஆண் மானும் பெண்மானும் நீர் அருந்த வருகின்றன; ஆனால், அந்தக் குட்டையில் ஒரு மானுக்கு மட்டுமே போதுமான நீர் இருக்கிறது; இதையறிந்த ஆண் மான், பெண் மான் மட்டுமே நீர் அருந்த வேண்டும் என்று சொல்லுகிறது.

ஆகவே, தான் அருந்தினால் தான் பெண்மான் நீர் அருந்தும் என்று கருதி, நீர் அருந்துவது போல் பாவனை செய்கிறது; பெண் மான், ஆண் மான் நீர் அருந்துவதாக நினைத்துக் கொண்டு தண்ணீரைக் குடித்து விடுகிறது.

'இந்தக் காட்சியைக் கண்ட பின்னும் தலைவன் மேலால் செல்ல மாட்டான்; உன்னை நோக்கி ஓடி வந்துவிடுவான்.' என்று ஏங்கித் தவிக்கும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுகிறாள்.

இது நற்றிணையில் காணப்படும் ஒரு கவிதை; இது போன்றே வேறொரு கவிதையும் உண்டு.

அழகி ஒருத்தி வீட்டை விட்டுப் புறப்பட்டு, தண்ணீர் கொண்டு வரக் குடமேந்திச் செல்கிறாள். அவளைப் பார்த்து விட்ட இளைஞன் ஒருவன், அவளது எழிலுருவைக் கண்டு மயங்கிய நிலையில் அவளைப் பின் தொடர்கிறான்; அவளிடம் எப்படியேனும் பேசிவிட வேண்டுமென ஏதேதோ செய்து பார்க்கிறான்; எந்த முயற்சியும் பலிக்கவில்லை. பெண் இவனை ஏறெடுத்துப் பாராமலேயே போய்விடுகிறாள். ஏக்கமுற்ற நிலையில் அந்த வாலிபன் கருதுகிறான் — "அழகியாகப் பிறந்த உன்னைக் குறை கூறியும் பயனில்லை; உன்னைப் பெற்றெடுத்து, இப்படி வெளியே போய்வர

உன்னை அனுமதித்தார்களே. அவர்களையும் குற்றம் கூறக்கூடாது; இந்த நாட்டு அரசனைத்தான் கூறவேண்டும். ஏனெனில், மதம் பிடித்த யானையை ஊருக்கு நடுவே கொண்டுவரும்போது. 'மதம் பிடித்த யானை வருகிறது; ஊர் மக்களே, கவனமாயிருங்கள்' என்று முரசறைந்து.பறைசாற்றி யானையை வெளியில் அனுப்புகிற அரசன், 'இன்னார் வீட்டில் உள்ள அழகி, இன்று இத்தனை நேரத்திற்கு வெளியே புறப்படுகிருள்; எனவே பலவீனமான இளைஞர்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்' என்று ஏன் முரசறைந்திருக்கக் கூடாது? குற்றம் அரசனுடையதுதான்'' என்று அந்த வாலிபன் கருதுகிருனும்! இதுவும் தமிழ் இலக்கியத்தினுள் கிடைப்பதுதான்!

இப்படி தமிழ் இலக்கியத்தில் உள்ள இன்பத்தை நுகர்வதற்கு மட்டுமல்ல நாம் இலக்கியம் பயில்வது! இலக்கியம் இன்பம் மட்டும் வழங்குவதல்ல!

தமிழ் நாட்டின் அன்றைய நிலையை—சங்க கால நிலையை உணர்ந்து கொள்ளவும் நமக்கு உறுதுணையாக இருக்கிறது. இலக்கியம்!

வேறெந்த மொழியிலும் உள்ள பெண் புலவர்களைவிட தமிழ் நாட்டில்தான் அதிகமான பெண் புலவர்கள் இருந்திருக்கிருர்கள்; சங்க காலத்தில் மட்டும் 40-45 பெண் புலவர்கள் இருந்ததாகக் கணக்கிடலாம்.

அன்று அந்த நிலையில் வாழ்ந்த தமிழகம் இடைக்காலத்தில் எப்படித் தாழ்ந்தது என்பதை அறிந்து கொண்டு, மீண்டும் நாம் சிறப்பான வாழ்வு பெற வழி என்ன என்பதைச் சிந்திக்கவும், சிந்தித்தபடி செயலாற்றத்தூண்டவும், உர மூட்டவும் நமக்கு இலக்கியங்கள் பயன்படுவதாகும்.

பழந் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கிற வாழ்வு முறையே இந்தக்காலத்திலும் வேண்டுமென நாம் கூறவில்லை; அந்த இலக்கியங்களை ஆராய்கிறோம்; எவை எவை தேவையோ அவற்றை யெல்லாம், அவற்றிலிருந்து எடுத்துக் கொள்கிறோம்; பழமைக்கு வளையாமல், பகுத்தறிவுக்கு ஒட்டிய—இயற்கையோடு இயைந்த கருத்துக்களை எடுத்துக் கொள்ளுகிறோம். ●

குடியாட்சி

ஐரோப்பாவில் இன்று எழில்மிக்க குடியரசுகளாகத் திகழும் நாடுகள் பல, இன்று, இந்த நாடு இருக்கும் நிலையை விடக் கேவலமாக இருந்தவை தான்; பின்பு, குடியரசு அரும்பி, சிறிது சிறிதாகக் குறைகளைக் களைந்துகொண்டு எடுத்துக்காட்டான குடியரசுகளாக இன்று வளர்ந்திருப்பதை நாம் காணுகிறோம்.

குடியரசு முறையை மேற்கொண்ட துவக்கத்தில் நாம் வழுக்கி விழலாம்; தவறுகள் இழைக்கலாம்; ஆனாலும் தொடர்ந்து நடந்தால் மக்களுக்கு நல்ல பயன்களை உருவாக்கித் தரலாம்—குறைபாடுகளை நீக்கிக் கொள்ளலாம்.

குடியரசு ஆட்சிக்குப் படிப்பினை தரும் பேராசிரியப் பீடமாகப் பிரிட்டனும் பிரான்சும் இருப்பதைக் காண்கிறோம். அந்த நாடுகள் எல்லாம், இன்று குடியரசின் எழில் மிகுந்த பலன்களைத் துய்ப்பது போன்றே துவக்க காலத்திலும் துய்த்துக் கொண்டிருக்கவில்லை.

குறைகள் பல நிரம்பிய நிலையில் தான் குடியரசு நிறுவப்பட்டது, அங்கெல்லாம்!

அரசனின் அதிகாரங்களுக்கு எல்லையிட்டு, மிகுதியாயிருந்த அதிகாரங்களைப் பணம் படைத்த சில பிரபுக்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள் மக்கள்!

பிறகு அந்தச் சீமான்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களையும் மெல்ல மெல்ல—படிப்படியாகப் பறித்து தங்களிடத்திலேயே வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

அரசர்களின் அதிகாரம் குருமார்கள் கைக்கு மாறி, பின் போர்க் காலத்தில் அரசனுக்கு உதவுகிற பிரபுக்கள்—சீமான்கள் ஆகியோருக்கும் கொஞ்சம் பகிர்ந்தளிக்கப்பட்டு, பின்னர் மக்கள்—அவர்களது சாமர்த்தியத்தினல், வீரத்தினல், தியாகத்தினல், அதிகாரங்கள் முழுவதையும் தங்களுக்கே பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

பின்னர் குறைகள் நீங்கிக் குடியரசைப் பொலிவுறச் செய்திருக்கின்றனர்; நாளொரு

ஈ. வெ. கி. சம்பத்

மேனியும் பொழுதொரு வண்ணமுமாக 'குடியரசு' வளர்க்கப்பட்டிருக்கிறது.

இதுவரை உள்ள வரலாறு, குடியரசுதான் சிறந்ததோர் அரசு முறை என்பதை நமக்குச் சொல்லி யிருக்கிறதே தவிர, 'குடியரசு முறை வேண்டாதது' என்று நமது நம்பிக்கையைத் தளர்த்துகிற கூற்றுகளைத் தந்தது இல்லை.

ஆனால், குடியரசு முறை குறைபாடுகளைக் கொண்டது என்பதை ஒப்புகிற தைரியம்—துணிச்சல் வேண்டும்: அந்தத் துணிச்சல்தான் குடியரசின் உயிர்—அஸ்திவாரமாகும்.

அதுமட்டுமல்ல; குடியரசு முறை குறைபாடு உடையது என்பதை நாம் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். 'நாம் குடியரசுவாதிகள்–தவறுகள் இழைக்கக் கூடும்; தவறுகள் நிகழ்ந்து விட்டால் அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும்.' என்ற எண்ணங் கொண்டவர்களாக இருக்க வேண்டும். 'நாம் தவறே செய்யமாட்டோம்' என்று எண்ணிக்கொள்ளக் கூடாது. 'தவறு செய்வோம்—செய்யக்கூடும்' என்ற அச்சத்துடனேயே காரியங்களைச் செய்யவேண்டும். அத்தகு எண்ணமிருப்பதுதான் பெருமை—மக்களுக்கு நன்மை தரவல்லது!

அத்தகைய எண்ணமூறும் உள்ளத்தில்தான் குடியரசுத் தேவதை குடியேற முடியும்—கோவில் கொள்ள முடியும்!

'குடியரசு ஆட்சியில், ஆளுவோர், தவறு நிரம்பிய — மக்களுக்குப் பகையான சட்டத்தைச் சில நேரங்களில் நிறைவேற்றி விடுகிறார்களே!'-என்று கூறுவோர் உண்டு. உண்மைதான்; ஆனால், அதுபோன்று நிறைவேற்றப்படும் சட்டங்களை மாற்றுவதற்கும் ஒழிப்பதற்கும் குடியரசு ஆட்சியில் வழிகள் உண்டு.

குடியரசு ஆட்சியில் எண்ணுவற்கும், எண்ணுவதைச் சொல்லாலும் எழுத்தாலும் எடுத்துச் சொல்லுவதற்கும், அந்த எண்ண ஈடேற்றத்திற்காகப் போராடுவதற்கும் உரிமைகள் மக்களுக்குத் தரப்படுதல் வேண்டும்; குடியரசு ஆட்சியில் இந்த உரிமைகள் தரப்படுகின்றன : அவ்வாறு தரப்படாவிட்டால், குடியரசு என்பது வெறும் செத்துப் போன பிணம்தான்!

'உங்களை உங்களுக்காக ஆளுகிறோம்' — என்று மக்களிடம் அனுமதி கேட்கிறார்கள். பெரும்பான்மை பலம் கிடைப்பதின் மூலம் மக்களிடம் கேட்டுப் பெற்ற அனுமதிப்படி ஆளுகிறார்கள்; அப்படி ஆளும்போது பெரும்பான்மை பலத்தைக் கொண்டு கோளாறுகள் மிகுந்த சட்டம் ஒன்றை நிறைவேற்றி விடுகிறார்கள்.

உடனே மக்கள் கூக்குரல் விடுகிறார்கள்—கூக்குரல் என்பது ஆளும் வர்க்கத்தினர் உபயோகிக்கும் வார்த்தை! மக்கள் கருத்துப்படி 'சட்டம் குறித்து மக்கள் விவாதிக்கிறார்கள்'—

என்பதாகும்! 'ஆட்சியின் சட்டம் இன்னின்ன காரணங்களால் இன்னின்ன இடத்தில் குறைகளும், கோளாறுகளும் மலிந்தது: இது மக்கள் வாழ்வையே பறிக்கக்கூடியது: எதிர்காலச் சந்ததியை இருளில் மூழ்க வைப்பது'—என்று பிட்டுப் பிட்டுக் காட்டுகிறார்கள்—மக்கள் பிரதிநிதிகளில் சிலர்!

ஆளுபவர்கள், 'கூக்குரல்' என்று கூறிவிட்டு சில நாட்களுக்குத்தான் வாளாவிருக்க முடியும். பின்னர் பதில் சொல்ல முற்படுகிறார்கள்: கிளப்பப்பட்ட வாதங்களுக்கு எதிர்வாதங்களை எடுத்துரைக்கிறார்கள்: இரு சாராருடைய வாதங்களையும் கேட்டுக் கொண்டிருந்து விட்டு மக்கள் முடிவு கூறுகிறார்கள் — ஆளுபவர்கள் இழைக்கிற அநீதிகளை, குறைகளைக் களைந்து கொள்ள மறு அமைப்பு ஒன்றை மக்கள் நிறுவிக் கொள்ளுகிறார்கள்.

ஆளுபவர் இழைக்கிற அநீதிகளை—தறைகளைக் களைந்து கொள்ள மறு அமைப்பு ஒன்றை மக்கள் நிறுவிக் கொள்ளும் வாய்ப்பு குடியரசு முறையில் உண்டு.

ஜெர்மனியில் இட்லரும், இத்தாலியில் முசோலினியும் இழைத்த பெரும் தவறுகளையும் கொடுமைகளையும் அந்த நாட்டு மக்கள் திருத்த முடியாமல் தவித்தார்கள். ஏனெனில், அந்தச் சர்வாதிகார முறைப்படி, தனி மனிதன் ஒருவனது திறமையை நம்பி அமைக்கப்படுகிற ஆட்சி என்பதால், அந்த மனிதன் தவறே இழைக்கமாட்டான் என்றும் மக்கள் நம்பச் செய்யப்பட்டதுதான்; மேலும் சர்வாதிகாரிகள் இழைக்கிற தவறுகளைக் கண்டிக்கிற உரிமையையும் மக்கள் இழந்து விடுகிறார்கள்.

ஸ்டாலின் மிகப் பெரிய சர்வாதிகாரியாக விளங்கினார்

நீதிமானின் 'எடை'!

ஒரு ஊரில் ஒரு புகழ் பெற்ற விறகு வியாபாரி இருந்தார். எப்போதுமே அவர் பலரை முன்னிலையில் வைத்துக் கொண்டு, ஒரு முறைக்கு இரு முறையாக விறகை தராசில் வைத்து நிறுத்துக் கொடுப்பது வழக்கம். ஊரில் உள்ளவர்கள் அனைவரும் அவரே நீதிமான்—எனப் போற்றினர்.

அவருடைய கடைக்குப் பக்கத்திலே ஒரு டாக்டர் இருந்தார்.

ஒரு நாள் அவர், அன்று பிறந்த குழந்தையை நிறுத்து எடை பார்ப்பதற்காக விறகுக் கடைக்காரரின் தராசை வாங்கி உபயோகித்தார்.

கடைசியில் பார்த்தால் அந்த கைக் குழந்தை விறகு வியாபாரியின் தராசுக்கு இரண்டு மனு எடை இருந்தது.

என்று இன்று எடுத்துரைக் கிறார்கள்; அவர் எத்தனையோ மகத்தான தவறுகளை இழைத்தார் என்று அடுக்கிக் காட்டுகிறார்கள்.

இந்தத் தவறுகளை, ஏன் முன்பே குருஷ்சேவ் போன்றோர் ஸ்டாலின் உயிரோடிருந்த நாட்களிலேயே எடுத்துரைத்துக் கண்டிக்கவில்லை—என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி என்ற முறையில்—சமீப காலத்தில் வாழ்ந்த மிகப் பெரிய சர்வாதிகாரி என்ற நிலையில் தனக்குத் தோன்றியபடி எல்லாம் சென்றார்; தவறுகள் இழைத்தார். ஆனால் அதை குருஷ்சேவ் போன்றோர் அப்போதே கண்டிக்க முடியாமற் போய்விட்டது. அது அந்த அரசுமுறையின் கோளாறினால்தான்!

'ஏன் கண்டிக்கவில்லை?' என்று குருஷ்சேவையோ, 'ஏன் தவறு இழைத்தார்?' என்று ஸ்டாலினையோ கேட்பதற்கில்லை. ஏனெனில், சர்வாதிகார அரசுமுறையில் அதுதான் நிகழும்—என்றுதான் அறிஞர் உலகம் கூறுகிறது: அதனால்தான் அறிஞர் உலகம், குடியரசு முறையே புனிதமான முறை என்று தழுவிக்கொண்டிருக்கிறது.

மற்றும், குடியரசு முறையில் அதிகாரம் அத்தனையும் ஓரிடத்தில் குவிந்து கிடக்கக்கூடாது—குவிந்து கிடக்க முடியாது—ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத பல இடங்களுக்கு அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கும்; அப்படியிருந்தால் தான், குடியரசு முறை உயிரோடு இருக்கிறது என்று மட்டுமல்ல ஆரோக்கியமாகவும் இருக்கிறது என்று பொருள் படும்.

குடியரசுத் தலைவர் ஒருவரை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர்; அவரைக் கட்டுப்படுத்த 'செனட் சபை' ஒன்று இருக்கிறது; கீழ்ச்சபை ஒன்று உள்ளது; இந்தச் சபைகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை அரசியல் சட்டம் வகுத்துக் கூறுகிறது. இந்த அரசியல் சட்டத்திற்கு முரணான வகையில் ஆட்சியாளர் நடந்துகொள்ளாமல் பார்த்துக்கொள்ள முழு சுதந்திரம் படைத்த உயர் நீதி மன்றம் இருக்கிறது. இப்படி அதிகாரங்களை வைத்திருப்போர் ஒருவருக்கொருவர் கட்டுப்படுத்திக்கொண்டு—மட்டுப்படுத்திக்கொண்டு அமெரிக்கக் குடியரசு முறை நடைபெற்று வருகிறது.

இன்று உலகத்திற்கு வந்துள்ள பேராபத்து என்னவென்றால், எதை வேண்டுமானாலும், தங்களிஷ்டப்படி 'குடியரசு' என்று பிரகடனப்படுத்திக் கொள்கிறார்களே, அதுதான்!

மற்றும் சிலர் குடியரசு முறையின் பெயரால் ஆட்சிக்கு வந்தவர்கள்—நாட்டில் அமைதி நிலவ வேண்டும்—சுடுகாட்டு அமைதி வேண்டும் என்று கூறுவதையும் காண்கிறோம்.

குடியரசு முறை நோயற்று வாழ்வதற்கு இந்தக் கூற்று சரியானதாக இருக்க முடியாது.

நாட்டில் ஆட்சியாளர்கள் செய்யக்கூடிய தவறுகளை—



"அடிப்பாவி, எல்லா 'பலூன்'களையும் அவன் கையில் கொடுத்து விடாதேன்னு அப்போதே சொன்னேனேடி...!"

அல்லது மக்கள் விரும்பாத காரியங்களை மக்கள் சிறு சிறு கிளர்ச்சிகள் மூலம் திருத்த வேண்டும்: அதுதான், குடியரசு முறைக்கு ஏற்படும் நோய்களைத் தீர்க்கும் 'மருந்து' என்று கூறுகிறான் ஜெபர்சன்.

குடியரசு முறை என்ற இயந்திரத்தில் விழக்கூடிய சிறு தூசிகளைக் காரணமாகக் காட்டி, இயந்திரத்தையே எள்ளி நகையாடக் கூடாது; ஆனால், குடியரசு முறையில் உள்ள சிற்சில பலவீனங்களைக் காட்டி, சிலர் குடியரசு முறையையே எள்ளி நகையாடுகிறார்கள்.

சட்ட சபையில் தூங்குகிறார்கள் சிலர்; 'இப்படித் தூங்கலாமா?' என்று வேறொரு உறுப்பினர் கேள்வி எழுப்புகிறார்; 'இதுதான் குடியரசா?' என்று கேட்கின்றனர் சிலர்.

> சட்டசபையில் போய் தூங்குகிற பொறுப்பற்றவர்களை சட்ட சபைக்கு அனுப்பாமலிருக்கவும், பொறுப்புள்ளவர்களை அனுப்பவுமான முயற்சியில் ஈடுபட வேண்டுமே தவிர, சட்டசபை என்ற அமைப்பே கூடாது—என்று கூறுவது நியாயமாகாது.

வேறு சிலர் 'குடியரசு முறையினால் மக்களுக்கு நன்மை கிடைக்கத் தாமதமாகிறது; சர்வாதிகார முறையில் சர்வாதிகாரி, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்தால், நினைத்த மாத்திரத்திலேயே நன்மை செய்ய முடிகிறது — என்று கூறுகிறார்கள்.

ஆனால், நன்மை நாள்பட்டுக் கிடைத்தாலும் தீமைகள் சூழாமல் காத்துக்கொள்ளும் வாய்ப்பு குடியரசு முறையில் மட்டுமே உண்டு.

14-ம் லூயி காலத்தில் பிரான்சு நாட்டில் உப்புவரி விதிக்கப்படுகிறது: 'இந்த வரிதான் மிகக் கொடுமையானவரி' என்று மக்கள் கருதுகிறார்கள். 'இந்த வரியை விதிக்கக் கூடாது' எனக் கோருவதற்காக மக்கள் அரசனைப் பார்க்க வருகின்றனர். விருந்துண்டு கொண்டிருந்த, இளம் பிராயத்திலிருந்த 14-ம் லூயி, 'மக்கள் ஏன் கூக்குரலிடுகிறார்கள்?' என்பதைத் தெரிந்து கொண்டதும், 'உப்பு வரி அவர்களுக்குப் பிடிக்காவிட்டால் அந்த வரியை இரட்டிப்பாக்கு' என்று கூறினும்! இது, ஒரு சர்வாதிகாரியின்—ஒரு மன்னனின் மனப்போக்கு எப்படிப்பட்டதாயிருக்கும் என்பதற்கான எடுத்துக் காட்டாகும். குடியரசாயிருந்தால், இப்படிப்பட்ட ஆணவக்காரர்கள் அரசேற முடியாது: ஏறினும், அவர்கள் அரசு நீடிக்காது—நிலைக்காது!

மேலை நாடுகளில், சிறந்த குடியரசுகளாக—மெய்யான ஜனநாயகத்தின் திரு உருக்களாக அமைந்துள்ள நாடுகளின் வரலாறுகள், அனுபவங்கள் நமக்கு இதைத்தான் சொல்லுகின்றன: அத்துடன் நல்ல முதலீடுகளாகவும் விளங்குகின்றன! ●

மாவீரன் அலெக்சாண்டர்

உலகம் காட்டியுள்ள சரித்திரச் சுவட்டிலே, அழித்து விட முடியாதபடி தங்கள் இரத்தத்தால் பெயரைப் பொறித்துக் கொண்ட மாவீரர்கள் பலப் பலர். அவர்களிலே என்றும் மறக்க முடியாத நிகழ்ச்சிகளை நடத்தி, நம் நெஞ்சத்திலே நீங்காது ஒளி விட்டுப் பிரகாசிக்கும் மாவீரர்கள், மாநிலம் காணாத தீரர்கள், இரண களச் சூரர்கள் ஜூலியஸ் சீசர், அலெக்சாண்டர், நெப்போலியன் போனபார்ட்டி, செங்கிஸ்கான்—முதலியோர்!

இவர்களில் அலெக்சாண்டர் மாசிடோனியா மாநிலத்துக் களித்த மாவீரன். பதினெட்டு வயதிலேயே அவன் எட்டிப் பிடித்து விட்டான் கிட்டாத புகழை! ஆம், தன் தந்தையின் உயிரைத் தறுக்கர்களிடமிருந்து காப்பாற்றியதன் மூலம் புகழ் பெற்ற வீரனானான். முப்பதாண்டு முழுவதும் முடிவதற்குள் முழு மூச்சோடு பல நாடுகளைப் பிடித்தான். அதன் மூலம் சரிதத்திலே மறக்க முடியாத இடம் பெற்றான்.

அவனுடைய வாழ்க்கையை சுருக்கமாக இப்படி எழுதலாம்.

356 கி. மு.—மாசிடோனியா மன்னன் இரண்டாம் பிலிப்புக்கும், எவிரஸ் இராணி ஒலிம்பியாசுக்கும் பெல்லா எனுமிடத்திலே அலெக்சாண்டர் பிறந்தான்.

343. கி. மு.—அரிஸ்டாடிலிடம் மிசா எனுமிடத்திலே கல்வி கற்றான்.

340 கி. மு.—தந்தையில்லா காரணத்தால் மாசிடோனியா அதிபதியானான். பால்கன் குடிமக்கள்மீது போர் தொடுத்தான்.

338. கி. மு.—பதினெட்டு வயதில் இடதுசாரி படையை செலுத்தி திபான்ஸ் என்பவர்கள்மீது போர் தொடுத்து வெற்றி பெற்றான்.

336. கி. மு.—அவன் தந்தை கொல்லப்பட்டதும், இருபது வயதில் மாசிடோனியாவின் மன்னனானான்.

335. கி. மு.—மின்னல் வேகத்தில் பலப்பல வெற்றிகளை யடைகிறான்.

334. கி. மு.—ஆசியாவிற்குள் தன் படையுடன் நுழைகிறான். கிரானிகால் எனும் போரில் வெற்றி யடைகிறான்.

333. கி. மு.—இஸ்ஸஸ் எனும் போரிலே பெர்சிய நாட்டு மன்னனை முறியடிக்கிறான்.

333—331. கி. மு.—ஏசியா மைனரில் தன் வெற்றியைத் திரட்டுகிறான். எகிப்தின் பெரோவா என்று அழைக்கப்படுகிறான். டையர் எனும் இடம் இவன் வசமாகிறது.

—இரா. மதனகோபால், பி. காம.,

331. கி. மு.—குகாமாலா எனும் போரிலே டாரியஸ் எனும் பெர்சிய மன்னனை முழுவதும் வெற்றி கொள்கிருன். மன்னர்களுக் கெல்லாம் மன்னனுகிருன்.

329—328. கி. மு.—மத்திய ஆசியாவினுள் நுழைகிருன்.

327. கி. மு.—பெக்டீரியன் இளவரசி ரொக்சேனே மணக்கிருன்.

327—326. கி. மு.—இந்தியா மீது படையெடுப்பு.

ஜுன் 13, 323. கி. மு.—பெபிலான் எனுமிடத்திலே தனது முப்பத்தி இரண்டு ஆண்டு, எட்டு மாதம்—முடிய இறக்கிருன்.

இப்படித்தான் மாவீரன் அலெக்சாண்டரின் வாழ்க்கை ஏட்டை சுருக்க முடியும்.

அலெக்சாண்டரைப் பற்றியும், அவன் தாயைப் பற்றியும் சில வதந்திகள் வழங்குகின்றன.

ஒரு முறை பிலிப் தன் மனைவியின் படுக்கை யறையின் கதவிலிருந்த ஓட்டையின் வழியாகப் பார்த்தபோது பெரியதொரு பாம்பொன்றை அணைத்தவாறு அவள் இன்பம் சுவைத்துக் கொண்டிருந்தாளாம். எனவே அலெக்சாண்டர் பிலிப்பின் மகன் அல்ல என்றும் கூறுவர். ஏதேது, நம் நாட்டு புராணக் குப்பையையும் மிஞ்சுகிறதே என்று அஞ்சாதீர்கள். இது வெறும் கட்டுக்கதை; மூளையற்றோர் இட்டுக் கட்டியது. ஆனல், அவன் தாய் ஒலிம்பியாஸ் மிகவும் கொடியவள் என்பது மட்டும் உண்மை.

மிக்க வலிமையான உடற்கட்டு கொண்ட அலெக்சாண்டர் குள்ளமானவன்தான். அடிக்கடி தன் தலையை இடது பக்கம் சாய்த்துக் கொள்வானும். அவன் கண்கள் மிகக் கூர்மை மிக்கனவாம். இட்லருக்கும், நெப்போலியனுக்கும் இருந்த கூர்மையான கண்கள் தான் அலெக்சாண்டருக்கும் இருந்தன. கோபம் கொப்பளித்தால் கொந்தளிக்கும் எரிமலைதானும்.

பல போர்களிலே ஏற்பட்ட காயங்களும், மனப் புண்ணும் பிற் காலத்தில் அவன் பொறுமையை இழக்கச் செய்து விட்டன. அதற்காகவே அவன் மது அருந்த ஆரம்பித்தான்.

இருபதாவது வயதிலே தன் தந்தையின் இராஜ்யத்திற்கு அதிபதியானுன். அவனுடைய படை மிகவும் பெயரும், புகழும் வாய்ந்தது.

இரத்தத் தடாகத்திலே இன்பத்தைக் கண்ட இளைஞன் இவன். போர்க்களத்திலே வீசும் பிண வாடைதான் இவனுக்கு போகக் களத்திலே வீசும் எழில் மிக்க மணம்.

இவன் கவனத்தை கன்னியர் எவரும் அவ்வளவு கவர்ந்ததில்லை.

தன் படையை நடத்திச் செல்வதிலே காணும் இன்பம், துடியிடை துவள, கடைவிழி காட்டி, காதற்சுவை யூட்டும் கன்னியரிடம் காணமாட்டான்.

வையத்திலே வாளெடுத்து போரிட்டு வாகை சூடிய

வெற்றி வீரர்களின் பட்டயலில் தன் பெயரை எவரும் மறக்காத வகையில் பொறித்துக் கொண்டான்.

அவனை மாவீரன் அலெக்சாண்டர் என்றுதான் அழைப்பார்கள் சரிதத்திலே. அவனைப் பற்றி எழுதாத சரித்திர ஆசிரியர்கள் இல்லை.

இத்தகைய மாவீரனுக்குத்தான் சில பல மூடநம்பிக்கைகளுமிருந்தனவாம்.

ஏன், விஞ்ஞானம் இவ்வளவு தூரம் வளர்ந்துள்ள இந் நாட்களிலேயே நம்மவர்களிடம், படித்தவர்களிடமும்—பஞ்சாங்கம் பார்க்கும்—பார்ப்பானை அழைக்கும்—இதுபோன்ற அறிவற்ற மூட நம்பிக்கைகளும், முட்டாள்தனமான பழக்க வழக்கங்களுமிருக்கையில் அந்நாளைய அலெக்சாண்டரிடம் இருந்ததில் வியப்பேதுமில்லை.

ஆனால், இன்னும் அவனுக்கிருந்த மூட நம்பிக்கைகளைப் பற்றிய சேதி சரித்திர ஆசிரியர்களுக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது.

பலப்பல சாம்ராஜ்யங்களைக் கைப்பற்றியபோதும் நாடாளும் ஆசை அவனுக்கு அவ்வளவு இல்லை. புகழ் பெற வேண்டுமென்பதே அவன் முக்கிய குறிக்கோள்.

"அவனுடைய உயிரையும், ராஜ்யத்தையும்விட புகழையே மிகவும் விரும்பினான். புகழுக்காக அவைகளை இழக்கவும் துணிவான்." என்று புளூடார்க் என்பவன் எழுதுகிறான்.

படை செலுத்துவதில் மிக்க திறமையுள்ளவன். ஒருமுறை மூன்று இரவு, மூன்று பகலில் தன் படையை, 135 மைல் செலுத்திக்கொண்டுகடந்தான்.

மற்றோர் முறை மேக்ரான் எனும் பாலை வெளியிலே படை செலுத்திக் கொண்டு வந்தானும். எல்லோரும் தாகத்தால் மிக்க துயரடைந்தனராம். அலெக்சாண்டருக்கு மட்டும் ஒரு தலை முடியில் நீர் கொடுத்தனராம். ஆனால் அவன் அதை அருந்தாமல் கீழே ஊற்றிவிட்டு, "என் படையினர் தாகத்தால் வருந்துகையில், நான் மட்டும் நீர் அருந்துவது அழகல்ல!" என்று கூறினனும்.

இத்தகைய வீரன்தான் அலெக்சாண்டர். அவன் இந்தியா வந்து திரும்பிய கதை யாவருமறிந்ததே! ஜூன் 13.323 கி. மு. வில், போர் புரிந்து பாரெல்லாம் கலக்கிய வீரன் கண் மூடிவிட்டான். உலகிலே எப்போதோஒருமுறைபிறக்கும் மாவீரன் மறைந்தான்! ●

வித்தியாசம்!

ஒரு துடுக்குத்தனமான குழந்தை அப்பாவிடம் சென்றது. சந்தேக விளக்கம் பெறுவதற்காக!

மகன் : அப்பா! அன்பிற்கும் காதலுக்கும் வித்தியாசம் உண்டா?

அப்பா : நிச்சயமாக உண்டு, மகனே! பகலுக்கும், இரவுக்கும் உள்ளதைப் போல் அவைகளுக்கும் வித்தியாசம் உண்டு!

இலக்கியப் படைப்பு

உள்ளத்திலே ஊறிவரும் எண்ணங்களை சொல்லடுக்குகளாய் அமைத்து எழுதப் பெறும் கவிதைத் தொகுதிகளே இலக்கியங்களாய்த் திகழ்கின்றன. உயர்ந்த எண்ணங்களை உருவில் காண முற்படும்போது, நல்ல சொற்கள் செறிந்த, சிறந்த இலக்கியங்களை எழுத முடிகிறது. அத்தகைய இலக்கியங்கள் நாட்டில் வாழும் அறிஞர்களால் போற்றவும் புகழவும் படுகிறது. விருப்பு, வெறுப்பு இல்லாத புகழுரைக்கு இலக்காய் அமைகின்ற இலக்கியங்களைக் கொண்ட நாடே நாகரிக வாழ்வைப் பெற்றது என்றல் பொருத்தமானதாம்.

அறிஞன் ஒருவன், எண்ணும் எண்ணங்கள், எழுதும் எழுத்துக்கள் தனி யொருவனுக்கென்ரூே, தனி ஒரு இனத்துக்கு என்ரூே இல்லாமல் கூட்டுத் தொகையாக—அதாவது—மக்களினத்திற்கே அமைந்த பொதுச் சொத்து என்றே கொள்ளலாம். அன்பு, அருள், நீதி, நேர்மை இன்னேரன்ன நற் பண்புகள் மனித இனத்திற்கே ஒத்த ஒழுக்க நெறிகள் அல்லவா?

உயர்ந்த சிந்தனையாளன் நல்லவைகளை நினைந்து, நினைந்தவைகளை உணர்ந்து, உணர்ந்தவைகளை ஒழுங்குபடுத்தி ஒரு இலக்கியமாக்கி விடுகிருன். உணர்வில் தவறு இருந்தால் நூலில் குறை ஏற்படும். எழுப்பப்படுகின்ற ஒலிகள் எல்லாம் எழுத்தாக அமையாதது போலவே; எண்ணப்படுகின்ற எண்ணங்கள் எல்லாம் இலக்கியங்களாக உருப்பெறுவது இல்லை. ஆதலின் நாட்டைப் பற்றியும், மொழியைப் பற்றியும், பண்பாடுகளைப் பற்றியும் சொல்லப்பெறும் கருத்துரைகள் அழியாத இலக்கியங்களாய் அமைந்து இயங்குகின்றன. இவையே யன்றிப் பிறவற்றைப் பற்றிக் கூறும் கருத்துரைகள் காலப் போக்கில் மாறி மறைந்து விடுகின்றன. மேற் காட்டிய விதிப்படிக் காணின் மொழியும், மொழி வழங்கும் நிலமும், நிலம் வாழும் மக்களின் பண்பாடும் செறிய விளக்கப் பெறும் இனிய இலக்கியங்களே ஒரு நாட்டின் கருவூலம் என்று கூறிவிடலாம்.

நாமெல்லாம் தமிழர் என்பதனையும், தமிழே நமக்குத் தாய் மொழி என்பதனையும், நம்மவர்க்குரிய பண்பாடுகள் இன்னின்ன என்பதனையும் நம் முன்னேர் சொன்ன இலக்கியங்கள் இயம்புகின்றன. நாட்டின் எல்லை, அமைப்பு; மொழியின் நுண்மை, செறிவு; மக்களின் மேம்பாடான பண்பாடுகள் —இவைகளே இலக்கியங்கள் என்ருல், நம் தமிழில் குறளும், சிலம்பும், அகமும், புறமும்

என்றிவை போல் அமைந்தவையே அவைகள் எனலாம். குறள் கொட்டிய நீதிகள் எத்தனை? சிலம்பில் காணும் செந்தமிழ்நாடு சீர் குன்றுநாடு அன்றோ? இங்கே, எண்ணம் எப்படி இலக்கியமாகிறது என்பதை இலக்கியப் பாட்டு ஒன்றுடன் பொருத்திப் பார்க்கின் புலப்படும் என்று எண்ணுகிறேன்.

இரண்டாயிர மாண்டுகட்கு முன்பு தமிழ் மண்ணில் பிறந்த ஒருவன், இவ்வுலகம் அழியாது நிலைத்து வாழக் காரணம் என்ன என்று எண்ணத் தொடங்கினான். அவன் மக்களாய்ப் பிறந்தவர்களில் ஒருவனாக மட்டும் விளங்கவில்லை. மக்களைக் காக்கும் மன்னவனாயும் விளங்கியவன். அவன் உள்ளத்தில் பகையில்லை. எண்ணத்தில் அழுக்கு இல்லை. ஆனால், அவன் வாளில் வலுவிருந்தது. தோளில் வீரம் செறிந்திருந்தது. வாழப் பிறந்த மக்களைக் கொன்று குவிப்பது தவறு என்ற முடிவுக்கு வந்தவனாக இருக்க வேண்டும் அவன். எனவே அழியா வாழ்வளிக்கும் அமிழ்தம் பெறினும், அதனைத் தனித்து உண்ணாது தன்னை ஒத்த அனைவருக்கும் அளித்து வாழ்தலே அருங்குணம் என்று அறிந்து உரைக்க முற்பட்டவன் அவன். ஈகையின் பயன் உணர்ந்து சொன்ன புவி மன்னன் அவன்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதிய மில்லை உயிர்க்கு"

—என்ற வள்ளுவனின் வாக்கு அவனுக்கு இன்ப விருந்தளித்திருக்கும். இத்தகைய இன்பம் தரும் ஈதலை, விருந்தோம்பலின் வழிவைத்து தனித்து உண்ணாது கொடுத்து உண்டு மகிழ்க என்று கூறிமகிழ்ந்தான். சான்றவர்க்குச் சினம் சால்பு அன்று—என்று எண்ணுகிறான். மடியும், துயிலும் மனிதனின் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்கள்—என்று எண்ணுகிறான். அஞ்சுவதற்கு அஞ்சி வாழ்தல் இன்றியமையாப்பண்பு—என்று எண்ணுகிறான். புகழுடன் வாழ வேண்டுமென்றும், குவலயம் ஆளும் தலைமை பழியொடுகூடி வருமெனின் கொள்ளல் கூடாது —என்றும் எண்ணுகிறான். தனக்கென வாழாது, பிறர்க்கெனவே வாழ வேண்டுமென்று எண்ணுகிறான். இறுதியாக இத்தனை எண்ணங்களையும் ஒருங்கே கொண்ட சான்றவர்கள் வாழ்கிறார்கள் என்ற முடிவுக்கும் வருகிறான். இதனாலன்றோ உலகம் நிலை பெறுகிறது என்று முடிவு கண்டு மகிழ்கிறான். முடிவைப் பாட்டாக்கிக் காட்டுகிறான். இந்த நல்ல கருத்துக்களை, அந்த ஊராண்ட மன்னவனின் உள்ளத்தில் ஊறிவந்த எண்ணக் குவியல்களைப் புறப்பாட்டில் படித்து மகிழ்கிறோம்.

உண்டால் அம்ம! இவ்வுலகம்,
இந்திரர்

வித்துவான் கி. சண்முகம்

அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத்
தமியர்உண்டலும் இலரே;
முனிவிலர்
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ
தஞ்சிப்
புகழெனின் உயிருங்
கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங்
கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர்
உண்மை யானே.

மேற்காட்டிய பாடல் நமக்குப் பல உண்மைகளை உணர்த்துகிறது என்றே கூறலாம். தனது எண்ணங்களைக் கொட்டிய அந்த இளம்பெருவழுதி தமிழர் குலத் தலைவன் ஆன்ற விந்தடங்கிய சான்றோன். அவன் பாட்டால் தமிழினமே அந்த நல்லெண்ண உணர்வில் ஊறித் திளைத்திருந்தது என்பதைக் கண்டு மகிழ்கிறோம். ஈந்து உவந்து வாழ்தலையே வாழ்வாக்கிக் கொண்ட தமிழ் நெஞ்சத்தில் முளைத்தெழுந்த அறவுரைகள். அவரிவர் என்னாது எவர்க்கும் பொதுவாதல் ஒரு தலை. இவ்வளவு ஏன்? தமிழ் எல்லையைத் தாண்டிய நிலப் பகுதியில் வாழும் மக்கள் ஆடும் பேயாட்டங்களைக் காணும்போதெல்லாம், தமிழனின் அமைதி வாழ்வின் பெருமை எவ்வளவு உயர்ந்தது என்பதை உறுதிப் படுத்துகிறது. மருந்தேயாயினும் விருந்தோடு உண்ணுமளவுக்கு மன வளர்ச்சியின் உச்சியை எட்டிவிட்ட தமிழனுக்கு இனி ஒரு தனியுபதேசம் தேவையில்லை. 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற நக்கீரன் நல்லுரைக்குப் பின்னுமா தேவைப்படும்? இன்னும் எத்துணை ஆண்டுகள் கடந்தாலும் புறப்பாட்டில் கண்ட உண்மைகளே மனித வாழ்விற்கு வழி காட்டியாக விளங்கும். இந்த நல்ல வாழ்வியல் வித்துகளைத் தூவிய முதல் மனிதன் தமிழனே என்பதில் ஐயமில்லை! ●

பிரபல ஓவியர் கில்பர்ட் ஸ்டுவர்ட் என்பவர் தன்னை வைத்துத் தானே ஒரு ஓவியம் தீட்டினார்.

அப்போது ஒரு மங்கை அவரிடம் வந்து,

"நேற்று உங்கள் படத்தைப் பார்த்து நான் பிரமித்து விட்டேன். அசல் உங்களைப் போலவே இருப்பதைக் கண்டு வியந்து, அதற்கு ஒரு முத்தம்கூட கொடுத்து விட்டேன்!"

"அப்படியா?......அந்தப் படம் திருப்பி உங்களுக்கு முத்தம் கொடுத்ததா?"

"இல்லையே!"

"அவ்வாறானால் நிச்சயம் அது என் படமல்ல!"

தமிழ் நாட்டின் ஈடு இணையற்ற கவிஞன் பாரதிதாசன். அவருடைய ஒவ்வொரு கவிதையும் ஒரு தனி இலக்கியம்.

ஆங்கில இலக்கியத்தின் அடிப்படையாகக் கருதப்படுபவை மூன்று. ஒன்று, பைபில்; இரண்டாவது ஷேக்ஸ்பியரின் நாடகங்கள்; மூன்றுவது மில்டனின் காவியம். கவிதையைப் பொறுத்த மட்டில், பாரதியும் பாரதிதாசனும் மறுமலர்ச்சி இலக்கியத்தின் இரு கண்கள் என்று உறுதியாகச் சொல்லலாம்.

மது, மங்கை, கவிதை—இம் மூன்றும் மனித வாழ்வின் துயர் நீக்கும் மருந்துகள் என்ருன் பாரசீகக் கவிஞன் உமார்கயாம்! மதுவின் போதையும், மங்கை தரும் சுகமும் மாத்தமிழுக்கே ஈடில்லை யென்று, கவின் ஒழுகும் கவிதைகளால் உணர்த்தியவர் புரட்சிக் கவி.

இயற்கைக்கும், இதயத்தின் உணர்வுகளுக்கும் உயிர் கொடுக்கும் கவிஞர்கள் வளம் பெற்ற ஒவ்வொரு மொழியிலும் நிறைய உண்டு. ஆனால் கர்ப்பத்தடைப் பிரச்சாரத்தையே காவியமாக்கிய முதற் கவிஞன்—தமிழ்க் கவிஞன்—பாரதிதாசன்!

உள்ளே மனைவி பிரசவ வேதனைப் படுகின்ருள். கணவனே கவலையே உருவமாய் தெருத் திண்ணையில்-ஆவல் நெஞ்சத்தில் நிழலாட உட்கார்ந்திருக்கிருன். நேரமோ, அந்தி நேரம். வேலைக்காரி மெதுவாக வந்து 'பிரசவந்தான் ஆய்விட்டது' என்ருள். அவள் பேச்சுக்கு சாட்சியளித்தது, குழந்தையழும் இன்னெலி. பூமியில் வந்து விழுந்தவுடன் அந்தக் குழந்தை எழுப்பும் அழுகை ஒலிக்குத்தான் எவ்வளவு ஜீவ சக்தி! அதன் அழுகை சுற்றியிருப்போருக்கு மகிழ்ச்சி: அது அழாவிட்டாலோ, சுற்றியுள்ளோர் அழுவர்.

கணவன், இப்பொழுது தந்தையாகிவிட்டான். மகிழ்ச்சியை அவனே சொல்லுகிருன் :

உளக்கலசம் வழிந்துவரும்
சந்தோஷத்தாலே
உயிரெல்லாம் உடலெல்லாம்
நனைந்து விட்டேன்

மூன்றாண்டுகள் உருண்டன. மனைவி உணவை வெறுத்தாள். காலையில் களைப்பால் மயங்கினாள். பத்து மாதங்கள் சென்றன. முதலில் பெண் — இப்பொழுதோ — ஆண் ஆகவே அவனுக்கு ஒருவகையில் ஆறுதல். ஆனால்... ஆண்டுகள் ஓட, 'அங்கத்தினர்' பட்டியலும் நீண்டது.

கண்ணழகும் முகஅழகும்
கண்டு நாட்கள்
கழிக்கையிலே மற்றொன்றும்
பின் ஒன்றும் பெற்றாள்.

ஆண் திருமணமாகாத நிலையில், தனக்கெனவே சுயநலத்தோடு வாழ்கிறான். திருமணமாகி மனைவியோடு வாழத் தலைப்பட்ட பின், தன்னலம் துறந்து, தனக்காக மட்டுமின்றி, மனைவிக்காகவும் வாழ்கிறான். வாழ்க்கையில் தன்னலம் சற்று குறைந்து பிற நலமும் மெதுவாக அரும்புகிறது. கணவன் மனைவிக்காகவும், மனைவி கணவனுக்காகவும் வாழ ஆரம்பிக்கிறார்கள். குழந்தைகள் தோன்றிய பிறகோ கணவன் மனைவி இருவருமே, தங்களுக்கென வாழாமல், தம் மக்களுக்காக எதையுமே தியாகம் செய்யும் தியாக உணர்ச்சியைப் பெறுகின்றனர். கணவன் கூறுகிறான் :

எண்ணுமொரு நால்வரையும்
எண்ணி யுழைத்திட்டேன்
எழில் மனைவி தன்னுடலில்
முக்காலும் தேய்ந்தாள்!

ஆம். அழகுப் பதுமையாக இருந்த மனைவி நடமாடும் எலும்புக்கூடானாள். காரணம்:

உண்ணுவதை நானுண்ண
மனம் வருவதில்லை;
உண்மையிலே மனைவி
பிள்ளைகளைக் காத்தாள்.

இந்த நிலை ஏன் வந்தது? கேளுங்கள் அவனுடைய வேதனையை :

வரும்படியை நினைக்கையிலே
உள்ளமெலாம் நோகும்!
வாராத நினைவெல்லாம் வந்து
வந்து தோன்றும்!

வருவாயோ சொற்பம் : குழந்தைகளோ மிகுதி! விளைவு வேதனை! வேதனை வளர வளர விபரீத எண்ணங்கள் தோன்றுகின்றன. ஒரு முழக் கயிறு, பாழடைந்த கிணறு, விஷச்

சிறுவன்: என்னுடைய அப்பா என்னை நல்ல முறையில் வளர்ப்பதற்கு "சிறுவர்களை வளர்ப்பது எப்படி?" — என்று ஒரு பெரிய புத்தகம் வாங்கி வந்திருக்கிறார்.

சிறுமி: அப்படியா? புத்தகத்தினால் பலன் ஏதாவது உண்டா?

சிறுவன்: ஓ, நிச்சயமாக! நான் ஏதாவது தப்பு செய்தால், அப்பா இப்போது என்னை அந்தப் புத்தகத்தினால்தான் அடிக்கிறார்!

சிசா, இரயில் தண்டவாளங்கள்......பயங்கரமான கற்பனை! அடக் கஷ்ட காலமே: முன்னோர்களாவது முன்யோசனையோடு ஏதாவது சேர்த்து வைத்தார்களா?—பசித்தவன் பழைய கணக்குப் பார்த்தான்.

துரும்பேனும் என்னிடத்தில் சொத்தில்லை! நோயால் தொடர்பாகப் பத்துநாள் படுத்துவிட்டால் தொல்லை!

இப்படி வருந்துகின்றவன், பிள்ளைகளைப் பெற்ற

"தெருவினிலே பனி என்றாள்!"

'பஸ்' ஓடிக்கொண்டிருந்தது. அதில் ஒருவர் ஆயிர ரூபாயை இழந்து தவித்துக் கொண்டிருந்தார்.

உடனே கண்டக்டர் முன் வந்து: இப்படிக் கூறினார். "யாராவது ஆயிர ரூபாய் கொண்ட 'மணிப்பர்சை' எடுத்திருந்தால் திருப்பிக் கொடுத்து விடுங்கள். அப்படிக் கொடுத்தால் அவர்களுக்கு நூறுரூபாய் பரிசை நான் வாங்கித் தருகிறேன்!"

"பூ: நூறு ரூபாய்தானா? நான் இரு நூறுரூபாய் பரிசு தருகிறேன்; பணிப்பர்சை என்னிடம் தாருங்கள்"— அப்போது இப்படி ஒரு குரலும் பின் பக்கமிருந்து ஒலித்தது!

வன். ஏன் சிரமம் பாராது உழைத்துப் பொருளீட்டக் கூடாது என்று கேள்வி பிறக்குமல்லவா? அனுபவமற்றோரின் இக்கேள்விக்கு நாட்டின் நடை முறையைக் கணவன் எவ்வளவு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறான் பாருங்கள். அவனா பேசுகிறான்? அவன் வாயிலாகக் கவிஞரல்லவா பேசுகிறார்!

அரும்பாடு மிகப்படவும்
ஆட்சேபமில்லை:
ஆர்தருவார் இந்நாளில்
அத்தனைக்கும் கூலி?

உழைப்பிற் கேற்ற ஊதியமில்லை; கவிஞர் குமுறுகிறார். குமுறல், உணர்ச்சி மிக்க கவிதை வரிகளாக மலர்ந்து விட்டன.

கணவன் — தந்தை — கேட்கிறான். ஊதியமில்லாமல் உழைத்து ஓடாக,

இரும்பா நான்? செத்து
விட்டால் என் பிள்ளைகட்கே
என்ன கதி? ஏன் பெற்றேன்?

காப்பாற்ற வழியில்லாத எனக்கு பிள்ளைகளை உலகிற்குக் கொண்டுவர என்ன உரிமையிருக்கிறது? வேதனை மிக்க விளக்கம் காண முடியாத பிரச்சினை. இல்லற இன்பத்தின் அறுவடையாக மலரும் குழந்தைகளை, வேதனைச் சின்னங்களாக எண்ணிடும் மனநிலைக் கல்லவா வறுமை அவனைக் கொண்டு சேர்த்து விட்டது!

எண்ணங்கள் சோகச் சங்கிலி போல் தொடர்ந்தன. முடிவுக்கு வந்துவிட்டான். மனைவியின் அருகிலேயே மயங்கிக் கிடப்பதுதானே தொல்லைகளுக் கெல்லாம் காரணம். இரவு மணி பத்தானவுடனே தெருத் திண்ணையில் படுக்கையோடு போய் விடுவான். இரவெல்லாம் மனையாளோடு இன்பம் துய்க்க வேண்டியவன், அதன் விளைவான குழந்தைகளை பாரமாக எண்ணி, இன்பத்தையே துறந்து, திண்ணையிலே ஏக்கத்தோடு கண்ணயர்வான். இந்நிலையில் ஒரு நாளில்.

ஒருதினத்தில் பத்துமணி
இரவினிலே வீட்டில்
உணவருந்திப் படுக்கையொடு
தலையணையும் தூக்கி
தெருத்திண்ணை மேல்
இட்டேன்!

நித்திரையும் போனேன்!

நித்திரையும் போய்விட்ட
நிலையில் ஒரு நிகழ்ச்சி

சிறுவரெல்லாம் அறைவீட்டில்
தூங்கியபின் என்றன்

அருமனைவி என்னிடத்தே
மெதுவாக வந்தாள்.

சிறுவரெல்லாம் நித்திரை போய்விட்டனர். அவர்களுக்காக உழைத்து அலுத்த அவனுக்கோ உறக்கம் வரவில்லை. அறிவு விளைவைக் காட்டிப் பயமுறுத்தியது. ஆனால் ஆசையோ...குழந்தைகளெல்லாம் உறங்கி விட்டார்களா— என்று ஒரு முறை பார்த்து விட்டு, மெதுவாகக் கணவனிடம் திண்ணைக்கு வந்தாள்.

'அயர்ந்தீரோ' என்றுரைத்
தாள்! மலர்க் கரத்தால்
தொட்டாள்!

அதோடு விட்டாளா?

'தெருவினிலே பனி' என்றாள்.

ஆமென்று சொன்னேன்.

விஷயம் விளங்க அவனுக்கு நேரமாகவில்லை. அவனென்ன? நமக்கு மட்டும் புரியாதா என்ன? கணவன் சொல்லுகிறான், கேளுங்கள்:

தெரிந்து கொண்டேன்
அவள் உள்ளம். வார்த்தை
யென்ன தேவை?

ஆனாலும், வறுமையால் வாடும் அவன் குழந்தைகள்— அவர்களுடைய எதிர் காலம்— அவன் கண்முன் தோன்றியது. அவளும் அது பற்றிச் சிந்திக்காமலில்லை. அவர்களுடைய கற்பனையில் ஒரு கனவு! விளக்கமில்லாமல் கவிதையின் வேகத்தை அப்படியேரசித்துப் பார்ப்போம்; இதோ அந்தக் கனவு:

கனல் புரளும் ஏழ்மையெனும்
பெருங்கடலில், அந்தோ!

கதியற்ற குழந்தைகளோர்
கோடானுகோடி

மனம் பதைக்கச் சாக்காட்டை
மருவுகின்ற நேரம்

வந்ததொரு பணம் என்ற
கொடிபறக்கும் கப்பல்;

இனத்தவரின் குழந்தைகளோ,
ஏ! என்று கொஞ்ச;

ஏறி வந்த சீமான்கள் சீ! என்று
போனார்.

மூவர் வேலை!

தொழிலாளி ஒருவர் முதலாளியின் அறைக்குச் சென்றார். "ஐயா! எனக்கு சம்பள உயர்வு வேண்டும். பத்து வருஷ காலமாக நான் இந்த தொழிற்சாலையில் மூன்று பேர் செய்ய வேண்டிய வேலையைச் செய்து வருகிறேன்!" — என்று கூறினார்.

முதலாளிக்குக் கோபம் தாங்க முடியவில்லை. "அப்படியா, சங்கதி? நீ மூன்று பேர் வேலையையா செய்கிறாய்? யார் அந்த மூன்று பேர்? அவர்களுடைய பேரைச் சொல். உடனே அவர்களை 'டிஸ்மிஸ்' செய்கிறேன்!"—எப்படி முதலாளியின் பதில்?

கனவு கலைந்தது: ஆராத ஆசையோடு அருகே வீற்றிருக்கும் மனைவி மீண்டும் அவன் கவனத்திற்கு வந்தாள். தீராப் பசிகாரன் எதிரே தித்திக்கும் பழச் சோலை; குன்றுபோல் அன்னம் குவித்திருந்தும் உண்ண அச்சப்படும் நிலை! இன்பம் ஏன் இப்படி அவனுக்கு எதிரியாக வேண்டும்? வறுமை தோழனுகிவிட்டால்...? கணவன், வேதனையால் வெதும்புகிறன்:

காதல் எனும் கடல்முழுக்கை
வெறுத்துவிட்டோம்
மெய்யாய்த்

தினம் நாங்கள் படும்பாட்டை
யாரறியக் கூடும்?

சீ! சீ!! சீ!!! இங்கினியும்
காதல் ஒரு கேடா?

திரும்பத் திரும்ப வரும் மூன்றெழுத்துக்களில் வெறுப்புக்கு எல்லையல்லவா கட்டிக் காட்டுகிறன் கவிஞன்! எண்ணுவதை எழில்படச் சொல்லுவது கவிதை—சொல்ல வல்லவன் கவிஞன்.

இவ்வளவு வெறுப்புணர்ச்சியுடைய கணவன், மனைவியின் அழைப்பை — வேண்டுகோளை (?) — உதாசினம் செய்திருப்பான் என்றுதானே நினைக்கிறீர்கள்! படியுங்கள்:

.........ஆனாலும் வீட்டுக்குள்
சென்றோம்.

இன்பமென்னும் காந்தம்தான்
எமை யிழுத்ததுண்டோ?

தனியறையில் கண்ணொடுகண்
சந்தித்த ஆங்கே

தடுக்கி விழுந்தோம் காதல்
வெள்ளத்தின் உள்ளே.

ஆம், இன்ப வெள்ளத்தில் மூழ்கி இணைபிரியாமல், அவர்கள் நெடுந்தூரம் போய்விட்டார்கள்.

விதவைக்கும், வறுமைக் கண் பட்டோருக்கும், உடலின் பம் கை மேலேயே பலன் அளித்துவிடும் என்று சொல்லுவார்கள். கணவனுக்கு எந்த பயம் இன்பத்திற்கு இடையூருக நின்றதோ அந்த பயம் மெய்யாகிவிட்டால்...

பத்துமாதம் செல்லப் பகற்போ
தில் ஓர் நாள்

—இதைக் கூறிவிட்டு, தான் சொல்லவந்த நேரத்திற்குக்

> நடிகர் ஒருவர் தன் நண்பரை தான் நடித்துக்கொண்டிருக்கும் நாடகத்துக்கு அழைத்துச் சென்ருர். 'இதைப் பார்த்து விட்டு பாரபட்சம் சிறிதுமின்றி அபிப்பிராயம் சொல்லவேண்டும்!'—என்று கூறினுர்.
>
> நாடகம் நடந்து முடிந்தது. ஆனுல் அந்த நண்பரோ அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.
>
> நடிகர்: என்ன, அய்யா, இது! நாடகத்தைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல வேண்டுமென்ருல் தூங்குகிறீரே?
>
> நண்பர்: அன்புள்ள தோழரே! உனக்குத் தெரியாதா—நாடகத்தில் தூங்குவதும் ஒரு அபிப்பிராயம் தானே!

கவிஞர் அமைத்துக் காட்டும் பின்னணி இருக்கிறதே, அது சோகச் சுவைக்கு சுவை கூட்டு கிறது.

பட்ட கடன்காரன் வந்து
படுத்துகின்ற நேரம்,

சித்தமெலாம் மூத்தபெண்
சுரநோயை எண்ணித்

திடுக்கிடுங்கால், ஒரு கிழவி
என்னிடத்தில் வந்து

முத்தாலம்மை வைத்த
கிருபையினால் நல்ல

முகூர்த்தத்தில் உன்மனைவி
பிள்ளை பெற்றாள் என்றாள்;

முதல் குழந்தை பிறந்த பொழுது, உளக்கலசம் வழிந்து வரும் சந்தோஷத்தாலே, உயிரெல்லாம் உடலெல்லாம் நனைந்துவிட்ட அதே பேர்வழியின் உள்ளம், இப்பொழுது எண்ணுகிறது:

தொத்துநோய், ஏழ்மை,
பணக்காரர் தொல்லை

தொடர்ந்தடிக்கும் சூறையிலே
பிள்ளையோ பிள்ளை !

அற்புதம்! அற்புதம்!!—என்று சொல்லி வியப்பதைத் தவிர, நம்மால் வேறு என்ன சொல்ல இயலும்?

நாட்டின் நடப்பை, எத்தனையோ குடும்பங்களின் இதயக் குமுறலை, காவியமாக்கி விட்டு, கை தட்டலுக்கும் பாராட்டுதலுக்கும் பல்லிளித்துக் கிடக்கும் பரம்பரையைச் சாராத புரட்சிக் கவிஞர் ஆன காரணத்தினாலே, நிலையைச் சொல்லி அதை நீக்கும் வழியையும் ஆணித்தரமாகக் கூறுகிறார்:

காதலுக்கு வழிவைத்துக்
கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்.
இதிலென்ன குற்றம்?

சாதலுக்கோ பிள்ளை?
தவிப்பதற்கோ பிள்ளை?

சந்தான முறை நன்று;
தவிர்க்கு முறை தீதோ?

காதலுத்துக் கண்ணலுத்துக்
கைகள் அலுத்துக்

கருத்தலுத்துப் போனோம்;

—இப்படியாக வேதனைக் கேள்விகளை வீசிய பின்னர், கருத்தடையை, மதம் காட்டி மக்கள் ஒழுக்க நெறி காட்டி மறுக்க முயலும் பழமை

> ஒரு தடவை நீதி மன்றத்தில் விசித்திரப் பேர்வழி ஒருவர் விசாரிக்கப்பட்டார்.
>
> நீதிபதி : நீ எத்தனை முறை எதிரியைக் குத்தினாய்?
>
> குற்றவாளி: ஒரே ஒரு முறைதான், அய்யா !
>
> நீதிபதி : ஆனால் மூன்று தடவை குத்தியதாகச் சொல்லப்படுகிறதே !
>
> குற்றவாளி : ஓ, அதுவா? எதிரி மிகவும் நோஞ்சானாக இருந்தார், அதனால்தான் ஒரே குத்தையே மூன்றுதடவைகளாகப் பகிர்ந்தளித்தேன்; வேறொன்றுமில்லை.

விரும்பிகளைப் பார்த்துக் கேட்கிறார் :

.........கடைத்தேற மக்கள்
ஓதலுக் கெல்லாம் மறுப்பா ?
என் னருமை நாடே,
உணர்வுகொள் உள்ளத்தில்
உடலுயிரில் நீயே.

—கவிஞரின் இந்த அன்புக் கட்டளை, ஆசையின் ஆணை, நம் இதயத்தை விட்டு எப்படி நீங்கும்?

எங்கள் கவி, எங்கள் கவி என்று இதயம் விம்முகிறது. கருத்தடைப் பிரச்சாரத்தைக் கூடக் காவியமாக்கிடும்-சொற்சுவை ஓவியமாக்கிடும்—ஒப்பற்ற கவி, எம் கவி பாரதிதாசன். என்று பூரிக்கிறேம். ஷெல்லியின் சுவையும், விட்மனின் வேகமும் இழைந்தோடும் புரட்சிக் கவியைப் பெற்றுள்ள நாம் பேறு பெற்றவர்கள். தமிழ்நாடு, பெருமை பெற்றுவிட்டது!

❊

ஒருவர் தன் நண்பர்களை யெல்லாம் வீட்டுக்கு அழைத்து விருந்து வைத்தார்.

விருந்து முடிந்தது. அதில் ஒருவர் முன் வந்து நன்றி சொல்லிவிட்டு, "நீங்கள் சமையலறையை சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பதற்காக என் நன்றி!"—என்று கூறினர்.

விருந்து நடத்தியவருக்கோ திகைப்பு தாங்கவில்லை. "எங்கள் வீட்டு சமையலறை சுத்தமாக இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? ஆச்சரியமாயிருக்கிறதே!"-என்று கேட்டார்.

ஆனல் அவரோ சிறிதும் தயங்காமல், "நீங்கள் பறிமாறிய ஒவ்வொரு பலகாரத்திலும் சோப்பு வாசனை பலமாக வீசுவதை உணர்ந்து அதிலிருந்து யூகித்துக்கொண்டேன். என்ன; என் யூகம் சரிதானு?" என்று கேட்டார்.

விருந்து நடத்தியவர் முகத்தில் அசடு வழிந்தது.

***

"ஒரு சமயம் நான் வளர்த்த நாய்க்குட்டியொன்று என் உயிரையே காப்பாற்றியது."—என்றுர், ஒருவர்.

அப்படியானல் அந்த நிகழ்ச்சி கேட்பதற்கு விறுவிறுப்பாகத் தானிருக்கும். எங்கே : அந்தக் கதையைச் சொல்லு" — என்றுர். கூட்டத்தில் இருந்த மற்றவர்.

"அது அப்படி யொன்றும் பிரமாதமில்லை. ஒரு சமயம் நான் பல நாட்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதுதான் நான் அந்த நாய்க்குட்டியை விற்று ஒரு சாப்பாடு வாங்கி உயிரைக் காப்பாற்றிக் கொண்டேன்"—என்று மிக சர்வ சாதாரணமாகக் கூறி கதையை முடித்தார், அந்த நபர் !

***


நீல ரோஜா!
கே. எ. மதியழகன். பி. எ.
செல்லப்பன்

அழகின் திரு நடனம் அங்கு ஆட்சி புரிந்தது. எழிலானதோர் நந்தவனம். கவின் மலர்க் கூட்டம். கனிமரக் காடு.

மல்லிகையின் மணம் 'கம்' மென்று வீசியது. மாற்ருனையிற்றே: அவனுக்கு நமது மணத்தை வாரி வழங்கலாமா என்ற 'குறுகிய புத்தி' அந்த மலர்புரி ராணி மல்லிகாவிற்கு ஏனே எழவில்லை. வழியிலே சென்ற வாலிபன் வசந்தம் வாரி இறைத்த வாசனையால் வசீகரிக்கப்பட்டான். மாற்ருன் தோட்டத்து மல்லிகை — ஆகவே அதற்கு மணமிருக்காது என்ற பித்து மனமும் அவன் கொண்டிருக்கவில்லை. தோட்டத்திற்குள் நுழைந்தான். அழகின் அழைப்பை யாரும் அலட்சியம் செய்ய முடிவதில்லை.

கொடி முல்லை தென்றற் காற்றில் கூத்தாடி மகிழ்ந்தது. அந்த மோவா அரும்பு: தாவாச் சிறுமானை: கூவத்தெரியாத குயிலின் குஞ்சை சினை ஆட்டியது.

கொய்யாக் கனிகள்—எவரும் கொய்யவில்லைதான்: ஆனல் குறும்புக்கார அணில்களின் 'பல்வடு'க்களைப் பெற்றிருந்தன.

சாமந்திப்பூ — ராணுவ அணி வகுப்பு போல் அந்தப் பாத்திகளில் நடப் பட்டிருந்தன. அங்கு பூத்துக் குலுங்கிய சாமந்திக் கூட்டம், பூமிக்குப் 'பொன் ஓடு' போட முயன்று கொண்டிருந்தது, கோலாரிலே தோண்டிய தங்கத்திலே செய்த பொன் மலராலும், இந்தக் கொல்லையிலே உதித்த பொன் மலருடன் போட்டி போட முடியாதே! கோடி கொட்டி அழைத்தாலும், கோலார் தங்கத்திடம் வண்டு ரீங்காரம் செய்யுமா? தேன் பிலிற்றுமா? சுகந்தம் வீசுமா? அந்த செருக்கு சாமந்திக் கூட்டத்திற்கு நிறைந்திருந்தது.

செம்மாதுளையின் ஓடு வெடித்திருந்தது. சிவந்த பவளவாய்ப் பெட்டி திறந்து சிரிப்பு சிந்தும் சிங்காரியை மனக்கண்முன் நிறுத்தியது.

கற்பனைக்காரிகைக்கு நிகரான சிங்காரி யொருத்தி, இயற்கை விரித்துத் தந்த மரகதக் கம்பளம் போன்ற பசும் புற்றரையில் ஒயிலாக உட்கார்ந்திருந்தாள். எதிரே சம்பங்கி மலர்க் கொத்துக்கள் குவியல் குவியலாகக் கிடந்தன. அவளது கரங்கள் அவற்றை சரமாக்கிக் கொண்டிருந்தன.

புற்றரையை அடுத்து தாமரை பூத்த தடாகம் இருந்தது. அதிகமான தாமரைகள் தென்படவில்லை. வானத்து வெண் முகில்கள் தடாகத் தண்ணீரில் வடிவம் காட்டியது. வாலிபன் நீர்த்துறையை நெருங்கி விட்டான். வேடிக்கைக்காக கேட்டு வைத்தான், "இந்தக் குளத்தில் சுரு மீன்கள் இருக்காதோ?" என்று.

பூத்தொடுக்கும் பூவையொன்றும் இளைத்தவளாகத்

தென்படவில்லை. வயது பதி னெட்டு. இருபது இருக்கும். புதுமைப் பெண்ணுகவே தென் பட்டாள். அவள் அழகரசி மட்டுமல்ல. அறிவரசியுங் கூட! என்பதை அவளது சுடர் விழி கள் பளிச்செனக் காட்டியது.

"இதுவென்ன, சமுத்திரமா, சுருமீன்கள் ஜாக்கிரதை; சுழல் ஜாக்கிரதை என்று 'போர்டு' போட...நீங்கள் பட்டினத்துப் பக்கமோ?" என்று நிறுத்தினுள். கேள்விதான் கேட்டாளே தவிர தனக்கும் பட்டினத்தில் பரிச் சயம் உண்டு என்பதை நிலை நாட்டிக் கொண்டாள்.

"சமுத்திரம் இங்கு இல்லை என்று யார் சொன்னது? உன் கண்களை அந்தத் தடாகத்திலே பார். அந்தக் கண்களின் ஆழம் சமுத்திரத்திற்கு ஏது? இங்கே யுள்ள சுழல்கள் அந்த அலைக ளுக்கு ஏது?" என்ருன்.

அவளது முக மண்டலம் நாணத்தால் சிவந்தது. எதிரே யுள்ள ரோஜாவின் சிவப்பு, அவள் வதனத்தில் குடியேறி யது. வாலிபனின் பேச்சு அவ ளுக்கு வசந்த காலத் தென்றல் போல இனித்தது; வருத்தத் தைக் கொடுக்கவில்லை.

"எங்கள் தடாகத்தில் சுழ லும் இல்லை. சுருமீனும் இல்லை. சுந்தரத் தாமரை உண்டு. சேறு இருக்குமே. வேரிலே சிக்கிக் கொள்வோமோ என் போர் செந்தாமரைக்கு சொந் தக்காரர்கள் ஆவதில்லை."

சம்பங்கிச் சரம் வளர்ந்து கொண்டு இருந்தது. அந்த மலர்க் கூட்டம் அவளது கூந்த லில் இடம் பெற துடித்துக் கொண்டிருந்தது. வாலிபன் எதிரே அமர்ந்தான்.

வானத்திலே இரண்டு மைனுக் குருவிகள் பறந்தன; உயர உயர போய்க்கொண்டி ருந்தன. அதனை உற்று நோக் கிக் கொண்டிருந்தான் வாலி பன். அவனை உற்று நோக்கி ஞள் அவள்.

"குருவியின் சிறகுகளிலே யுள்ள வர்ண ஜாலத்தை ரசிக்கி றீர்களா? எந்த வல்லமை நிறை ந்த ஓவியனின் வர்ணக் கலப் பும், இந்த வசீகரத்தைக் காட் டாதே! இதைப் பார்த்ததும் எனக்கு வண்ணப் புடவை யின் ஞாபகம் வந்தது. உங்க ளின் எண்ணப் படுதாவில்..."

"எத்தனையோ சுந்தனைச் சிதறல்கள்—நெடு நேரம் இந்த மைனுக்கள் வானத்திலேயே பறந்து கொண்டிருக்க முடி யாதல்லவா? பூலோகத்திற்கு— அதன் வாசஸ்தலத்திற்கு— இறங்கி வந்துதானே ஆகவேண் டும் என்று நினைத்தேன்." என்ருன்.

"வேடிக்கையாயும் உள்ளது. விவேகம் நிறைந்ததாயும் உள் ளது. ஒரே பொருள், ஒரே நேரத்தில் பலருக்கு பல கோணத்திலே தெரிகிறது."

"உண்மைதானே. இதி லென்ன அதிசயம். அதோ பார்! அந்த எழில் ரோஜா! அது ஒரே சிந்தனையையா கிளப்புகிறது? வெவ்வேறு உள்ளத்தில் வெவ் வேறு எண்ணங்கள் மலரு

கின்றன. ஆழ்ந்து யோசித்தால் சுவை நிரம்பியதாக இருக்கும்.''

''சரி. உங்களுக்கு சிறு வேலை. இன்னின்னார் உள்ளத்தில் ரோஜா என்ன என்ன எண்ணங்களைக் கிளறுகின்றன என்று கேள்விகள் கேட்பேன். தாங்கள் பதில் கூறவேண்டும்'' -அவன் ஒன்றும் பதில் பேசவில்லை. மௌனம் சம்மதத்தின் அறிகுறியாமே! அவள் பேசலுற்றாள்.

''பூந்தோட்டம் போடும் மருதன் ரோஜாவைப் பற்றி என்ன நினைப்பான்?''

''இன்று நாலு குடலை தருவதாக வாக்களித்திருக்கிறோமே; புழு பட்டுவிடாமல் 'புஷ்பம்' தேற வேண்டுமே. ரோஜாவிற்கு சிவப்பேற்றுதற்கு. இரத்தத்தைப் பிழிந்து, வியர்வையை நீராக்கினேனே; பட்டபாடு வீண்போகக்கூடாது. நாலு காசு கைக்கு வந்து சேரவேண்டுமே என்று கவலைப்படுவான்''

''அவன் தங்கை?''

''அண்ணன் தோட்டத்தில் மலர்ந்திருக்கும் ரோஜாக்களில் அழகிய இரண்டு மலர்களை எடுத்துக் கூந்தலிலே சொருகிக் கொள்ள வேண்டும். அதைக் கண்டு அவளுடைய 'மச்சான்' பாராட்ட வேண்டும் என்று நினைப்பாள்''

''பக்தன்?''

''இந்த மலர்களையெல்லாம் 'ஆரம்'ாகத் தொடுத்து அம்பிகைக்குச் சாத்தினால், ஜகஜ்ஜோதியாய் காட்சியளிப்பாள். லோகநாயகி என்று கருதுவாள்.''

''கோயில் குருக்கள் என்ன நினைப்பார்?''

''இங்கே இருந்தால் ரோஜா உலர்ந்த சருகாகத்தானே போகப்போகிறது; அம்புஜத்திற்குக் கொடுத்தாலாவது இன்றைய தினம் அமளி இருக்காது என்று குருக்கள் அபிமான ஸ்திரீக்கு ரோஜாவை இலையிலே சுருட்டிக் கொள்வார்.''

''தத்துவ ஞானி?''

''ரோஜா அழகானதுதான். அழகு என்றுமே ஆபத்து நிறைந்தது. ரோஜாவுக்குப் பின்னாலே முள் இருக்கிறது. எனவே இன்பமும் துன்பமும் பிரிக்க முடியாதது என்பான்.''

''காதலன்?''

''முள்ளிலிருந்தும் ரோஜாவை விரும்பாதவர்கள் முட்டாள்கள் என்பான்''—என்றான். இந்த இடத்தில் களுக்கென்று சிரித்துவிட்டாள். சமாளித்துக் கொண்டு ''சரித்திரப் பேராசிரியர்?'' என்றாள்.

''இங்கிலாந்து நாட்டில். நடைபெற்ற ரோஜாப்பூ சண்

பிச்சைக்காரன் : அம்மா தாயே...பசிக்குது அம்மா! பத்து நாளா பட்டினியா இருக்கேன் !

ஏழை வீட்டுக்காரி : பத்து நாளா பட்டினியா இருக்கியா ? அப்படீன்னா அந்த வித்தையை எங்களுக்குக் கத்துக் கொடுப்பா ; உனக்குக் கோடி புண்ணியம் உண்டு !

டைகள் நடந்த ஆண்டுகளின் பட்டியலை ஒப்புவிப்பார். வெள்ளை ரோஜா. சிகப்பு ரோஜா. விபரம் கூறுவார்''

''அத்தர் வியாபாரி?''

''பூக்களின் இரத்தம் வாசனை திரவியமாக மாறியிருக்கிறது என்று நினைப்பான்''

''கவிஞன்?''

''எவளுடைய அதரங்களுக்கு, சிவந்த கன்னங்களுக்கு. ரோஜாப் பூவை உவமை கூறலாம் என்று யோசிப்பான்!''

''நாடகாசிரியன்?''

''காதலனையும் காதலியையும் சோலையிலோ, சொர்ண மாளிகையிலோ நிறுத்துவான். இக்கட்டான நிலையை சிருஷ்டிப்பான். காதலியை, 'அன்பரே, பெயரில் என்ன இருக்கிறது? ரோஜா மலர் என்றும் ரோஜாதானே! அதன் நாமத்தை மாற்றிவிட்டால் அதன் நறுமணம் குறைந்தா விடும்'-என்று வசனம் பேச வைப்பான்.''

''காதலி?'' என்ருள். அவன் பதில் சொல்லவில்லை. சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். ஏன் கேட்டோம் என்று ஆகிவிட்டது அவளுக்கு. சிறிது நேரம் கழித்து.

''நீதான் சொல்லேன்?'' என்றான். நிசப்தம் நிலவியது. அமைதியைக் கிழித்துக் கொண்டு.

செங்கரும்பு போல் இனிக்கிறது உங்கள் சொற்கள் என்ருள். அவளுடைய போக்கு அவனுக்குப் புரிந்து விட்டது.

''கரும்பு நல்லதுதான். ஆனல் சக்கையை விரும்புவாயா?'' என்று கேட்டு வைத்தான். பெரிய வினவைக் கேட்டது போல. அவள் தாமதிக்கக் காணும்.

''சக்கையானல் என்ன. சமயலுக்கு விறகாக்குவேன்'' என பதிலிறுத்தாள் சம்பங்கி மலர்களை கை நிறைய வாரி. ''எடுத்துக் கொள்ளுங்கள்'' என கரத்தை நீட்டினுள்.

''இந்த மலர்களை நான் எந்தக் கூந்தலில் சூட்டிக் கொள்வேன்? அந்த மலர், செடியிலே இடம் பெறத் துடிப்பது தெரியவில்லையா? அதன் ஜீவிய நோக்கத்தை ஏன் சிதறடிக்கிருய்? அவை ஒரு நாள் உனது

பசி; பசி!

வயதானவர்களில் சிலர் வாலிபர்களை ஊக்குவிப்பதில்லை.

ஒரு இளங் கவிஞரைப் பார்த்து ஒரு வயதான புலவர் இப்படிக் கேட்டார்:

''நீங்கள் எல்லாம் கவிதை எழுதத் துவங்கி விட்டீர்களா? சரி: கவிஞனுக்கு இருக்க வேண்டிய முக்கிய லட்சணம் என்ன; சொல். பார்ப்போம்!''

''பசி, ஐயா! பசி!'' —இதுதான் பதில்!

-'இல்லஸ்டிரேடட் வீக்லி'

கூந்தல் படுக்கையில் குலாவி மகிழ்ந்து மாளட்டும்'' என்றான்.

அவள் விடுவதாய் இல்லை. மலர்களை அவன் கரத்தில் வைத்தாள். மரியாதைக்காக வாங்கிக் கொண்டான். அப்போது அவள் கரத்தின் ஸ்பரிசம் அவன் கரத்தில் பட்டது.

அவன் ஒன்றும் மாறக்கானோம். அவள் புதிய திசையில் பயணம் செய்கிறாள் என்பது நன்றாகப் புரிந்தது. அவனது நிலை தர்மசங்கடமாயிற்று. அவளோ கற்பனை லோகத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தாள்.

அவனே துவங்கினான்: ரோஜாப் பூவைப் பற்றி காதலி என்ன நினைக்கிறாள் என்பதைப் பற்றி நான் சொல்லவில்லையே —என்றான். மேலும் பேசினான். ''ஆணழகன் ஒருவன் இருந்தான். அவன் அன்புக் காதலி அழகுத் தெய்வமாக விளங்கினாள். அவளுக்கு காணிக்கையாக அந்த ஆணழகன் இரண்டு ரோஜா மலர்கள் பறித்து வந்தான். ஒன்று சிவப்பு ரோஜா. மற்றது வெள்ளை ரோஜா! இரண்டையும் கண்டு இன்ப வெள்ளத்தில் மூழ்குவாள் என அவன் எதிர் பார்த்தான். ஆனால் நடந்ததோ வேறு! வெள்ளையும் வேண்டாம். சிவப்பும் வேண்டாம். கண்ணாளா, எனக்கு நீல ரோஜா வேண்டும் என அடம் பிடித்தாள். காதலியின் ஆசையை நிறைவேற்ற நீல ரோஜாவைத் தேடி, காதலன் அவனி முழுவதும் சுற்றினான். எங்கே நீல ரோஜா கிடைக்கும்?—என்று கண்டோரைக் கேட்டான். காசினி முழுதும் கை கொட்டிச் சிரித்தது. கேலியையும் கிண்டலையும் வீசியது. நீலரோஜா தேடும் முயற்சி தவறு என உணர்ந்து இல்லம் திரும்பினான். அப்போது அவனது அருமைக் காதலி இல்லை. மரண வாயிலிலே நுழைந்துவிட்டாள். கதறினான். அழுதான். புலம்பினான். விம்மினான். வியர்த்தான். 'கல்லறைக்கு அப்பால் நீல ரோஜா பெறுவாளோ, என்னவோ? இங்கே, எங்கே உண்டு. நீல ரோஜா? ஏமாந்தேன்! பேதமை! பேதமை! வெள்ளை ரோஜாவும் சிவப்பு ரோஜாவுமே நல்ல ரோஜாக்கள். இருப்பதை விட்டு இல்லாததைத் தொடர்ந்து, இருந்ததையும் இழந்தேன்'-என கண்ணீர் சொரிந்தான்'' என்று நிறுத்தினான். அவள் கண்களிலும் நீர் சுரந்தது.

அவள் கொடுத்த சம்பங்கி மலர்களை அவன் வாங்கிப் பையில் போட்டுக் கொண்டான்.

''என் மனைவி காத்திருப்பாள். நெடுநேரமாகிவிட்டது. வருகிறேன்'' என்று கூறி புறப்பட்டான். அப்போதுதான் அவன் மணமானவன் என்ற சேதி அவளுக்குப் புரிந்தது. அவன் சென்ற திக்கையே நோக்கிக் கொண்டிருந்தாள்.

அவள் கொடுத்த சம்பங்கி, சருகாகிவிட்டது. அவனது சட்டைப் பையிலிருந்த சருகை அவனது மனைவி குப்பைக் கூடையில் எறிந்தாள். ஆனால் அவனது உள்ளத்தில் சம்பங்கியின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. ●

Che

குடியரசுக் கட்சியின் சார்பாக ஜனதிபதித் தேர்தலுக்குப் போட்டியிடும் ஐசனோவர்.

யரசுக் கட்சி—ஆகிய இரண்டினைத் தவிர அங்கு வேறு கட்சிகளே இல்லையென்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் அங்கே சோஷலிஸ்ட் கட்சி; முன்னேற்றக் கட்சி; மதுவிலக்குக் கட்சி; 'கிரீன்பேக்' கட்சி- போன்ற சிறு கட்சிகளும் இருக்கின்றன. மேலும், தாவர உணவு உண்போர் கட்சி— என ஒன்றும் இருக்கிறது. 'நீ கொலை செய்யக்கூடாது'; 'மிரு

★ அமெரிக்காவில் தேர்தல் ★

அமெரிக்காவிலே நடைபெறும் ஜனதிபதித் தேர்தல் ஒரு மகத்தான திருவிழாவுக்குள்ள ஆரவாரத்தை நாடெங்கும் கிளப்பிவிடுகிறது. ஒரு பிரபல நிருபர் குறிப்பிட்டதைப் போல "அமெரிக்கரின் வாழ்க்கை முறையில் அவர்கள் ஜனதிபதியையும், உதவி ஜனதிபதியையும் தேர்ந்தெடுக்கும் விதத்தைத் தவிர இதர நாட்டு மக்களுக்கு வியப்பு தரும் நிகழ்ச்சி வேறெதுவும் கிடையாது." ஏனெனில் தேர்தலுக்காக அந்த நாட்டில் அவ்வளவு பொருளும் உழைப்பும் செலவிடப்படுகிறது.

அமெரிக்காவில் இரு கட்சி ஆட்சி முறை நிலவுகிறது. ஆனால் ஜனநாயகக் கட்சி; குடி

கங்களிடம் அன்பாயிரு'— என்பன போன்றவைதான் இந்தக் கட்சியின் பிரதான கோஷங்கள்!

அமெரிக்காவின் இரு பிரதான கட்சிகளும் தங்கள் ஜனதிபதி அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் விதமே விசித்திரமானது.

தேர்தல் காலத்தில் வரும் ஆகஸ்ட் மாதத்தில் இரு கட்சிகளும் தங்கள் மாநாட்டைக் கூட்டுகின்றன. இதற்கு ஒவ்வொரு மாநிலமும் தங்கள் அங்கத்தினர்களை அனுப்பி வைக்கிறது. இந்த அங்கத்தினர்கள் தான் இறுதியில் தங்கள் கட்சியின் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஒவ்வொரு கட்சி மாநாடும், அந்த மாநாட்டைக் கூட்டு

ஜனநாயகக் கட்சியின் சார்பாக ஜனாதிபதித் தேர்தலுக்குப் போட்டியிடும் ஸ்டீவன்சன்.

வதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியின்படி காரியங்களைச் செய்கிறது. இந்தக் கமிட்டியானது அங்கத்தினர்களது ஓட்டுகளை எண்ணுவதற்கும், பிற காரியங்களைக் கவனிப்பதற்காகவும் வேண்டி சில அலுவலாளர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பிறகு கமிட்டியின் தலைவர் ஒரு துவக்க விழா சொற்பொழிவாளரைத் தேர்ந்தெடுப்பார். இந்த துவக்க விழா சொற்பொழிவாளர் பலம் வாய்ந்த பேச்சாளராக இருப்பது வழக்கம். இவர் முதலில் தங்கள் கட்சியின் திட்டங்களை விளக்கியும், எதிர்க் கட்சியின் பலவீனங்களைக் கண்டித்தும் மிக ஆவேசமாக சொற்பொழிவு நிகழ்த்தி, தங்கள் கட்சி வெற்றிபெற வேண்டிய தன் அவசியத்தை உணர்த்திவிட்டு உட்கார்ந்து விடுவார்.

பிறகு தலைவர் மாநிலங்கள் வாரியாக வந்திருக்கும் அங்கத்தினர்களின் பெயரைப் படிப்பார். இவர்களே தாங்கள் யாரை ஆதரிக்கிறார்களோ அவர்களுக்குத் தங்கள் ஓட்டுகளை அளிப்பார்கள். பிறகு அலுவலாளர்களால் ஓட்டுகள் கணக்கிடப்பட்டு வெற்றி பெற்ற அபேட்சகரின் பெயர் வெளியிடப்படும். இதற்குப் பிறகு வெற்றி பெற்றவரை உறுதிப்படுத்தி, அவர்களின் பெயரை கட்சியின் மத்திய

இதுதான் வோட்டுப்போட உபயோகிக்கப்படும் இயந்திரம். இதை எவ்விதம் பயன்படுத்துவது என்பது குறித்து ஓட்டர்களுக்குத் தொண்டர் படையைச் சேர்ந்தவர்கள் விளக்கமாக எடுத்துரைக்கின்றனர்.

கமிட்டிக்கு அனுப்பிவிட்டு. மாநாட்டுக் கமிட்டி தன்னுடைய பணியை முடித்துக் கொள்கிறது.

பிறகு கட்சிக் கமிட்டி தன்னுடைய தேர்தல் நடவடிக்கைகளைத் துவங்கும்.

இதே முறையைப் பின்பற்றித்தான் ஜனநாயகக் கட்சியின் சார்பாக ஸ்டீவன்சனும். குடியரசுக் கட்சியின் சார்பாக ஐசனோவரும் அபேட்சகர்களாக இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

வருகிற நவம்பரில் தேர்தல் நடைபெறும். அதற்குள் பத்திரிகை, வானொலி, டெலிவிஷன்-போன்ற எல்லா சாதனங்களும் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இதற்கிடையில் அங்குள்ள 'அமெரிக்க பொது மக்கள் அபிப்பிராய அமைப்பு' என்னும் ஸ்தாபனம் எந்தெந்த மாநிலத்தில் எந்தெந்தக் கட்சிக்கு ஆதரவு இருக்கிறது என்பதைச் சுத்தமாகக் கணக்கிட்டுச் சொல்லிவிடும். இதை வைத்துக் கொண்டும் இந்தக் கட்சிகள் தங்கள் வேலைகளைச் செய்கின்றனர்.

தேர்தல் தினத்தன்று 80 மில்லியன் மக்கள் ஓட்டளிக்கின்றனர்.

இவர்களில் பலர் மறுநாள் யார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும்வரை தூங்காமலே இருக்கிறார்கள். இறுதியில் தோற்றுப்போன அபேட்சகர் வெற்றி பெற்றவருக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்புகிறார். அதோடு அமெரிக்காவில் தேர்தல் ஆரவாரம் மறு நான்கு ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது! ஏனெனில் அங்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தேர்தல்!

சினிமாத் தியேட்டரில் இடைவேளையின்போது ஒரு முரட்டுமனிதனும் அவன் மனைவியும் வெளியே சென்றுவிட்டு மீண்டும் திரும்பினர்.

அந்த முரடர் நாற்காலியில் உட்கார்ந்திருந்த ஒருவரைப் பார்த்து: "சற்று நேரத்திற்கு முன்பு நான் உங்கள் காலைத் தானே மிதித்தேன்?"

மன்னிப்பு பெறுவதற்குத்தான் அப்படிக் கேட்கிறார்—என்று நினைத்துக்கொண்ட அவர், "பரவாயில்லை: எனக்கொன்றும் வலிக்க வில்லை"—என்று உபசாந்தியாகக் கூறினர்.

ஆனல் அந்த முரடரோ தன் மனைவியிடம் திரும்பி "அப்படியானல் கண்ணே! இதுதான் நாம் முன்பு உட்கார்ந்திருந்த வரிசை! நீ சந்தேகப்படாமல் வா!"—என்று கூறியவாறே அவளை அழைத்துச் சென்றார்!

தீயை மூட்டி விட்டனர். சுவாலை விட்டுத் தீ எரிகிறது. பிணத்தோடு அந்தப் பெண்ணும் இணைத்துக் கட்டப்பட்டு விட்டாள். தீயிலே புழுவாகத் துடிக்க ஆரம்பித்து விட்டாள். இந்தக் கொடுமையைக் காண சகிக்காமலோ, என்னவோ, வானம் கரிய மேகங்களால் தன் நீல முகத்தை மூடிக் கொண்டது. சிறிது நேரத்தில் மழை தூறுகிறது, தீயின் வேகம் தணிகிறது. சுவாலை அடங்குகிறது. இருள் பரவுகிறது. பிணத்தோடு பிணைக்கப்பட்டிருந்த அந்தப் பேதை பிணைப்புகளை நீக்கிக் கொண்டு எரிந்து கருகிப்போன கட்டைகளின் அடியிலே ஒளிந்து கொள்ளுகிறாள். பிறகு மெதுவாக விலகிப் பக்கத்திலுள்ள புதர்களில் மறைகிறாள்.

கூடியிருந்த கொலை மனங்கொண்ட கூட்டத்தினரோ, பிணம் எரிந்த இடத்தைத் துளாவுகின்றனர். ஒரு பிணத்தின் உடலே கிடைக்கிறது: உயிரோடு வைக்கப்பட்ட அந்தப் பேதையின் உடல் இல்லை. தேட ஆரம்பிக்கிறார்கள். அதோ இடுகாடு முழுவதும், அலசுகின்றனர்.

பிணத்தின் மகன் ஒரு கணத்தில் தப்பிப் பிழைத்த அந்த அபலையாகிய தன் தாயைக் கண்டுவிடுகிறான். தீயை நோக்கித் துரத்துகிறான். அவள் அழுகிறாள். அரற்றுகிறாள். கெஞ்சுகிறாள். மண்டியிடுகிறாள். உம்... விடவில்லை, அந்தப் பிடிவாதக்கார சண்டாளன். தாயை, தீயில் விழக் கேட்கிறான். இல்லாவிட்டால், தூக்கிட்டுச் சாகக் கேட்கிறான். அதுவும் முடியாவிட்டால், ஆற்றின்

தில்லை வில்லாளன் எம்.ஏ

192749
M241,N56MR
N56:1:3

சுழலில் குதித்தாவது சாகச் சொல்கிருன். யார்? மகன். யாரை? தாயை. ஏன்? தன்னைப் பெற்ற ஒரு குற்றத்திற்காகப் போலும். அவளோ, பிணத்தை அணைத்து பெருந்தியில் கிடப்பது முடியாத காரியமப்பா—என்று கண்ணீர் விட்டுக் கதறிக் கதறிக் கூறுகிருள். மகன் விடவில்லை. என் சாதி என்னுகிறது-என்று கேட்கிருன். நீ சாகப்போகிருயா அல்லது நான் சாதிகெட்டு, நாதியின்றி, செத்துப்போகவா-என்று சுடுகாட்டில் சூள் உரைகிருள். எது சொல்லியும் அந்தப் பெண்மணி கேட்கவில்லை. எப்படிக் கேட்க முடியும்? எரிதழலில் எவர்தான் உயிரோடு வெந்து அழிய முடியும்? அந்தோ, சண்டாளர்கள், சதிகாரர்கள், விடவில்லை. அவளது கைகளையும், கால்களையும் கட்டுகிருர்களே, என்ன செய்யப் போகிருர்களோ, தெரியவில்லையே! ஐயோ, ஆம், ஆம், அவளைத் தூக்கி, அந்த நெருப்பில் எறிகிருர்கள்—எறிந்துவிட்டார்கள் — அந்தப் பெண்மணியும், பிணத்தோடே எரிகிருள் — எரிந்து சாம்பலாகிருள்!

தீ எரிப்பு சம்பவத்தை, கற்பனை செய்து காட்டவில்லை. கண்ணுல் கண்டது. இந்தியாவில், இந்து மதத்தின் பெயரால் நடைபெற்ற கொடுமைகளில் ஒன்று. வில்லியம் வார்டு எனும் மேலை நாட்டு சரித்திரப் பேராசிரியர் இந்துக்களின் வரலாறு, இலக்கியம், மதம் என்ற நூலில் இந்த சம்பவத்தைக் குறிப்பிட்டிருக்கிருர்.

இந்து மதத்தைக் கண்டிக்கும் பொழுது, அதன் கொடுமைகளை வகைப்படுத்திக் கூறுவோம். அந்தக் கொடுமைகளில் தலைமையானது சதிமுறையாகும் அதாவது கணவன் இறந்துபோனுல், மனைவியும் அவனுடன் தீயில் விழுந்து இறந்துபோவது! இம்முறை பத்தொன்பதாம் நூற்ருண்டு ஆரம்ப காலம்வரை இந்தியாவில் இருந்து வந்தது.

கணவனையும், மனைவியையும் சதி, பதி என்கிருேம். அதாவது, பதி இறந்துபோனுல், சதியாகவேண்டியவளே மனைவி என்ற கருத்திலேயே இப்படிப் பெயரிடப்பட்டுள்ளது.

சதி என்பது உண்மை பக்தியுள்ளவள் என்ற பொருளை உணர்த்தும்.

சதி முறை என்பதை சடங்குகளோடு செய்யப்படும் தற்கொலை என்றே கூறவேண்டும்.

இதில் இரண்டு வகை கூறுவார்கள். சக மரணம், அனு மரணம் என்பார்கள். இதனையே சக கமனம், அனு கமனம் என்று கூறுவதுமுண்டு. இறந்துபோன கணவனுேடே எரிக்கப்பட்டு இறப்பது சக மரணமாகும். இறந்த பிறகு சில நாட்கள் கழித்து, அதற்கென தனி சடங்குகள் செய்து, தீமூட்டி, அத்தீயில் இறங்கி உயிர் விடுவது அனு மரணமாகும்.

இந்து மதத்தின் கர்த்தர்களான ஆரியர்களின் ஆதி வேதமான ரிக் வேதத்தில் இது சம்பந்தமாக இரண்டு கருத்து கூறக்கூடிய விதத்திலுள்ள வரிகளே உள்ளன. சதி பற்றிய தெளிவான குறிப்புகள் இல்லை.

அரோகந் ஜனேய யோனிம் அக்ரே— இதுதான் அதிலுள்ள வரியாகும். அக்ரே என்பது தெய்வ வழிபாட்டிற்கு அமைக்கப்பட்டுள்ள மேடையென்று பொருள்படும். இந்த வரிக்கு, தாய்மார், முதலில் வழிபாட்டு மேடைக்கு போகட்டும் என்றே பொருளாகும். ஆனால் இந்த வரியில் கடைசியில் உள்ள அக்ரே என்ற பதத்திற்கு பதில் அக்னே என்று மாற்றி, தாய்மார், முதலில் நெருப்பிற்குள் நுழையட்டும் என்று பொருள் விரித்து விட்டார்கள் என்று கூறப்படுகிறது. இந்த வார்த்தை விளையாட்டு பெண்ணுலகத்திற்கு எவ்வளவு பெரிய தீங்கிழைத்துவிட்டது!

பாரதத்தில், பாண்டுவின் மனைவியரில் ஒருத்தி தீ புகுந்ததாக கதை. ஆனால் பாரதப் போரில் உயிர் நீத்த எவரது மனைவியும் சதியானதாகத் தெரியவில்லை.

இராமாயணத்தில், சீதை, சந்தேகத்தைத் தவிர்க்க தீ புகுந்தாளே தவிர, சதியாக தீ புகவில்லை.

ஆனால் பிற்கால புராணங்களில் சதி முறை பாராட்டப்பட்டிருக்கிறது.

சதி முறை, ஸிதியர்கள் மூலமே இந்தியாவிற்கு வந்தது என்று சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

ஸிதியர்கள் தங்கள் மன்னர்கள் இறந்துவிட்டால், அவர்களோடு வாசனைத் திரவியங்கள், ஐம்பது குதிரைமீதமர்ந்துள்ள வீரர்கள், மது தருவோன், சமையல்காரன், அரசாங்கப் பாதுகாவலரில் ஒருவன், தூதுவன், காமக்கிழத்தியரில் ஒருத்தி ஆகியவர்களோடு புதைப்பது வழக்கம்.

திரேசியர்கள் முறையிலும் இம்மாதிரியான வழக்கத்தைக் காணலாம். அவர்களில் ஒவ்வவொருருக்கு பல மனைவியர்

உண்டு. ஒருவர் இறந்துவிட்டால் மனைவியரில் போட்டி ஏற்பட்டுவிடும். யாரிடம் இறந்தவனுக்குஅதிக அன்போ. அவளே அவனோடு உடன் சாகவேண்டும். இந்தப் போட்டியின் முடிவில் யார் அதிக அன்பு செலுத்தப்பட்டவள் என்று தீர்மானிக்கப்படுகிறதோ, அவள், அவளது நெருங்கிய உறவினரால் சுடுகாட்டில் கொல்லப்பட்டு, இறந்தவனோடு புதைக்கப்படுவாள்.

இத்தகைய அந்நியர்களின் பழக்கத்திலிருந்து இந்தியாவிற்கு சதி முறை வந்தது என்பதற்கு தெளிவான ஆதாரம் ஏதுமில்லை. ஆனால் வேத காலத்திற்குப் பிறகு பிராமணர்களே இம்முறையைப் புகுத்தினார்கள் என்பது வெளிப்படை. ஏனெனில், இந்த சதி முறை பார்ப்பனப் பெண்களுக்குக் கிடையாது என்று திட்டமிட்ட பொழுதே, இது அவர்கள் சதி என்பது கூருமலே விளங்கும். ஆபி டுபா இதனை எடுத்துக் காட்டுகிறார். வடநாட்டு பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் இம்முறையைப் பின்பற்றியிருக்கிறார்கள். ஆனால் தென்னாட்டு பிராமணர்கள் இதனை தங்கள் குலத்தவருக்கு உரியதல்லவென்று கூறி, பிறரை மட்டும் தூண்டி வந்தனர்.

விதவை உடன்கட்டையேறல் என்பது உலகம் முழுவதும் இருந்து வந்ததாகவே தெரிகிறது. ஸ்காண்டிநேவியா, கிரேக்கம், திரேசியா, ஸிதியா, எகிப்து, ஆப்ரிக்கா, அமெரிக்கா—முதலிய இடங்களில் இதற்கு ஆதாரங்கள் ஏராளம் கிடைத்துள்ளன. சிலவில் விதவையின் மறுமணம், மிகவும் இழிவாகவே கருதப்பட்டிருக்கிறது.

சதி முறை வடநாட்டில் தான் நீண்ட காலம் நிலைத்திருந்தது. தென்னாட்டில் பிராமண ஆதிக்கம் நிறைந்த பகுதிகளில் இருந்ததுண்டு. தஞ்சை, மதுரை, விஜயநகரம் போன்ற இடங்களில் சதி நடந்ததாகத் தெரிகிறது.

சதி முறையில் வேறு சில சதிகளும் கூறப்படுகிறது. மகன் இறந்துபோனால் தாயும் சாவது ஒரு முறை. இதற்கு மா சதி என்று பெயர். சில சமயங்களில் சகோதரர்கள் இறந்து போனால் சகோதரிகள் கூடச் சாவது உண்டு. இதற்கு சகோதர சதி என்று பெயர்.

அடிமை வேலையாட்கள் உடன் சாவார்கள். சில சமயங்களில். இந்த வேலைக்காரர்களுக்கு சது என்று பெயர். இம்முறை ராஜஸ்தானிலும், கூர்ஜரத்திலும் அதிகம். கி. பி. 1818-ம் ஆண்டு ஜெய்பூர் மகாராசா இறந்தபொழுது அவரோடு பதினெட்டு பெண்ணடிமைகள், பதினெட்டு ஆணடிமைகள், அவருடைய நாவிதன் ஆகியோர் உடன் எரிக்கப்பட்டனர். நாவிதன் எதற்குத் தெரியுமா? மேல்

உலகில் முகக்ஷவரம் செய்ய ஆள் கிடைக்காது: ஆதலால்!

சதி முறை செய்யப்படும் சடங்குகளில் இடத்திற் கேற்ப சில வித்தியாசங்கள் இருக்கலாம். ஆனால் எல்லா இடங்களிலும் பிராமணர்களே இருந்து நடத்துவார்கள். கணவனின் பிணம் வைக்கப்பட்ட பிறகு மனைவி எல்லாவித அலங்காரத்தோடு வந்து, பிறகு தன் ஆடை, ஆபரணங்களை தானம் தந்துவிட்டு, பாடையில் கணவனை அணைத்தபடி படுத்துக் கொள்ள வேண்டும். அவள் அலங்காரங்களோடு வரும் பொழுது அவள் கரத்தில் ஒரு கண்ணாடியும் தரப்படும். அதன் மூலம் அவள் தன் முகத்தில் சாவைப் பற்றிய பயம் வராமல் தடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அவள் மீது வைக்கோல், விராட்டி வைத்து, நெய்பெய்து, நெருப்பை மூட்டுவார்கள். சில இடங்களில்; மூன்று முரட்டு மூங்கில் தடிகள் அவள்மீது அழுத்திப் பிடித்துக் கொள்ளப் படும். அவள் சாகும்பொழுது எந்தவித வேதனைக் குரலும் எழுப்பக்கூடாது. அதற்காகவே, வேத சத்தம் மிகப் பலமாகக் கேட்கும்படி பிராமணர்கள் உரத்த குரலில் ஓதுவார்கள்.

சதி முறைக்குப் பலவித காரணங்கள் கூறப்படுகின்றன.

மன்னர்களின் உயிர்களுக்கு மனைவிமார்களாலேயே அபாயம் அடிக்கடி வந்தது. அதனால் அதைத் தடுக்க, இந்த உபாயம் கையாளப்பட்டது — இப்படிக் கூறுவாரும் உண்டு.

கணவன் தெய்வம், மனைவி பக்தை. ஆகவே இருவரும் இணைந்தே செல்ல வேண்டும். — இது இந்து மத தத்துவம். இதன் அடிப்படையிலேயே இம்முறை வளர்ந்தது — இதுவும் காரணம் என்பர்.

கணவனுக்குப் பின், மனைவிக்கு சொத்து என்ற நிலை ஏற்படாமல் தடுக்கவே, இதனை ஆண் வர்க்கத்தவர் விரும்பி வளர்த்தனர் — என்பர்.

முகம்மதிய ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அதனாலேயே இம்முறை வளர்ந்தது — என்பர் சிலர்.

விதவைக் கொடுமையைவிட, வெந்து தணிவது மேல் என்று

அபராதம்!

''வேகமாக கார் ஓட்டியதற்காக உன் மேல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. நீ ஓட்டியது உண்மையா?

''ஆமாம்! நூறு மைலுக்கு மேல்தான் நான் கார் ஓட்டினேன்!''

''ஆ!...என்ன?...உண்மையைச் சொல்லி வழக்கு மன்றத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியதற்காக உனக்கு இருபது ரூபாய் அபராதம் விதிக்கிறேன்...!''

பெண்களே இதனை விரும்பினர் —என்றும் கூறுவர்.

ஆனால், இவைகளுக்கு மேலாக, இந்து மத அதிபர்களான ஆரியர்கள், பெண்களை, ஆணின் உடைமைப் பொருளாகக் கருதினர் என்பதே சாலச் சிறந்த காரணமாகும். அதனாலேயே. இறந்தவனின் பொருளை, இறந்தவனோடு வைத்து எரிக்கலாம் என்று கூறி சதி முறை வளர சதி செய்தனர்.

இந்த முறையை முதலில் வெளி நாட்டாரே தடுத்து நிறுத்தும் நிலை ஏற்பட்டது. போர்ச்சுகீசிய எல்லைக்குள் இந்த சதி நடைபெறக் கூடாது என்று கி. பி. 1510—லேயே ஆல்புகர்க் உத்திரவிட்டார்.

அக்பர், இதனைக் கண்டித்தார். ஜஹாங்கீர் கண்டித்தார். சதி, தானே விரும்பிச் செய்யப்படுவதாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார் அக்பர். ஒரு சமயம், ஜோத்பூர் மன்னரின் மருமகளை, அவள் விருப்பத்திற்கு மாறாக வைதீகர் எரிக்க முற்பட்டதைத் தடுப்பதற்கு நூறு மைல் தூரம் விரைந்து சென்றிருக்கிறார், அக்பர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் டச்சுக்காரர்களும், பிரஞ்சுக்காரர்களும், தங்கள் எல்லைக்குள் சதி நடைபெறக் கூடாது என்று கூறி தடுத்தனர்.

ஆங்கில எல்லையிலும், அதிகாரிகள் அனுமதி பெற்றே சதி நடைபெற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் ராஜாராம் மோகன ராய் சதி முறையை பலமாகக் கண்டித்து பிரச்சாரம் செய்தார்.

கி. பி. 1829-ல் கவர்னர் ஜனரலாக இருந்த லார்டு பெண்டிங் பிரபுவே, சதித்திட்டத்தை தடுக்கும் தடைச் சட்டத்தை நிறைவேற்றினார்.

தமிழகத்தில் விதவை தீ புகும் சம்பவம் ஒன்று புறநானூற்றுப் பாடல் ஒன்றின் மூலம் அறிகிறோம்.

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டு, தன் கணவன் இறந்த பொழுது, தீப்பாய முடிவெடுத்தாள். சான்றோர், அம்முடிவை தீதானது என்று கூறி, அவளை அரசு கட்டிலேறி ஆட்சி புரிந்திட வேண்டினர். அதற்கு அவள் வெகுண்டு பதில் கூறுவதாக பாட்டு கூறப்பட்டுள்ளது.

பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா
தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப்
பல்சான் றீரே
அணில் வரிக் கொடுங்காய்
வாள்போழ்ந்திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய்
தீண்டா
தடையிடைக் கிடந்த
கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு
புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்

பரற்பெய் பள்ளிப் பாயின்று
வதியும்
உயவற் பெண்டிரே
மல்லேமாதோ
பெருங்காட்டுப் பண்ணிய
கருங்கோட் டீமம்
நுமக்கரி தாடுக தில்ல
வெமக் கெம்
பெருந்தோட் கணவன்
மாய்ந்தவைரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந்
தீயுமோ ரற்றே

இப்பாட்டின் மூலம் கைம்மைக் கொடுமையைவிட, தீப்புகுதல் நன்று என்று விளக்குகிருள்.

முடிவாக, இந்து மதத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறிப் பூரிப்படையும் சிலர்கள் சிலரின் சிந்தனைக்கு. பெண்ணுலகத்திற்கு இந்து மதம் செய்த மகத்தான துரோகத்தை எடுத்துக் காட்டவே இந்தக் கொடுமையைப் பற்றிய முழுத் தகவலைத் தொகுத்துக் கொடுத்துள்ளேன். விதவைக் கொடுமையை நாம் கண்டிக்கிருேம். ஆனல், இதைவிட பயங்கரமான கொடுமை ஏற்கனவே பழக்கத்திலிருந்தது என்ற நினைவு நம்மைப் பேசமுடியாமல் செய்கிறது. 'பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு மண்ணடிமை தீர்தல் முயற் கொம்பே' என்ருர் புரட்சிக் கவிஞர். ஆனல், இந்து மதமோ அவர்களை ஒரு காலத்தில் தீயிட்டு சுட்டுச் சாம்பலாக்கி வந்திருக்கிறது. இந்த சதிகார இந்து மதத்தின் பிடிப்பிலே இன்னமும் தமிழர்கள் பெரும் பகுதியினர் சிக்கிச் சிதைகின்றனரே என்றெண்ணும் பொழுது கண்ணீர் பொழிகிறது கண்கள். சதிமுறை மூலம் பெண்ணுலகத்தை அழிக்க சதி செய்த இந்து மதமே, உன் சதிச் செயல்கள் சாயும் நாள் எந்நாள் என்று கேட்கிறது சிந்தனை. 'அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள் தமிழ் நாட்டின் கண்கள்! அக்கண்களை தீப் புண்களாக்க நினைக்கும் சதிகாரர்கள் ஒழிக!' என்கிறது வாய்! ●

"சார்! சார்! பத்து பவுன் நகை; ஐந்நூறு ரூபாய்க்கு மேல பெறுமானம்; சார்...ஒரு வைரத் திருகுவில்லை; ஆயிர ரூபாய் பெறும்-எல்லாத்தையும் காணும்!"

'இது மட்டும்தானு?'

இதையெல்லாம் போட்டிருந்த என் குழந்தையேற காணுமல் போய்ட்டாளே!"

உலகளாவிய முறையில் நடைபெற்றுவரும் இவ் விளையாட்டு விழாவிற்கான வரலாற்று ஏடுகளின் ஆதாரம் கி. மு. 776-ல் நடந்ததாகத்தான் தெரிவிக்கிறது. அதுவும் விழா நடந்ததாகத் தெரிவிக்கிறதே ஒழிய, எந்த அளவில் நடந்தது: என்னென்ன விளையாட்டுகள் இடம் பெற்றன: எத்தனைபேர் பங்கு பெற்றனர் என்றெல்லாம் தெரிவிக்கவில்லை.

கிரீஸ் தேசத்தைச் சேர்ந்த ஒலிம்பியாவை ஆண்டு வந்த "ஓனோமாஸ்" தன் மகள் "ஹிப்போ"வை மணமுடிக்க வேண்டுபவன் அவளைத் தேரில் ஏற்றி விரைய வேண்டுமென்றும், பிறிதொரு தேரில் மன்னன் அவனைத் துரத்த, மன்னன் கைக்குத் தப்பினால் "ஹிப்போ" அவனது உடைமை; இல்லாவிடில் அவனுக்கு மரணம் — என்றும் அறிவித்தானும். இப்படிப் பதின்மூன்று பேர் மன்னனுக்கு இரையாக, கடைசியாக வந்த போர்வீரன் "பெலோப்ஸ்" வஞ்சகத்தால் மன்னனை மாளச்செய்து மகளை அடைந்ததாகவும், அதன் நினைவாக "பெலோப்ஸ்" இவ் விழாவை ஏற்படுத்தியதாகவும், ஒரு சாரார் கூறுகின்றனர். பிறிதொரு சாராரோ கிரீஸ் தேசத்திலோடும் எல்லிஸ் நதியின் கரையில் அமைந்திருக்கும் 'ஒலிம்பியா' என்னும் வெளியில் இவ் விழா நடைபெற்றதால் இப்பெயர் வந்ததென்பர். எது எப்படி இருந்தாலும், இவ்விழா கிரேக்க தேசத்தில்தான் முதன் முதலில் தோன்றியது.

இது ஒரு புறமிருக்க, சுமார் பத்து நூற்றாண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வந்த இவ்விழா கி. மு. 394-ல், அதாவது சாக்ரடீஸ் மறைந்த நான்கு ஆண்டுகள் பின்பாக அப்போது ஆட்சிக்கு வந்த மன்னன் ஒருவனால் நிறுத்தப்பட்டது. ஆனாலும் கி. பி. 1896-ல் இவ்விழா மீண்டும் ஆரம்பிக்கப் பெற்றது.

சமீப காலமாக உலகின் எல்லா நாடுகளும் இவ்விழாவில் மிகுந்த அக்கரை காட்டுகின்றன. இவ்விழாவை நடத்துவ

தற்கென் அமைக்கப்பட்டிருக்கும் "சர்வதேச ஒலிம்பிக் குழு" நான்காண்டுகளுக்கு ஒரு முறை இவ்விழா நடத்தப்படவேண்டிய இடத்தைத் தெரிந்தெடுக்கும். உலகில் தலை சிறந்த நகர்களெல்லாம் இத்தகைய ஒரு வாய்ப்பை தங்களுக்கு அளிக்குமாறு பலத்த போட்டியிடுகின்றன.

இதன்படி இவ்வாண்டு நடக்கவிருக்கும் பதினாறவது 'ஒலிம்பிக்' விழா ஆஸ்திரேலியாவிலுள்ள "மெல்போர்ன்" நகரில் நவம்பர் 22 முதல் டிஸம்பர் 8 வரை நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை ஆஸ்திரேலியர் மிகுந்த கவனத்துடன் செய்து வருகின்றனர். இத்தகையதொரு விழாவை நடத்துவதென்றால் சாமானிய காரியமல்ல. பல இலட்சக் கணக்கில் செலவு செய்து, பரந்த "விளையாட்டுக் கூடம்" ஒன்றை நிர்மாணிக்கவேண்டும். விழாவில் கலந்துகொள்ள பல நாடுகளிலிருந்து வரும் போட்டியாளர்கள் தங்குவதற்கென தனியே ஒரு 'ஒலிம்பிக் கிராம'மே அமைக்கவேண்டும். அன்றியும் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்தும் வரும் பார்வையாளர்கள் தங்குவதற்கென சகல வசதிகளும் செய்ய வேண்டும். இது மிகச் சிரமமே!

ஆனாலும் நான்காண்டுகளுக்கொரு முறை நடைபெறும் இவ்விழாவானது நாடுகளிடையே நல்லுறவை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

—செ. கந்தசாமி

மரண பயம்!

யுத்தத்தில் மிகவும் மோசமாக காயமடைந்துக் உயிரை இழக்கும் தருணத்தில் இருக்கும் ஒரு சிப்பாயிடம்,

"நீ கடைசியாக ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறதா...? உன் வீட்டுக்கு என்ன தகவல் சொல்லி அனுப்ப?" என்றார் பாதிரியார்.

"என் சட்டை உள் பையைப் பாருங்கள்!" என்றான் காயமடைந்தவன்.

பாதிரியார் அவன் பைக்குள் கை விட்டு, ஒரு டைரியை எடுத்தார்.

"இதுவா வேண்டும்?"

"அதைத் திறவுங்கள்!"

"பத்து டாலர் நோட்டு இருக்கிறது...வேண்டுமா?" என்றார் பாதிரியார்.

"ஆமாம்......அதை என் பந்தயப் பணமாக வைத்துக் கொள்ளுங்கள்...நான் இறக்கப் போவதில்லை" என்றான் மரணப் படுக்கையில் இருந்தவன்—பாதிரியார் அசந்து நின்று விட்டார். ஆம்! அவன் பிறகு அநேக வருடங்கள் உயிரோடு இருந்தான்......நம்பிக்கைதான் காரணம்!

—"அதி"

கண்ணாடி வளையல்

முனியன் ரிக்ஷாவை மிக வேகமாக இழுத்துக் கொண்டு ஓடினான். அவனுடைய அவசரத்தை உணர்ந்து கொண்டதைப் போலவே, ரிக்ஷாவின் சக்கரங்களும் மிக வேகமாக உருண்டோடிக் கொண்டிருந்தன. சக்கரங்கள் சுழன்றதைப் போலவே, எண்ணங்கள் பல அவன் உள்ளத்தில் சுழன்றன.

காலையில் வீட்டில் — வீடா அது, புழுக் கூடு போன்ற குடிசை — கதிரவனின் கரங்களும், கருமேகங்களின் கண்ணீர்த் துளிகளும் தாராளமாக மேவும் தொட்டில் — நடந்த நெஞ்சை உலுக்கும் நிகழ்ச்சி அவன் மனதில் படம் விரித்தாடிக் கொண்டிருந்தது. வறுமை ஆட்சி செய்யும் குடிசையில்தானே கவலையும் பிடிக்கிறது! தினம் தினம் பட்டினியுடன் போர் நடத்தும் முனியனின் குடிசையில் கொந்தளிப்புக்கு இடமிருக்குமே தவிர, குதூகலத்திற்கு வழி ஏது?

வயிற்றைக் கழுவிக் கொள்வதற்காக அவன் மாடாக

உழைக்க வேண்டியிருக்கிறது. அன்று அவன் நீண்ட நாட்களுக்குப் பிறகு ரிக்ஷாவை இழுக்கப் புறப்பட்டான். கடந்த ஒருமாத காலமாக அவன் உடல்நலம் குன்றி படுத்த படுக்கையாகக் கிடந்தான். அஞ்சலை அல்லும், பகலும், அனு விரதமும் அவன் அருகில் அமர்ந்து வேண்டிய சிகிச்சைகளை செய்து, அவனை 'எமன்' வாயிலிருந்து மீட்டாள்.

''என்னுங்க! இந்தக் கஞ்சியை குடிச்சிட்டுப்போங்கோ'' என்று கூறியபடியே கஞ்சிக் கலயத்தை நீட்டினுள் அஞ்சலை! செந்தாமரை போன்ற அவளது கைகளைக் கண்ட முனியனின் முகம் சுருங்கியது. அகம் சிலிர்த்தது!

''என்ன அஞ்சலை! வாயும், வயிறுமாய் உள்ள உன் கையில் ஒரு வளையல்கூட இல்லை— புள்ளதாச்சி பொம்பளேங்கோ.

கையில் வளையல் இல்லாமல் இருக்கலாமா? இரண்டு நாட்களுக்கு முன்னால் நீ தாயாகப் போகிறாய் என்று அறிந்தது முதல் எவ்வளவு ஆனந்தத்தோடு யிருக்கேன்! காரிருள் கவ்வியிருக்கும் இந்தக் குடிசையிலே கதிரவன் உதயமாகப் போகிறான் என்று எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த வேளையில் கையில் ஒரு வளையல்கூட இல்லாமல் இருப்பது முறையா? என்ன ஆனாலும் சரி, இன்று உனக்கு வளையல் வாங்கி வருகிறேன்'' என்று கூறிக் கொண்டே புறப்பட்டான் முனியன்.

இந்த நிகழ்ச்சி முனியனின் மனதில் சதா வட்டமிட்டுக் கொண்டே யிருந்தது. ஒரு சேய்க்குத் தாயாகப் போகிற தன் அருமை மனைவி—ஆசை நாயகி—கையில் ஒரு சாதாரண கண்ணாடி வளையல்கூட இல்லாமல் இருப்பதைக் காண அவனது மனம் வெதும்பிக் கொண்டே யிருந்தது.

அவன் என்ன, ஆறடுக்கு மாளிகை வாசியா, அல்லது ஆலை முதலாளியா. தன் மனைவிக்குத் தங்கத்தால் விதவிதமான வளையல்களைப் பூட்டி மகிழ்வதற்கு! அவைகளை யெல்லாம் கனவில்கூட காணமுடியாத சமுதாயத்தைச் சேர்ந்தவனாயிற்றே! வைரமும், முத்தும் பதித்த வளையல் இல்லாவிட்டாலும், சாதாரண கண்ணாடி வளையலாவது வாங்கிக் கொடுக்கக் கூட வக்கில்லையே என்பதை எண்ணி, அவன் உள்ளம் வேதனை அடைந்தது. வேறு சமயமாக இருந்தாலும் பரவாயில்லை: அஞ்சலை கர்ப்பவதி. மழலை மொழி பேசும் பொற்சித்திரத்தை முதன் முதலாகப் பெற்றெடுக்கப் போகிறாள். வளைகாப்பு நடத்தும் மாளிகை வாசியாக இல்லா விட்டாலும், ஒரு ஜோடி கண்ணாடி வளையலாவது வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்பதை எண்ணிப் பொருமினான். கண்கள் நீரைக் கொட்டக் காத்திருந்தன. அவனுக்கு ஆசைதான் விதவிதமான புடவைகளை உடுத்தி, வைரமும் தங்கமும் மேனி எங்கும் மின்ன, பட்டாம்பூச்சி போல அஞ்சலை பறந்து தன் தோளில் தொத்த வேண்டு மென்று! ஆனால் ஆசைப்படுவதற்குத்தான் அவனால் முடிந்ததே தவிர, அதை நிறைவேற்ற சக்தியும் இல்லை; கதியும் இல்லை. அதற்குக் காரணம் 'விதி' என்று எண்ணி அதன்மேல் பாரத்தைப் போட்டு விடுவான். ஆனால் தலைச்சன் பிள்ளைக்குத் தாயாகப் போகும் அஞ்சலையின் கையில் ஒரு வளையல்கூட இல்லையே என்ற வேதனையை அவனால் தாங்க முடியவில்லை.

கடந்த ஒரு மாத காலமாக அவனைப் பாழும் ஆஸ்த்துமா பற்றிக் கொண்டதால் படுத்த படுக்கையாகக் கிடந்தபோது, அஞ்சலை செய்த பணிவிடைகள் எல்லாம் அவன் நெஞ்சிலே நிழலாட்டம் போட ஆரம்பித்தன. ஆழ் கடலில் மூழ்கி முத்தெடுப்பதைப் போல, அவன் இதயக் கடலில் புதைந்து போயிருந்த

நினைவுகளை எடுக்க ஆரம்பித்தான்!

ஓயாத உழைப்பு — பற்றாத உணவு — இவையிரண்டும் சேர்ந்து முனியனுக்கு ஆஸ்த்துமாவைப்பரிசாகத்தந்தது! அடிக்கடி படுத்த படுக்கையாகி விடுவான். பலமுறை மரண தேவதையின் கால்களை முத்தமிடச் சென்று, மீண்டிருக்கிறான். அவனைச் சாவிலேயிருந்து மீட்டாள் சாவித்திரி அஞ்சலை! அஞ்சலையின் அரவணைப்பும், பணிவிடைகளும் இல்லாமலிருந்திருந்தால் அவன் மண்ணோடு மண்ணுகக் கலந்து நாட்கள் பலவாகியிருக்கும். காலம் தவறாமல் மருந்தும், உணவும் கொடுத்து அவனைக் காலன் வாயிலிருந்து மீட்டாள் அஞ்சலை. விலையுயர்ந்த மருந்துகளையும்—போஷாக்கான உணவையும் வாங்க அவளுக்கு எங்கிருந்துதான் பணம் வந்ததோ? அன்றாடம் ரிக்ஷா இழுத்தால் ஓரளவிற்குதான் வயிற்றை நிரப்பிக்கொள்ள ஊதியம் கிடைக்கும். சில நாட்களில் பசியின் ஜுவாலையை தண்ணீரால் அணைத்து, நட்சத்திரக் கூரையின் கீழே, மண் மாதாவின் மடியிலே புதைந்து கொள்வார்கள். இந்நிலையில் வாடும் அவர்களுக்கு மருந்துவாங்க மார்க்கம் ஏது?

பல முறை அஞ்சலையைக் கேட்டிருக்கிறான் மருந்துகளை வாங்க பணம் ஏது என்று!

"அதைப்பத்தி ஏன் மச்சான் நீ கவலைப்படரே! நீ பிழைச்சி எழுந்தாபோதும்" என்று கண்களில் நீர் ததும்ப பதில் உரைப்பாள் அஞ்சலை!

இதை எல்லாம் நினைக்க நினைக்க, முனியனின் மனம் புயலில் சிக்கிய படகாயிற்று! அவனுக்காக அஞ்சலை செய்துள்ள தியாகத்தை—உழைப்பை எண்ணி மகிழ்ச்சி ஒருபுறமும், அந்த தியாக தேவதைக்கு தன்னால் ஒரு வளையல்கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லையே

'செகரட்ரி வேலை காலி'—என்ற விளம்பரத்தைப் பார்த்து ஒருத்தி பேட்டிக்கு வந்தாள்.

"நான் மிகவும் ஊக்க முள்ளவள். குறுக்கெழுத்துப் போட்டியில் எல்லாம் நான் பரிசுகள் வாங்கியிருக்கிறேன். நான் சிறுகதைகள்கூட எழுதுவேன்"

—முதலாளிக்கு பொறுமையில்லை. உடனே அவர்: "அதெல்லாம் கிடக்கட்டும்! அலுவலக நேரங்களில் உன்னால் சுறு சுறுப்பாய் பணியாற்ற முடியுமா?"

"என்ன அப்படி சொல்லிவிட்டீர்கள்? நான் மேலே குறிப்பிட்ட குறுக்கெழுத்துப் போட்டி; சிறுகதை — இவைகளை யெல்லாம் என் அலுவலக நேரத்தில்தான் சார் சுறு சுறுப்பாக எழுதினேன்!"

—எப்படி, பதில்!

என்ற வேதனை மற்ருேர் புறமும் குடைய ஆரம்பித்தது!

கதிரவன் மேற்கு திசையில் நடை போட்டுக் கொண்டிருந் தான். முனியனின் கால்களும் அவன் குடிசையை நோக்கி ஓடின. அவன் முகத்தில் மகிழ்ச்சியும்—இதழ் ஓரத்தில் புன்னகையும் அரும்பியிருந்தது. அடிக்கொரு முறை அவன் கை மடியைத் தொட்டு பார்த்தது!

இதோ, நொடியில் குடிசையைச் சேர்ந்து விடுவேன்—வழக்கத்திற்குமாருக சீக்கிரமாகத் திரும்பிய என்னை அஞ்சலை கண்டதும் ஏன் என்ற விஞக் குறி அவள் முகத்தில் எழும்! நான் சிரிப்பேன். அவள் ஒன்றும் புரியாமல் திகைப்பாள். அவளது கரும் விழிகள் ஆச்சரியத்தால் விரியும்! 'கையை நீட்டடி என் கட்டிக் கரும்பே' என்பேன். நாணத்தால் அவள் முகம் சிவக்கும். இதழ் விரித்த செந்தாமரை போன்ற அவள் கைகளை நீட்டுவாள். இதோ மடியில் இருக்கும் கண்ணுடி வளையல்களை நான் பூட்டுவேன். மகிழ்ச்சியால் அவள் முகம் மலரும்! என் இதயமும் குளிரும்! பொன்னுர் மேனி குலுங்க அவள் நகை முத்துக்களை சிந்துவாள்—என்றெல்லாம் எண்ணிக் கொண்டே குடிசையை அடைந்தான். ரிக்ஷாவை விட்டு விட்டு, முகத்திலே வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, மடியிலே இருந்த வளையல்களை எடுத்துக் கொண்டே குடிசையின் கதவுகளைத் திறக்க முற்பட்டான்.

குடிசையிலே இருந்து வந்த குரலொலி அவனைத் தடுத்து நிறுத்தியது.

''வேண்டாம்! உன் வளையல் எனக்குத் தேவையில்லை. எடுத்துக் கொண்டு போய்விடு. என்னைத் தொந்திரவு செய்யாதே!''

''ஏன் அஞ்சலை? பிள்ளைத் தாச்சியாக இருக்கிற நீ வளையல் வேண்டாங்கரே!''

''வளையல் வேண்டாமின்னு சொல்லலே; நீ கொண்டு வந்திருக்கிற வளையல் வேண்டாமின்னு சொல்றேன்''

''ஏன்? நான் பணம் கொடுத்தபோதெல்லாம் தாராளமாக வாங்கிக் கொண்டாயே...''

''பணம்—அந்தப் பணம் அப்போது எனக்கு தேவையாக இருந்தது—ஊசலாடிக் கொண்டிருந்த என் அன்புக் கணவரின் உயிரை மீட்பதற்காக என் மானத்தை இழந்து உன்னிடம் பணம் பெற்றேன். என் கணவர் பிழைத்து விட்டார்—இனிமேல் எனக்கு உன் பணம் தேவையில்லை. இன்று......என்னைத் தொட்டுத் தாலிகட்டிய கட்டழகன் பூட்டுவார், விதவிதமான வளையல்களை என் கைகளில்!''

''கணவன்! அஞ்சலை—உன் வயிற்றிலே வளரும் சிசுவுக்கு நான் தந்தை என்பதை மறந்து விட்டாயா?...''

ஆயிரம் ஆயிரம் வேல்கள் முனியனின் இதயத்திலே தைத்தன. அவனது கண்கள் நீர் வீழ்ச்சிகளாயின! அவன் கையிலிருந்த கண்ணுடி வளையல்கள் கீழே விழுந்து, சுக்கல் சுக்கலாக உடைந்து சிதறின!

உயிரோடிருக்கும்போது சோவியத் நாட்டு பத்திரிகைகளாலும், அரசியல் வாதிகளாலும் "புத்திசாலியான ஆசிரியர்; தந்தை; மனித சமுதாயத்தின் நேசர்" என்றெல்லாம் புகழப்பட்ட ஜோசப் விஸ்ஸாரிநோவிச் ஸ்டாலின், உயிர் துறந்த மூன்றாவது ஆண்டிலேயே 'கொள்ளைக்காரர்' என்றும், 'கொலைகாரர்' என்றும் கூறத் தக்கவராகி விட்டார்.

அவர் உயிரோடிருந்தபோது அவரைப் பற்றி புகழாதவர்களே சோவியத்தில் கிடையாது.

அவருடைய உருவப் படம் எங்கும் இருந்தது. ரஷ்யாவிலிருந்த தொழிற்சாலையொன்று தினந்தோறும் 'பிளாஸ்டிக்'கால் ஆன ஸ்டாலினது சிலைகளையே தயாரித்து வந்தது. ஆலைகளில், பள்ளிகளில், அலுவலகங்களில், வீடுகளில் எல்லாம் அவருடைய புகைப் படம் தொங்கியது. வால்கா—டான் கால்வாயின் நுழைவு வாசலில் 35 டன்கள் நிறை கொண்ட ஸ்டாலினின் செப்புச் சிலையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மாஸ்கோ பாதாள ரயில் நிலையத்தில் சலவைக் கல்லால் அவருடைய சிலை பிர்மாண்டமான அளவில் வைக்கப்பட்டிருந்தது.

ஹங்கேரி நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி எல்லா மருத்துவ மனைகளிலும் ஸ்டாலினுடைய திருவுருவப் படம் வைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டார்; "வியாதியஸ்தர்களின் ஆத்மாவுக்கும், ஸ்டாலினுடைய ஆத்மாவிற்கும் தொடர்பு ஏற்



ஸ்டாலின் வீழ்ச்சி!

படுவது மிகவும் அவசிய மென்றும்'' அவர் கூறினர்.

லெனின் இறந்த பிறகுதான் அவர் பெயரிலே லெனின் கிராட் என்ற நகரம் அமைக்கப் பட்டது. ஆனல் ஸ்டாலினின் ஜீவிய காலத்திலேயே அவரு டைய பெயரில் ஒரு ஸ்டாலின் கிராட்; ஒரு ஸ்டாலினபாத்; ஒரு ஸ்டாலினிர்; ஒரு ஸ்டாலி னிஸ்ஸி; ஒரு ஸ்டாலின்கா; ஒரு ஸ்டாலினோகார்ஸ்க்; இரு ஸ்டாலின்ஸ்க்; இரு ஸ்டாலின் கோயிஸ்; மூன்று ஸ்டாலினி கிஸ் நிறுவப்பட்டிருந்தன. அவ ருடைய பெயரில் அமைந்த ஏராளமான தெருக்கள், கடை கள், கப்பல்கள், பாலங்கள், கூட்டுப் பண்ணைகள் ஆகியவை களைத் தவிர, ஸ்டாலினே என்ற பெயரில் நான்கு நகர்களும் இருந்தன.

எந்தவித சொற்பொழிவா யிருந்தாலும், அவைகளை யெல் லாம் "நம்முடைய பிரிய முடைய காம்ரேட் ஸ்டாலின் அநேக, அநேக ஆண்டுகள் பெரு மகிழ்ச்சியுடன் வாழட் டும்!'' என்ற கோஷத்துட னேயே முடிப்பார்கள்.

அகதி ஒருவர் கூறியதைப் போல கூட்டுப் பண்ணையிலே யுள்ள 'கிளப்' ஒன்றில் பத்து கிராமபோன் 'ரிக்கார்டு'களில் ஸ்டாலினுடைய பதிவு செய்யப் பட்ட சொற்பொழிவு இருந்த தாம். அந்தப் பத்து ரிக்கார்டு களின் 19 பக்கங்களிலும் ஸ்டாலினுடைய பேச்சைக் கேட்கலாம். இருபதாவது பக் கத்திலோ அவரது பேச்சு முடிவுற்ற பிறகு மக்கள் எழுப் பிய "தொடர்ந்த, இடி போன்ற'' கைதட்டல் ஒலியே பதிவு செய்யப்பட்டிருந்ததாம்.

○

'எக்கனமிக் லைப்' என்ற ஏடு ஸ்டாலினை "பூலோகத்தின் வாலிபர்'' என்று வர்ணித் திருந் தது. அரசாங்கப் பத்திரிகை யான 'இஸ்வெஸ்டியா' அவரு டைய தோற்றத்தை வசந்த காலத்தோடு ஒப்பிட்டிருந்தது. 'பிரண்ட் அண்டு கல்ச்சர்' என்ற ஏடு அவரை சாக்ரட்டீ சோடு ஒப்பிட்டிருந்தது; பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் அவரை "எந் தக் காலத்திலும், எந்த நாட்டி லும் பெரிய விஞ்ஞானத் தலை வர்'' எனப் புகழ்ந்தார்.

யுத்தத்தை வென்ற பெருமை யும் அவருக்கே சேர்க்கப்பட் டிருந்தது. மாலட்டோவின் வாசகப்படி "தனிப்பட்ட முறையில் ஸ்டாலின்தான் ரஷ்ய நாட்டை வெற்றிக்கு நடத்திச் சென்றவர்.'' 1949-ம் ஆண்டு ஸ்டாலினுடைய எழுபதாவது பிறந்த நாளின்போது சுப்ரீம் சோவியத் சபை கூடி, அவரை "எந்தக் காலத்திலும், எல்லா மக்களுக்கும் தலை சிறந்த இராணுவத் தலைவர்''—என்று அழைத்தது.

○

பள்ளி மாணவன் ஒருவன் கீழ்க் கண்டவாறு கூறுவதாக மாஸ்கோ ரேடியோ ஒலிபரப் பியது:

"எல்லோரையும் போலவே அவர் (ஸ்டாலின்) தூங்குவார்

என்பதை என்னல் நம்பமுடிய வில்லை. ஒவ்வொரு தடவை சூரியன் உதயமாகும்போதும் ஸ்டாலின்தான் பித்தானை அமுக்கி, உலகமெங்கும் வெளிச்சத்தைப் பரவச் செய்கிருர்—என்றுதான் நான் நினைக்கிறேன்.''

''அமரத்துவத்தின் மறு பெயரே; நீதான் ஸ்டாலின்!'' —என்று பிரேக் ரேடியே ஒலி பரப்பியது.

○

புல்கானின்கூட ''ஹுர்ரா! நம்முடைய தலைவரும், எஜமானருமான மகா ஸ்டாலின் நீடூழி வாழ்க!''—என்று முழங்கியிருக்கிருர்.

''நன்றியுடைய வருங்கால சந்ததி உம்முடைய பெயரைப் பெருமைப் படுத்தும்''—என்று மெலங்கோவ் குறிப்பிட்டார்.

இன்று அவர்மீது இழிமொழிகளைத் தூவும் குருஷேவ், ''கட்சிக்கும், மக்களுக்கும் வாய்த்த விவேகமுள்ள தலைவரும், எல்லா வெற்றிகளின் தூண்டுகோலும், காரணகர்த்தாவுமான காம்ரேட் ஸ்டாலின் நீடூழி வாழ்க!''—என கோஷித்திருக்கிருர்.

''தனி நபர் வழிபாட்டை'' ஆவன செய்ததாக இன்று குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஸ்டாலினுடைய எழுபதாவது பிறந்ததின விழாவின் போது, கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததாவது:

''எல்லா வருங்கால சந்ததியினரும் உன்னுடைய (ஸ்டாலின்) பெயரை பெருமைப் படுத்துவர். விஞ்ஞானத் தலைவரே! கம்யூனிஸத்தின் மகத்தான சிற்பியே! கல்விமானே! வழிகாட்டியே! உற்றநண்பரே! உலகத்திலுள்ள கோடிக் கணக்கான தொழிலாளர்களின் உள்ளங்கள் உன்மீது கொண்டுள்ள காதலால் வழிந்து நிற்கின்றன!''

—இந்த அறிக்கையில் குருஷேஷ், புல்கானின், மிகோயான் போன்ற தலைவர்களும் கையெழுத்திட்டிருந்தனர்.

இறுதியில் அவர் இறந்தார். (தலையணையால் அமுக்கப்பட்டு மூச்சு விடமுடியாமல் செத்தார் —என்றும் சிலர் கூறுகின்றனர்.)

''போய்வா, என் ஆருயிர்த் தோழனே!'' — என்று பெருமூச்சு விட்டார், மெலன்கோவ்.

''இன்று கொடுமையான சோகத்துக்கு ஆளாகியிருக்கிருேம்,''—என்று கூறி மாலட்டோவ் அழுதார்.

ஆனல் சென்ற பிப்ரவரி மாதத்திலோ ஸ்டாலின் கடுமையாகத் தாக்கப்பட்டார், திடீரென்று!

குருஷேவ் ஸ்டாலினை சரித்திரப் பிரசித்தி பெற்ற குற்றவாளி என்று இகழ்ந்தார்! அன்று புகழ் பாடிய புல்கானின், மிகோயான், மெலங்கோவ் போன்ருேரும் இந்த 'ஸ்டாலின் அழிப்புப் படல'த்தில் சேர்ந்து கொண்டனர்.

○

('ரீடர்ஸ் டைஜஸ்ட்'டில் ராபர்ட் விட்டெல் எனபவர் எழுதிய கட்டுரையின் சுருக்கப்பட்ட சில பகுதிகள்!)

உண்மையும் பொய்யும்

நகரத்தைச் சேர்ந்த ஒரு மனிதனுக்கு அழகான மனைவி ஒருத்தி இருந்தாள். அவள்மீது அவனுக்கு எப்போதுமே சந்தேகம். அவளுடைய அழகை தான்மட்டுந்தான் அனுபவிக்கிறோமா என்று! காலையில் அவன் வெளியில் போய்விட்டால், சாயங்காலம்தானே வருகிறன்? அதற்குள் வீட்டில் ஏதாவது நடந்திருந்தால்? அதைப் பற்றியெல்லாம் அவனுக்கு யார் சொல்வது?

நன்ருகப் பேசக்கூடிய கிளி ஒன்றை வாங்கி வந்து வீட்டில் ஒரு பக்கத்தில் கூண்டில் அடைத்து வைத்தான். தான் இல்லாதபோது வீட்டில் என்னென்ன நடக்கிறது என்பதை கிளி கவனித்துக் கொண்டிருந்து, திரும்பி வந்தவுடன் அவனிடம் எல்லாவற்றையும் ஒப்புவிக்க வேண்டும் என்று ஏற்பாடு. இதைப் பற்றி மனைவிக்கு எதுவுமே தெரியாது.

வழக்கம்போல் தன் கணவன் போனவுடன் அவள் தன் காதலனை வரவழைத்து அவனுடன் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள். கிளி எல்லாவற்றையும் ஒன்று விடாமல் கவனித்துக் கொண்டிருந்தது. வீட்டு எஜமானன் மாலையில் வந்தவுடன் கிளியை தனியாக எடுத்துக் கொண்டு போய் கேட்கவே, பார்த்ததையும், கேட்டதையும் பாக்கி விடாமல் அது ஒப்புவித்தது.

உண்மையை அறியும்போது எந்தக் கணவன்தான் கோபப்படாமல் இருப்பான்? மனைவியை கண்டபடி திட்டி, வீட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவு பிறப்பித்தான். அவள் அவ்வளவு சீக்கிரம் போய் விடுவாளா?

"வீட்டில் நடந்தவைகளை நீயா என் கணவனிடம் சொன்னுய்?" என்று வேலைக்காரியை மிரட்டினுள். அவளுக்கென்ன தெரியும்? மேலும் அவள் ஒரு விசுவாசமுள்ள வேலைக்காரி ஆயிற்றே!

தான் ஒன்றும் வீட்டு எஜமானனிடம் சொல்லவில்லை யென்றும், அவருக்கு கிளி மூலமாகத்தான் நடந்தவை தெரிந்திருக்க வேண்டுமென்றும் வேலைக்காரி சொன்னுள்.

'அதிகமான்'

இரவின் ஆரம்பம். கணவன், வீட்டில் ஏற்பட்ட அவமானத்தினல்—எங்கோ வெளியில் போய் விட்டான். அழகி, கிளிக் கூண்டின்மீது ஒரு துணியைப் போட்டுவிட்டு அதன்மீது தண்ணீரைக் கொட்டினுள். விளக்கு வெளிச்சத்தை கண்ணுடி மூலம் இப்படியும் அப்படியும் சிதற

வைத்தாள். வேறொரு பக்கம் இடி போன்ற சப்தம் — இரவு பூராவும் இதே வேலையை நடத்தினாள். கிளிக்கு வெளியில் இடியும் மின்னலுமாக மழை பெய்கிறது என்ற நினைப்பு ஏற்பட வேண்டும் என்று அவள் நினைத்தாள். அவள் தந்திரம் பயனளித்தது.

காலையில் வீடு திரும்பிய எஜமானன், மனைவி இன்னும் வீட்டை விட்டு வெளியேறாததால் ஏதாவது விசேஷம் இருக்கலாம் என்று கிளியைக் கேட்டான்.

“என்ன போங்கள், இரவு பூராவும் ஒரே மழை, இடி, மின்னல்—என்றால் ஒன்றையும் கவனிக்க முடியவில்லை!” என்றது கிளி மிகவும் வருத்தத்தோடு! எஜமானன் ஆச்சரியம் அடைந்தான். இரவு ஏது மழை?

கிளி இப்படிப் பொய் பேசுகிறதே: இதைப் போலத்தான் தன் மனைவியின்மீதும் குற்றம் சொல்லியிருக்குமோ?

“பொய்யா பேசுகிறாய்? வீணாக என் மனைவியின்மீது பழியைப் போட்டாயே!” என்று கிளியைக் கொன்று விட்டான்.

அதற்குப் பிறகு கணவனும் மனைவியும் இன்பமாக(!) வாழ்ந்தார்கள்.

புத்திசாலிகள் எங்கும் பிழைத்துக் கொள்ளுவார்கள் என்பது புத்திமதி! ●

(அராபியக் கதையைத் தழுவியது)

உலகத்தைப் பற்றி...

● ஒழுக்கத்தைப் பற்றி நன்கறிந்து கொண்டவனே உலகத்தின் அறிவை நன்கறிந்தவனாவான். —வில்ஸ்வர்த்.

● உலக அறிவு என்பது மனிதர்கள் தவறுகளை அறிவதேயாகும். —சார்லஸ் டிக்கன்ஸ்.

● உலகம் என்பது ஒரு நாடக மேடை. அதில் நாம் எல்லோரும் நடிகர்கள். —ஷேக்ஸ்பியர்.

● “நேற்றிருந்தவர் இன்றில்லை,” என்னும் பெருமையை உடையதே உலகம். —வள்ளுவர்.

தொகுப்பு: திருச்சி வி. இராசாராம்.

வியாபாரத் தொடர்புக்காக கிழக்கிந்தியக் கம்பெனி ஊழியர்கள், தென்னாட்டு மொழிகளைக் கற்ற காலம் ஒன்று. மக்களுடன் நெருங்கிப் பழகி சமயப் பிரச்சாரம் செய்ய பாதிரிமார்கள், மொழிகளைக் கற்ற காலம் ஒன்று. தென்னாட்டு மக்களின் கலை—பண்பாடு மொழிகளை ஆராய பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் திராவிட மொழிப் பிரிவு ஏற்பட்ட காலம் ஒன்று. ஆரம்ப காலத்தில் கிழக் கிந்தியக் கம்பெனி ஊழியர்கள் வியாபாரத் தொடர்புக்காகவே தென்னாட்டு மொழிகளைப் பயின்றார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் தென்னாட்டு அரசியலிலும், அரசியல் போராட்டங்களிலும் பிரிட்டிஷார் சிக்கிக் கொள்ள நேர்ந்தது.

திராவிட மொழிகளை முறையாகக் கற்பதில் ஆர்வம் காட்டியவர் ஜோஸப் பெஷி என்ற இத்தாலியப் பாதிரி. இவர் 1728-ல் தமிழ் இலக்கணம் பற்றி லத்தீன் மொழியில் ஒரு நூலை வெளியிட்டார். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் பிரிட்டிஷாருக்கு மொழியார்வம் ஏற்பட்டது. ராபர்ட் ஓர்ம் என்பவர் தென்னாட்டில் பல ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்துக் கொண்டு, 1763-ல் சென்னையிலிருந்து இங்கிலாந்திற்குப் புறப்பட்டார்.

காலின் மெக்கன்ஸி செய்த சேவை போற்றற்கரியது. அவர் பல ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்துத் தொகுத்தார். ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். மெக்கன்ஸி சேகரித்த நூல்களில் பெரும் பகுதியை இன்று சென்னையிலுள்ள கீழ்த்திசைச் சுவடிகள் நிலையத்தில் (ஓரியண்டல் மானுஸ்கிரிப்ட் லைப்ரேரி) காணலாம்.

மெக்கன்ஸி 1754-ல் ஸ்டோன்வோ என்னுமிடத்தில் பிறந்தார். இந்தியக் கணித முறையைப் பற்றி—குறிப்பாக

தமிழும்

லாகரிதம் பற்றி—ஆராய நேபியர் பிரபு அவரை அழைத்தார். மெக்கன்ஸியின் உழைப்பைப் பற்றி இந்தக் கட்டுரையில் விவரிக்க இடமில்லை. மெக்கன்ஸி 1783-ல் சென்னைக்கு வந்தார். சுமார் 33 ஆண்டுகள் தமிழ் நாட்டில் வாழ்ந்தார். அவர் பல பதவிகளை வகித்தார். பல நூல்களைத் தொகுத்தார். 1815-ல் சர்க்கார் அவரை ஸர்வேயர் ஜெனரலாக நியமித்தது.

மெக்கன்ஸி சென்னைக்கு வந்ததும் தமக்கேற்ற இடம் மதுரை என்று நிச்சயித்துக் கொண்டார். மதுரையில் நேபியர் பிரபுவின் மருமகன் ஸாமுவேல் ஜான்ஸன் வசித்துக் கொண்டிருந்தார். அவருடைய உதவியால் மெக்கன்ஸிக்கு புலவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. கையில் கிடைத்த ஏடுகளை எல்லாம் அவர் சேகரித்தார். நாட்டின் வரலாறு கூறும்

ஆதாரங்களைச் சேகரித்தார். ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ மெக்கன்ஸியைப் போல வரலாற்று ஆதாரங்களைச் சேகரித்தவர் எவருமில்லை.

வடமொழி, பாரசிகம், அரபு, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி நூல்களை மெக்கன்ஸி வாங்கினர். வடமொழி, பாரசிகம், அரபு நூல்கள் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. தென்னிந்திய மொழி நூல்கள் சென்னையிலேயே தங்கிவிட்டன.

ஆங்கிலேயரும்

1821-ல் மெக்கன்ஸி காலமானார். அவர் சேகரித்த நூல்களை கிழக்கிந்தியக் கம்பெனி வாங்கிற்று. வடமொழியில் வல்லுநரான எச். எச். வில்ஸன் அவற்றை வகைப்படுத்தி ஒரு பட்டியலைத் தயாரித்தார். அந்த நூல்களை சென்னைக் கல்லூரி நூல் நிலையத்தில் வைத்திருந்தார்கள். 1836-ல் பூஜ்யர் வில்லியம் டாய்லர் என்பவர் அவற்றை ஆராய்ந்தார். அதன் பிறகு தீவிரமாக எவரும் ஆராயவில்லை. பிற்காலத்தில் அந்த நூல்களை தனி நிலையத்தில் வைத்துக் காத்தார்கள். இப்போது கீழ்த்திசைச் சுவடிகள் நிலையத்தில் அவை உள. மெக்கன்ஸி தொகுப்பில் 192 தமிழ்ச் சுவடிகளும், 158 தெலுங்குச் சுவடிகளும், 130 கன்னடச் சுவடிகளும், 6 மலையாளச் சுவடிகளும் உள.

தமிழ்நாட்டின் சிறப்பைக் கூறும் முதல் கட்டுரை 1788-ல் 'ஏஷியாடிக் ரிசர்ச்சிஸ்' என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. மாமல்லபுரத்தின் சிறப்பைக் கூறும் கட்டுரையை வில்லியம் சேம்பர்ஸ் என்பவர் எழுதினர். திராவிட மொழிகளைப் பற்றி ஒரு குறிப்பை 1801-ல் கோல்பருக்ஸ் என்பவர் 'ஏஷியாடிக் ரிசர்ச்சிஸ்'ஸில் எழுதினர்.

ராபர்ட் டிரம்மண்ட் மலையாள மொழியைக் கற்று, ஆங்கிலத்தில் அதன் இலக்கணத்தை எழுதினர். 1799-ல் அது பம்பாயில் பிரசுரமாயிற்று. திராவிட மொழியைப் பற்றி முதல் முதலாக ஆங்கிலத்தில் வெளிவந்த நூல் அது. வங்க—சமஸ்கிருத இலக்கியங்களை ஆராய்ந்து புகழ் பெற்ற வில்லியம் காரி தெலுங்கு மொழியைக் கற்று அதன் இலக்கணம் பற்றி ஆங்கிலத்தில் ஒரு நூலை வெளியிட்டார். இது ஸ்ரீராம்பூரில் 1814-ல் பிரசுரிக்கப்பட்டது. ஏறத்தாழ அதே சமயத்தில் அலெக்ஸாண்டர் டங்கன் காம்பெலும் ஆங்கிலத்தில் தெலுங்கு இலக்கண நூலை வெளியிட்டார். அதன் முன்னு

லண்டன், கீழ்த்திசைக் கல்லூரி, தமிழ் விரிவுரையாளர் ஜான் மார் எழுதிய கட்டுரையின் சுருக்கம் – சிங்கை 'தமிழ்முரசு' ஏட்டிலிருந்து எடுக்கப் பட்டது.

ரையில் திராவிட மொழிகளுக்குள் காணும் ஒற்றுமையையும், வடமொழியிலிருந்து அவை வேறுபட்டிருப்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நூலின் இரண்டாம் பதிப்பு 1820-ல் வெளிவந்தது. திராவிட மொழியியலில் அக்கறை கொண்ட முதல் ஆங்கிலேயர் காம்பெல் தான். ஜான் மெக்கரல் 1820-ல் கன்னட இலக்கணத்தை வெளியிட்டார்.

தமிழ் மொழியில் ஆர்வமுள்ள பெஷி (வீரமாமுனிவர்) 1728-ல் தமிழ் இலக்கணம் பற்றி லத்தீன் மொழியில் ஒரு நூலை எழுதினார். அந்த நூலை மொழியியலில் ஆர்வமுள்ள ஐரோப்பியர்கள் விரும்பிப் படித்தார்கள். ஐரோப்பியர்களுக்கு லத்தீன் மொழியில் பரிச்சயமிருந்ததால், ஆங்கில நூலுக்கு அவசியமேற்படவில்லை. 1822-ல் மூல நூல் வெளிவந்து நூறு ஆண்டுகளுக்குப் பின், பாமிங்டன் என்பவர் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல ஐரோப்பியர்கள் திராவிட மொழிகளைக் கற்பதிலும் அகராதிகளைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டார்கள். பல நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள்.

1821-ல் அலெக்ஸாண்டர் காம்பெல் தெலுங்கு—ஆங்கில அகராதியை வெளியிட்டார். இதுதான் தென்னாட்டு மொழிகளில் வெளிவந்த முதல் அகராதி. 1824-ல் ரீவ்ஸ் ஆங்கில—கன்னட அகராதியைத் தயாரித்தார்.

ஆங்கிலம்-தெலுங்கு அகராதியையும், தெலுங்கு—ஆங்கில அகராதியையும் 1852-ல் ஸி. பி. பிரௌன் வெளியிட்டார். தெலுங்கு மொழியில் பிரமாண நூல்கள் வரிசையில் இவை சேர்ந்துவிட்டன. இவற்றின் திருத்தப்பட்ட மறு பதிப்புகள் 1895-லும், 1903-லும் வெளிவந்தன. பூஜ்யர் பெய்லி 1846-ல் கோட்டையத்தில் மலையாள—ஆங்கில அகராதியை வெளியிட்டார்.

ஔவையார் அருளிச் செய்த நீதி நூற்களை பூஜ்யர் ஜான் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவை 1801-ல் 'ஏஷியாடிக் ரிசர்ச்சஸ்' என்ற சஞ்சிகையில் வெளிவந்தன. அதற்கு முன்பே திருக்குறளை லத்தீன் மொழியில் பெஷி வெளியிட்டுவிட்டார். இதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, 1816-ல் வெளியிட்டார்கள். போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கல்லூரியை நிறுவிய எல்லிஸ் என்பவரே ஆங்கில மொழி பெயர்ப்பை வெளியிட்டவர். மெக்கன்ஸி சேகரித்த ஏடுகளை ஆராய்ந்த பூஜ்யர் வில்லியம் டாய்லர் திருவிளையாடல் புராணத்தையும், மதுரையின் சிறப்பைக் கூறும் வேறு பல நூல்களையும் ஆங்கிலத்தில் வெளியிட்டார். ஜி. யூ. போப் மாணிக்கவாசகரின் திருவாசகத்தையும், திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.

திருநெல்வேலியில் சமயப் பணி செய்யவந்த பூஜ்யர் கால்டுவெல் தமிழ் மொழியில் ஈடுபாடு கொண்டார். அவர் எழுதிய

ஒப்பியல் இலக்கணம் இன்றும் போற்றப்படுகிறது. இந்த நூல் 1856-ல் வெளிவந்து, 1875-ல் மறுபதிப்பு வெளியாயிற்று.

பூஜ்யர் கால்டுவெல் 1833-ல் இந்தியாவுக்கு வந்தார். 1877-ல் திருநெல்வேலி மேற்றிராணியாராகப் பதவியேற்ருர். விவிலிய வேதத்தை தமிழில் எழுதியவரும் அவரே.

கால்டுவெலைப்போலச் சிறப்பாகத் தமிழ்த் தொண்டு செய்த மற்ருேர் ஆங்கிலேயர் ஜி. யூ. போப். இவர் 1820-ல் நோவாஸ் கோஷியாவில் பிறந்தார். சமயப் பணி செய்ய 1839-ல் சென்னைக்கு வந்தார். கப்பல் பிரயாணம் செய்யும்போதே தமிழ் மொழியைக் கற்ருர். 1859-ல் உதகமண்டலத்தில் ஒருபள்ளிக்கூடத்தை நிறுவினர். 1880-ல் தாய்நாடு திரும்பினர்.

பிரிட்டிஷ் பல்கலைக் கழகமொன்றில் தமிழுக்கு இடந் தேடித் தந்தவர் போப். தமிழ் மொழி-இலக்கியத் துறைகளில் நல்ல ஆராய்ச்சியுள்ள போப் அவர்களை, 1884-ல் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ்—தெலுங்கு போதகாசிரியராக நியமித்தார்கள். 1906-ல் ராயல் ஏஷியாடிக் கழகம் போப் அவர்களுக்குத் தங்கப் பதக்கமளித்துக் கவுரவித்தது.

போப் எழுதிய தமிழ்க் கையேடு 1855-ல் வெளிவந்தது. அதை எல்லோரும் விரும்பிப் படித்ததால் ஏழு பதிப்புகள் வெளிவந்தன. திருக்குறளையும் திருவாசகத்தையும் போப் அழகாக மொழிபெயர்த்திருக்கிருர். பூஜ்யர் ஆர்டன் தமிழ், தெலுங்கு மொழிகளைக் கற்று இலக்கணம் எழுதினர். 1873-ல் தெலுங்கு இலக்கணமும், 1891-ல் தமிழ் இலக்கணமும் வெளிவந்தன. டாக்டர் பார்னெட் திராவிட மொழிகளில் வல்லவர். போப் அவர்களின் துணைகொண்டு அவர் பிரிட்டிஷ் சுவடி நிலையத்திலுள்ள தமிழ் நூல்களை வகைப்படுத்தி, 1909-ல் ஒரு பட்டியலை வெளியிட்டார். 1910-ல் கன்னட நூல்களின் பட்டியலையும்,

இரத்த தானம்!

1912-ல் தெலுங்கு நூல்களின் பட்டியலையும் தயாரித்தார்.

பிரிட்டனில் வடமொழிக்குள்ள செல்வாக்கு திராவிட மொழிகளுக்கு இல்லை. லண்டன் பல்கலைக் கழகம்தான் தமிழ் மொழி போதிப்பதில் தனி அக்கறை காட்டுகிறது. லண்டனிலுள்ள கீழ்த்திசை—ஆப்பிரிக்க கலை—மொழிகள் பள்ளியின் பாடத் திட்டத்தில் தமிழ் இடம் பெற்றிருக்கிறது. சி. எஸ். கே. பதி பூஜ்யர், கார்டன் மாத்யூஸ் முதலிய பெரியார்கள் இந்தப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார்கள். பூஜ்யர் மாத்யூஸ் சிவஞான போதத்தை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். இந்த நூல் 1946-ல் வெளி வந்தது.

சென்ற யுத்தத்திற்குப் பிறகு எம். எஸ். எச். தாம்சன் இந்தப் பள்ளியில் ஆசிரியர் பதவி ஏற்றதும் தமிழுக்கு யோகம் பிறந்தது. பலருக்கு தமிழ் மொழியில் ஆர்வம் ஏற்பட்டது. தாம்ஸன் தென்னாட்டில் நீண்ட காலம் கல்விப் பணி புரிந்தவர். காலஞ்சென்ற ஷண்முகம் பிள்ளை அவர்களிடமும், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களிடமும் தமிழ்ப் பாடம் கேட்டவர். வித்வான் பட்டம் பெற்றவர். தெலுங்கிலும் பாண்டித்தியமுள்ளவர். 1953-ல் இவர் பதவியிலிருந்து விலகி மொழியாராச்சியில் ஈடுபட்டார்.

இந்தப் பள்ளியின் மொழியாராச்சித் துறையில் திராவிட மொழிகளுக்கு முக்கிய இடமுண்டு. தமிழ்ப் பகுதித் தலைவராக டாக்டர் ஆஷர் பணியாற்றுகிறார். மலையாளம்—கன்னட மொழிகள் பகுதித் தலைவியாக திருமதி விட்லி பணியாற்றுகிறார். மொழியியலில் சிறந்த அறிவுடையவர் இவர்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் வடமொழிப் பேராசிரியராக பணியாற்றும் பர்ரோ திராவிட மொழியாராச்சியில் ஈடுபாடுடையவர். அவர் திராவிட மொழி அகராதி ஒன்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்தியாவின் இலக்கியம், பண்பாடு, கலை, வரலாறு முதலியவற்றில் தென்னாட்டுக்கு முக்கிய இடம் உண்டு. தென்னாட்டு மொழி, கலை, இலக்கியம் முதலியவற்றை அறிவதில் வெளிநாட்டார் ஆர்வம் பெருகி வருகிறது. தென்னாட்டு மொழி இலக்கியம் பற்றி பிரிட்டிஷார் எழுதும் நூல்களை வரவேற்கும் நாளும், பிரிட்டனிலுள்ள சுவடிகளை ஆராயத் தென்னாட்டுப் புலவர்கள் வரும் நாளும் அண்மையிலுள. பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும், கீழ்த்திசைக் கலை நூல் நிலையங்களிலும் திராவிட மொழி—இலக்கிய நூல்கள் இருக்கின்றன. அவற்றைப் பரிசோதிக்க தென்னாட்டு மொழியாராச்சியாளர் வரவேண்டும். ●

> ஒழுக்கம் என்பது தீமையைத் தவிர்ப்பதல்ல; அதை விரும்பாமல் இருப்பதுதான்!
>
> —பெர்னாட்ஷா.

மங்கலான மாலை நேரம்... ஏழைக் குடிசை ஒன்றில் கந்தல் ஆடையை சுற்றிக்கொண்டு, கிழிந்த பாயின்மீது பசி போகா வயிற்றோடு படுத்துள்ள மனைவி ...அவள் மார்பை ஒட்டிய வாறே பசி மயக்கத்தால் உறங்கும் எலும்புக் குழந்தை......... இந்த காட்சியைக் கண்ட வாறே உட்கார்ந்திருந்தான் மூன்று நாளாய் காற்றையும், நீரையும் உட்கொண்டு காலங் கழித்துவரும் கந்தன்! அவன் சோம்பேறி யல்ல......எனினும் வேலை தருவோர் எவருமில்லை. விடிந்ததும் அவனும் அவன் மகன் மாணிக்கமும் வேலை தேடி அலைந்துவிட்டு, கிடைக்க வில்லை என்ற பதிலைக் காட்டும் கவலை தோய்ந்த முகத்தோடு, மாலை திரும்புவதுமாய் இருந்தனர்.

'வறுமை' விலங்கு பூட்டப்பட்ட கந்தன் தன் மனைவியைப் பார்த்தான்......அப்போது அவளும் அவனைப் பார்த்தாள்.

'பசி' அரித்து விட்டு மிச்சம் விட்டுள்ள எலும்புக் கூட்டின் பார்வையில் தோய்ந்துள்ள ஏக்கம்...வேதனை...கவலை அவனை வேல்கொண்டு குத்தின. அவள் பார்வை குழந்தைமேல் விழுந்தது....அவனும் பார்த்தான்... சுருக்கம் விழுந்த வயிரோடு மயக்கத்தில் ஆழ்ந்துள்ள எலும்புக்கூடு, "உங்கள் வயிற்றில் பிறந்ததைவிட நாயின் வயிற்றில் பிறந்திருந்தால் தாய்ப்பாலாவது கிடைத்திருக்கும்" என்று சொல்வதுபோல் தோன்றியது. அவன் நெஞ்சில் காய்ச்சிய கம்பியை சொருகினாற்

போல் துடித்தான்!...மீண்டும் அவன் மனைவி அவனைப் பார்த்தாள்......'குழந்தையின் நிலை மோசமாக உள்ளது...பசியால் துடிதுடித்து சாகவோ நம் வயிற்றில் பிறந்தது...ஐயோ ... தாய்ப் பாலும் இல்லாத பாவியின் வயிற்றில் பிறந்ததே' என்று அந்தப் பார்வை சொல்வதுபோல் தோன்றியது. அவன் அம்பு தைத்த வெண்புருவானன். இந்த சோகக் காட்சியைக் காண சகிக்காது, தன் தங்கைக்குப் பால் வாங்கவாவது காசு கிடைக்காதா—என்ற கவலையோடு வெளியே போய் விட்டான் மாணிக்கம்!

மாணிக்கத்துக்கும் கைக் குழந்தைக்கும் இடையிலே இருந்த இரண்டு குழந்தைகளை 'பசி' பலி வாங்கி விட்டது... இதோ, இப்போது ஒன்று ...... என் செய்வான் கந்தன்? குற்றம் புரிந்திடாத கரங்கள்; பொய் பேசி அறியாத வாய்; வஞ்சகம் எண்ணி அறியாத நெஞ்சம்... இவைகள்தான் அவன் சொத்துக்கள்! எனினும் வறுமையின் வேலியை அவனால் தாண்ட முடியவில்லை......ஆனால் பிள்ளையார் கோயில் போகத் தவறியதில்லை! அவன் கரம் குற்றம் செய்ததில்லை...ஆனாலும் கடவுளைக் கும்பிட அவன் தவறியதில்லை! எனினும் பசியை அவனால் விரட்ட முடியவில்லை! தன் கண் எதிரிலேயே குழந்தைகள் பசியால் துடித்து சாவதை அவனால் தவிர்க்க முடியவில்லை! 'அப்பா...அப்பா' என்று குழந்தைகள் செத்து மடிந்த சோக நினைவுகள் அவன் கண்முன் தோன்றின...அடுத்து மரணக் குழியை நெருங்கும் பச்சிளங் குழந்தை அவன் பார்வையில் பட்டது! அவன் நெஞ்சம் ஓர் போராட்டக் களமாகியது!

'என்ன செய்வது? குழந்தையைக் காப்பாற்ற பால் வேண்டும்...பால் வாங்க பணம் வேண்டும்...எங்கே போவது? இந்த நிலை இரண்டு நாளைக்கு நீடித்தால் போதும்; மனைவியும் மண் குழி சேர்ந்திடுவாளே!... ஐயோ...கொடியசாவே, உனக்குக் கருணை யில் லை யா ?...... இரண்டு குழந்தைகள் முன்பு; இதோ, இன்று மூன்றாவது!... இல்லை, இல்லை...இந்தக் கொடுமையை என்னால் தாங்க முடியாது! என்ன செய்வது? கடன் கொடுப்பார் எவரும் இலர். ஆதரிக்கும் அன்புக் கரம் எதுவுமே இல்லை! பின் எப்படிக் காப்பாற்றுவது? திருடலாமா? பாபமல்லவா? குழந்தைகளைப் பசியால் துடிக்க துடிக்கச் சாக விடுவதைவிட பெரிய பாபமா?......இல்லை!...'' என்று எழுந்தான்......ஆனாலும் பயம் அவனைத் தடுத்தது! தயங்கி நின்றான். ''இதுவரையில் 'திருடன்' என்று பெயர் எடுத்ததில்லையே; இதுவரை இந்த நிலை ஏற்படவில்லையே!... அகப்பட்டுக் கொண்டால் சிறை; திருடாவிட்டால் கல்லறை! அகப்படாமல் வந்துவிட்டால்...'' என்று அவன் நெஞ்சம் சொல்லியது......புறப்பட்டான்!

அவன் மனைவி 'எங்கே'

என்று கேட்பதுபோல் கை சாடை காட்டினுள்... "இந்த வேதனையை என்னுல் தாள முடியாது...இதற்கு ஒரு பரிகாரம் தேடியே ஆகவேண்டும்" என்று கூறி மூலையில் கிடந்த தடியை எடுத்துக் கொண்டு ஓடினுன்!

வானத்து வாடா மலர்களை மேகம் மறைத்து விட்டிருந்ததால் காரிருள் உலகைப் போர்த்தி யிருந்தது. எனினும் கந்தனின் கால்கள் வேகமாக நடந்தவண்ணமிருந்தன! உள்ளத்தே எரிமலையும், கரத்தே தடியும் ஏந்திய அவன் கருத்திலே திடமான முடிவு! எதிர்ப்படுவோர் எவரேயாயினும் அவரை, வறுமை தன் குழந்தைக்குத் தோண்டியுள்ள புதைகுழியில் தள்ளி விட்டு, அவர்கள் மடியில் உள்ளதைக் கொண்டு தன் குழந்தையைக் காப்பாற்றியே தீருவதென்ற திடமான முடிவோடு சென்றுன்! 'ஏழையின் உள்ளம் உறங்கும் எரிமலை! அது வெடிக்க ஆரம்பித்து விட்டால் விளைவு விபரீதமாகத்தான் முடியும்' என்பது அவனைப் பார்க்கும்போது உண்மை யென்றே படும்!

சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை ஏழையின் முதுகு ஓரளவிற்குத்தான் தாங்கும்; அளவுதாண்டினுல் அவன் கரம் பாசக்கயிருகத்தான் மாறும். நீர் வீழ்ச்சிகளாக உள்ள அவன் கண்கள் நெருப்புக் குழிகளாக மாறி விட்டால் அவன் எதிர்ப்படுவோர் எவருமே தப்ப மாட்டார்கள். தப்பினதே கிடையாது! நீர் தொட்டிகளென கிடந்திட்ட கந்தன் கண்கள் பொறி பறக்கும் உலைக்கூடங்களாக மாறின! நடந்தான்......வேகமாக நடந்தான்! நடமாடும் எரிமலையின் செவிகளிலே 'திருடன்......திருடன்' என்ற சப்தம் விழுந்தது...அதே நேரத்தில் ஏதோ ஓர் உருவம் எதிரில் ஓடிவரக் கண்டான்... திருடனுகத்தான் இருக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்தான்......தூக்கினுன் தடியை; ஓங்கித் தாக்கினுன் ஓடிவந்தவனை! ஓடிவந்தவன் கீழே சாய்ந்தான்...கந்தன் வீழ்ந்தவன் கையைத் தடவினுன்...அவன் கை

"என்னடா, பேராண்டி! கடைசியா நீ படிக்கிறதுக்கு சீமைக்கே போறியா? அப்ப, வரும்போது மறக்காம ஒரு கூடை சீமைக் கத்தரிக்கா வாங்கிட்டு வாடா!"

யில் ஒரு சிறு பை பட்டது... தூக்கினன் கந்தன்...ஓடினன்!

தனியான இடம் சேர்ந்ததும் பையை ஆராய்ந்தான்...ஏழையின் வெற்றிலைப் பாக்கு பையுள் என்ன இருக்கப் போகிறது?... ஆறணு சில்லரை இருந்தது. பையை வீசிவிட்டு கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு மீண்டும் ஓடினன்! இரண்டணுவிற்குப் பால், நாலணுவிற்கு ரொட்டி வாங்கிக் கொண்டான்......மீண்டும் தன் வீடு நோக்கி நடந்தான்.

அவன் குடிசையுள் விளக்கேது? இருள்சூழ்ந்து கிடந்தது. ...அவன் நுழைந்தான்!

''லட்சுமி...லட்சுமி...'' என்ருன்.

''வந்துட்டீங்களா?'' என்ருள் அவள்.

''இதோ, பால் கொண்டாந்திருக்கேன்...''

''பாலா...ஏது?''

''அப்புறம் சொல்றேன்...... முதல்ல குழந்தையின் உயிரைக் காப்பாத்து...இதோ ரொட்டி உனக்கு''

தாய் சேயை எழுப்பினுள்... எழுப்பினுள் ...... இயலவில்லை! மாண்டார் மீண்டதேது?...... ஆம்...அக் குழந்தையை காலதேவன் கவ்விக்கொண்டுபோய் வெகு நேரம் ஆகிவிட்டது.

''ஐயோ, ராஜாத்தி! நீயும் போயிட்டியா?'' என்று அவள் அலறினள். அதுகேட்டு அவனும் கதறினன்! கண்ணீர் உமிழும் அக்கண்களின் நிலையையோ, அடித்துக் கொண்டு அலறும் அவர்களின் அழுகுரலின் ஒலியையோ சித்தரிக்க எவர் பேனுமுனையாலும் இயலாத கோரக் காட்சி! அழவும் இயலாத ஈனக் குரலில் தாய் எழுப்பும் ஒப்பாரி — கொள்ளையடித்தும் காப்பாற்ற முடியாத தந்தையின் அலறல்—ஐயகோ! என்னென்பது? கண்ணீர் மழை தனை குழந்தைமீது பொழிந்தனர்; இல்லை; குளிப்பாட்டினர். இந்த கோரக் காட்சியைக் காணச் சகியாத வானகமும் கண்ணீர் மழை சொரிந்தது!

சிறிது நேரத்திற் கெல்லாம் யாரோ 'கந்தா, கந்தா' என்று கூப்பிடும் குரலும், அதைத் தொடர்ந்து டார்ச்லைட் ஒளியும் குடிசைக்குள் வந்தது! கந்தன் ''யார்?'' என்ருன்!

''சப் இன்ஸ்பெக்டர் கூட்டி வரச் சொன்னர்...வா'' என்ருன் வந்தவன். வந்தவன் 'போலீஸ்காரன்' என்பதை அறிந்ததும் கந்தனின் கை, கால்கள் நடுங்கின. அவன் முகமெலாம் முத்து முத்தாய் நீரை உமிழ்ந்தன!

''உன் மகன் கீழே வீழ்ந்து பலமான அடி பட்டுட்டான்! அவன் ஆஸ்பத்திரியிலே சாகப் பிழைக்கக் கிடக்கிருன்...சீக்கிரம் வா'' என்று வந்தவன் சொல்லக் கேட்டதும் கந்தன் ''ஐயோ'' என்று அலறி ஓடினன்! அவன் மனைவி 'மகனே' என்று சாய்ந்தாள்......! மனைவி பிணமானதையும் பாராது வெறியன் போல் ஆஸ்பத்திரிக்கு ஓடினன்!

ஒரு கட்டிலின்மீது மண்டை யிலே குருதி கசியும் கட்டோடு மாணிக்கம் படுத்துக் கொண் டிருந்தான். அவனருகில் டாக் டர்; மற்ருெருபுரம் மரணவாக்கு மூலம் பதிவு செய்ய காத்துள்ள மாஜிஸ்ட்ரேட்—இந்த நிலையில் கந்தன் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தான். மயக்க முற்றிருந்த மாணிக் கத்தை ஏதோ ஒரு சக்தி தட்டி எழுப்பியது. கண திறந்து பார்த்தான். கதறும் தந்தை தெரிந்தது.

''மாணிக்கம், எங்கேடா வீழ்ந்துட்டே?'' என்று அலறி ஞன் கந்தன்!

''பசிதாளாது செத்துக்கிட்டி ருந்த பாப்பாவுக்கு பால் வாங்க காசு தேடி அலேந்தேன்......... பிச்சையும் கேட்டேன்... யாரும் கொடுக்கல்லே...மனம் துணிஞ் சேன்... திருடினேன் ..., கிடைச் சது சின்ன பை!......எடுத்துக் கிட்டு ஓடினே ...எதிரில் வந்த யாரோ தடியால் அடிச்சுட் டாங்க அப்பா!'' என்று சொல்லி மாணிக்கம் முடிப்பதற் குள் கந்தன் 'ஐயோ' என்று அலறிஞன்!

''அப்பா! அப்பா! அதோ பாப் பாவும் அம்மாவும் கூப்பிடுருங்க. அம்மா... இதோ... இதோ'' என் றுன் மாணிக்கம். பிணமாகி விட் டான்.

''ஐயோ'' என்று அலறி கந் தன் வீழ்ந்தான்! அவன் மனைவி அவனையும் அழைத்துக் கொண் டாள்.

●

எத்தனுக்கு எத்தன்!

''குடியிருக்கிற வீட்டுக்கு அதன் உரிமையாளர் வர்ணம் பூசிக் கொடுக்க மறுக்கிருர். என்ன செய்யலாம்?''—இப் படி ஒரு கேள்வியைக் கேட்டார் ஒரு பிரமுகர்.

அதற்கு, பரம்பரை பரம்பரையாய் வாடகை வீட்டில் குடியிருக்கும் அவர் நண்பர் பதில் சொன்னதாவது:

''வீட்டுக்காரன் தன் செலவில் வர்ணம் பூசுவதற்குத்தான் பயப்படுவான். அதற்கு நீர் என்ன செய்யவேண்டுமெனில், 'நானே என் சொந்த செலவில் வீட்டுக்கு வர்ணம் பூசிக் கொள்ளுகிறேன்'—என்று அவனிடமிருந்து ஒரு அனுமதிக் கடிதம் எழுதி வாங்கிக் கொள்ளவேண்டும். பிறகு நீர் வீட்டைக் காலி செய்கிற முதல்நாளன்று வீடு பூராவுக்கும் 'தார்' வாங்கி அடித்து விடவேண்டும். ஏன் நடுங்குகிறீர்? வீட்டுக்கு உம் செலவில் வர்ணம் பூசிக் கொடுப்பதற்குத் தான் நீர் அனுமதி பெற்றிருக்கிறீரே?''

—எப்படி யிருக்கிறது, பதில்!

இலக்கியத்தில் பரத்தையர்!

ஒழுக்கத்திலும், அறத்திலும் சிறந்தது நம் தமிழ்நாடு. ஆண்கள் பிற மாதரை மனத்தால் நினைத்தாலும் கோபங் கொள்வர் பெண்கள். திருக்குறள் இதனை நன்கு விளக்குகிறது. பிறர் நம்மை நினைத்தால் நமக்குத் தும்மல் வரும் என்றும், தும்மினால் வாழ்த்துவது என்றும் ஒரு வழக்கம் உண்டு. இதைக் கருத்தில் கொண்டு தான் வள்ளுவர், தலைவன் தும்முவதைக் கண்ட தலைவி, பிற மாதர் அவனை நினைப்பதாலேயே அவன் தும்முகிறான் என்று கூறி ஊடி நின்றனள் என்பதை.

"வழுத்தினாள் தும்மினேனாக
அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீரென்று"
என்றும்,

"தும்முச் செலுப்ப அழுதாள்
நமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று"
என்றும்

அழகுடன் கூறுகிறாரோ என்னவோ?

வீரனொருவன் களத்தில் காயம்பட்டு கீழே விழுந்த பொழுது நிலத்தைப் பெண்ணாக எண்ணிய அவன் மனைவி, அவன் உடலை தன் கரத்தால் தாங்கிக்கொள்ளுகிறாள். அவன் இறந்தால் அவன் உயிரை பிற மாதர் அணைத்துக் கொள்வாரோ என்று எண்ணி, அவன் ஆவி நீங்கும் முன்னம் தன்னுயிரை விட்டாள் என்று கலிங்கத்துப் பரணி பாடுகிறது:

தரை மகளும், தன் கொழுநன்
உடலந்தன்னைத்
தாங்காமல் தன் கரத்தால்
தாங்கி விண்ணாட்டு
அமரமகளிர் அவ்வுயிரை
புணரா முன்னம்
ஆவி ஒக்க விடுவாளைக்
காண்மின், காண்மின்"

என்று அழைக்கிறார் சயங்கொண்டார். மாதரின் மனப்பண்புக்கு இது ஒரு உதாரணம் —இத்தகைய இயல்பு கொண்

---"முதல்வன்"

டோர் இருந்தபோதிலும் பரத்தமை பற்றி அகநானூறு கூறுகிறது. மாதவியிடம் சென்ற கோவலனைக் கண்ணகி பொறுத்துக் கொண்டாள் என்று இளங்கோ பாடுகிறார். இதையெல்லாம் பார்க்கும் பொழுது "பிறமாதருடன் கூடி வாழ்தல் ஒழுக்கத்திற்கு இழுக்கன்றோ? இதுவா தமிழர் அறம்?" என்று கேட்கத் தோன்றுகிறது. இதைப்போன்றே சம்பவங்கள் சில அங்காங்கே இலக்கியத்தில் சிதறிக் கிடப்பதால் அக்காலத்தில் பரத்தமை இருந்ததா இல்லையா என்ற சந்தேகம் எழுவது இயல்பே!

இன்று நாம் காணும் நிழற்படக்கதைகளினூடே பார்ப்போர் உள்ளம் களிக்குமாறு வேடிக்கைக் கூத்துகளை ஒரு பகுதியாக அமைப்பது போல, பல்வேறு துறைகளைப் பாடிய புலவர்கள் பரத்தமை என்ற பகுதியை அமைத்தனர். தலைவன் பொது மகளிரை நாடுவதும், இது கண்ட தலைவி ஊடுவதும், தோழி அவளைத் தேற்றுவதும் சங்க கால இலக்கியத்தில் சகஜமான காட்சிகள். இதனாலேயே அன்றிருந்த ஆடவர் அனைவரும் பரத்தையரை நாடினர் என்றும் கொள்ள முடியாது.

தமிழர் வாழ்வில் பரத்தமை ஒரு பகுதியாக இருந்திருந்தால், வள்ளுவர் கூட பொருட்பாலில் குடி, கூழ், அமைச்சு, அரண் என்று அமைத்ததைப் போலவே, இன்பத்துப் பாலிலும் பரத்தமையை ஒரு பகுதியாக அமைத்திருப்பாரே! ஊடல் பற்றிக் கூறும்பொழுது மகளிர் என்று கூறுகிறாரே தவிர, பொது மகளிரென்று குறிக்கவே இல்லை. ஆனாலும் பொருட்பாலில் "வரைவின் மகளிர்" என்றொரு பகுதியை அமைத்திருக்கிறார்.

இதிலும் பரத்தமை என்றோ, பொது மகளிர் என்றோ கூறவில்லை. கற்புடைப் பெண்டிரது இயல்பைக் கூறுவதுபோலவே, வரைவின் மகளிரினது இயல்புகளைக் கூறினாரே அல்லாது, அவ்வியல்பைக் கொண்ட ஒரு இனத்தாரைக் குறிக்கவில்லை என்று இன்றும் அறிஞர்கள் பலர் கூறுகின்றனர்.

மேலும் பரத்தமை என்ற இனம் இருந்திருந்தால், அல்லது அவர் 'வரைவின் மகளிரை' அங்ஙனமாக கருத்தில் கொண்டிருந்தால் அதை இன்பத்துப் பாலில் அல்லவா சேர்த்திருக்க வேண்டும்? இல்லையென்றால் ஊடற்குரிய காரணங்களைக் கூறும் பொழுது ஒரு இடத்திலாவது, வரைவின் மகளிரைக் காட்டியிருக்கலாமே!

தொல்காப்பியரது களவியலுக்கு உரை கூறும் நச்சினார்க்கினியர், "அவன்கண் பரத்தமை இல்லாவிடினும், காதல் மிகுதியால் அங்ஙனம் கருதுதல் பெண் தன்மை" என்கிறார். மாதவி இருந்ததால்தான் கண்ணகியின் கற்பு வெளிப்பட்டது. அதுபோல பரத்தமை பகுதியை பாவாணர் பாடும் பொழுது, பாவையரின் பழுதில்லா ஒழுக்கத்தை மிகைப்படுத்த அதை

ஒரு கருவியாகக் கொண்டார் என்று எண்ணலாமல்லவா?

இறையனுர் அகப்பொருளில் ''காதல் பரத்தை எல்லோருக்கும் உரித்தே'' என்று ஒரு சூத்திரம் உண்டு. பொருள் வயற்பிரிதல் என்பதைப் போலவே பரத்தை வயற்பிரிதல் என்று ஒரு பகுதி சங்க கால இலக்கியங்களில் நிறைந்து காணப்படுகிறது. குறிப்பாக மருதத்திணை செய்யுட்களில், பரத்தையரிடம் தலைவன் சென்ருன் என்பதோடு நில்லாமல், பரத்தையின் ஊடலையும் பாடியிருக்கின்றனர்.

நற்றிணையில் மருதத்திணையில் ஒரு பொதுமகள் பாணனிடம் தலைவனைப் பற்றி கேலியாகக் கூறுகிருர். ''அவர் என் கூந்தலைப் பிடித்திழுத்து கைவளையல்களை உடைத்தார். நான் கோபங் கொண்டவள் போல் நடித்து, ''சரி, சரி! உம் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறிவிடுகிறேன்'' என்றேன். அப்போது பார்க்க வேண்டுமே அவர் நிலையை!'' என்கிருள். தலைவியின் கற்பையும், பொறுமையும் மட்டுமே விளக்க இப்பகுதியைத் தோற்றுவித்தனர் என்ருல் விலைமகளின் ஊடலையும் கேலியையும் பாட வேண்டிய அவசியம் என்ன வந்தது?

கண்ணகியைப் போல் பொறுத்துக் கொண்டிருப்பதல்லாமல் தலைவி சினந்து தலைவனை திட்டுவதாக ஏன் அமைக்க வேண்டும்? இதோ பாருங்கள் மருதத்திலிருந்து உதாரணம்: தலைவி தலைவனைத் திட்டுகிருள்—கருத்து மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது:

''பாணர் தெருவில் நீர் செல்லும்போது அச்சிறுக்கியர் உம்மைச் சூழ்ந்து கொண்டபோது நீர் தடுமாறித் தத்தளித்ததை நான் பார்த்தேன்! வெய்யிலில் காய்ந்து வெடித்த நிலத்தில் புதுப்புனல் பாய்வதுபோல் உம் வரவால் என் மனம் குளிர்கிறது. நீரோ இங்கு தங்குவதில்லை: இப்போது பரத்தையரைச் சேர்ந்து வந்திருக்கிறீர்! நாள்தோறும் வண்ணப் புது மலர் நாடிச் செல்லும் வண்டைப்போலுள்ள நீங்கள் இங்கு ஏன் வர வேண்டும்? வேண்டாமே! ஊரார் பழி கூறுகிருர்கள். என் கைகள் மெலிந்து போகின்றன. கூந்தலில் மலர் சூடி மகிழவோ எனக்கு வாய்ப்பில்லை. இவ்வளவுக்கும் காரணமாகிய நீங்கள் வருவதும் வராமலிருப்பதும் ஒன்றுதான்.''

இம்மாதிரி கடுமையாக தலைவி தாக்குவானேன்? இது தலைவியின் பொறுமையையோ நிறையையோ எடுத்துக் காட்டுவதாகத் தோன்றவில்லையே! தலைவனைக் கேட்க வேண்டும் என்றிருந்தால் அதற்கு வேறு முறையா இல்லை?

இவற்றையெல்லாம் பார்க்கும்போதுதான் பண்டைக் காலந் தொட்டே பரத்தமை இருந்திருக்க வேண்டும் எனறும். அன்றைய தமிழர் நாகரீகத்தில் இதுவும் ஒரு பகுதியாக இருந்திருக்க வேண்டும் என்றும், அவ்வப்போது ஆன்ரோர் இது தவறு என்று வற்புறுத்தி வந்திருக்கின்றனர் என்றும் தெரிகிறது. ●

இது தான் என் குகை. உள்ளே வா!
நீ எனக்கு உயிரூட்டிய பிறகு அங்கே இருந்த உன் உடைகளில் சில-வற்றை நான் மாட்டிக் கொண்டேன்.
விநோத மனிதன்
3
வெளியே நடந்தேன். என்னைப் பார்த்தவர் பலரும் ஓடினர்.
துணிந்தவர்கள் கற்களை வீசி என்னைத் துரத்-தினர்.

காட்டில் அலைந்த பிறகு ஒரு-நாள் இரவு வீடொன்று தென்-பட்டது.
குரல் ஒலித்த பக்கம் ரகசியமாகப் பார்த்தேன். சிலருடைய நடமாட்டம் தெரிந்தது
ஒரு வாலிபன்; அவன் தங்கை; ஒரு குருட்டு அப்பா-இந்த குடும்பத்தை நான் பல நாட்கள் கவனித்து வந்தேன்
அவர்களுக்குத் தெரியாம-லேயே அவர்கள் செய்யவேண்-டிய வேலைகளை நானே செய்தேன்.

ஒரு நாள்....அன்னிய உடை அணிந்த மாது வந்தாள்! அவ-னுடைய காதலி போலும்!
வேற்று மொழி பேசிய அவளுக்கு 'அவன்' ஆங்கிலமொழி கற்-றுக் கொடுத்தான்.
அவைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த நான் ஆங்கிலம் சரிவர பேசக் கற்றுக்கொண்டேன்.
ஒரு நாள் யாருமில்லாத வேளை உள்ளே நுழைந்தேன்
இந்தக் குருடன் வணங்குகிறேன், நண்பரே! உள்ளே வாரும்!

திடீரென்று வெளியே சென்ற-
-வர்கள் திரும்பினர்.
அய்யோ! ஆ!
ஆ!
என்ன நடந்தது?
என்னை நையப்புடைத்து அனுப்பினர்.
பூதமே! போ!
நானே என்னைப் படைத்தவனை
உன்னைத் தேடிப் புறப்பட்-
-டேன்.
அப்போது தான் வழியிலே ஒரு
குழந்தையைப் பார்த்தேன்.

"ஆகா! இந்தக் குழந்தையை வளர்த்தாலாவது எனக்கு உற்ற நண்பனாக இருப்பானே" என நினைத்தேன்.
அவன் சப்தமிட்டான்.
நான் வாயைப் பொத்தினேன். ஆனால்......
குழந்தை செத்துவிட்டது; எனது மிருகப்பலத்தால்! தங்கச் சங்கிலி மட்டும் என் கையோடு வந்தது.
அந்த சங்கிலியைப் பக்கத்திலே தூங்கிக் கொண்டிருந்த பெண்ணின் சட்டைப்பையில் போட்டுவிட்டு ஓடினேன்.

பிறகுதான் தெரியவந்தது அந்தக் குழந்தை உன் தம்பியென்று! அந்தப் பெண்கூட தூக்கிலேற்றப்-பட்டுவிட்டாளாம்!
அய்யோ! மனித சமுதாயத்தில் துணையே கிடையாது. தயவு செய்து எனக்கு ஒரு மனைவியைத்தயார் செய்து கொடு.
இதை நீ செய்து-விட்டால்நான் எங்காவது ஓடிவிடுவேன்
முடியாது! முடியவே முடியாது!
நானும் மனிதன்-தனே! எனக்குமட்டும் மகிழ்ச்சி வேண்-டாமா?
சரி; நீ ஐரோப்-பாவை விட்டே ஓடிப்போவதானால் நான் செய்துமுடிக்கிறேன்.....
தொடரும்

இரட்டைக் குழந்தைகள்

செ

மனித வாழ்க்கை ஆரம்பத்திற்கு ஒரு நுண்ணிய அணுவே காரணமாகும். அந்த அணுவில் ஒப்புயர்வில்லாச் சக்திகளும் சிக்கலான பல அம்சங்களும் அடங்கியிருக்கின்றன என்பது வியப்பிற்குரிய தொரு விஷயமாம். அதே அணு முற்ற முற்றத் தன்னையே ஒத்தாற் போன்று இரண்டாகவும், மூன்றாகவும், அல்லது அதற்கு மேலும் தனித் தனி உருவங்களாக அபிவிருத்தி செய்து கொள்ளும் சக்தியை அது பெற்றிருப்பது மேற்கண்டவற்றைக் காட்டிலும் வியப்பை அளிக்கக்கூடிய மாபெரும் விஷயமாகும்.

இரட்டைக் குழந்தைகள் ஒற்றைக் குழந்தைகள் போல் புத்திக் கூர்மையுடையனவாயில்லை. இரட்டைக் குழந்தைகளின் உதயம் ஏககாலத்தில் உண்டாகின்றது என்ற கருத்து இப்பொழுது தவறு என்று கருதப்படுகிறது. உண்மையில் பிறக்கும் சமயத்திலேயே இரட்டைக் குழந்தைகள் ஒற்றையாகப் பிறக்கும் குழந்தைகளைக் காட்டிலும் உடல் பலஹீனமுடையவையாய் இருக்கலாம். ஆதலின் வாழ்க்கையில் அவை அவ்வளவு துரிதமாக முன்னேறுவதில்லை. ஆனால், பக்குவமான வயதடைந்த பின்பு பலத்திலும் சரியே, அறிவிலும் சரியே, பொதுவாக எவ்வித வேறுபாடும் இவ்விரு இனத்தவர்க்கும் இல்லை.

ஒற்றையாகப் பிறக்கும் குழந்தைகளுக்கிடையே ஏற்படும் மரணத்தைக் காட்டிலும் இரட்டைக் குழந்தைகளின் அகால மரணங்கள் அதிகமே. இரட்டைக் குழந்தைகளில் பள்ளிக்கூடம் செல்லும் வயதையடையும் குழந்தைகள் 50 சத விகிதத்தினரே யாவர். வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால் பள்ளிக்கூடம் செல்லும் வயதை எட்டும் முன்பு பிறக்கும் இரட்டைக் குழந்தைகளில் சரிபாதி இறந்து

விடுகின்றன. இவர்களுக் கிடையே அறிவுக் குறைபாடுகள் உள்ளவர் சத விகிதம் அதிகம். என்றாலும் இரட்டையாகப் பிறந்தவர்களிலே அறிஞர்களும் பலருண்டு. அரசியலில் புகழ் பெற்றவர்கள் இருக்கின்றனர்; வர்த்தகத்தில் தலைச் சிறந்தவர்கள் இருக்கின்றனர். விளையாட்டுக்களில் பேர் போனவர்களும் இருக்கின்றனர். பிரிட்டனிலே கிரிக்கட் விளையாட்டில் புகழ் பெற்ற இருவர் இருக்கின்றனர், அலரக், எரிக்பெட்ஸ!ஸ் என்பது இவர்களின் பெயர்களாகும். டேபிள் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் இங்கிலாந்தின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்ட ரோவ்ஸ், ரோஸாலிண்ட், டியான் ஆகியோரும் இவ்வினத்தைச் சார்ந்தோரே யாவர். பிரக்யாதி பெற்ற ஸ்காட்லாந்து நீச்சல் நிபுணர்கள் ஜாக், பெர்ட்வார்டிராப் ஆகியோரும் இவ்வினத்தினரே.

மாந்தர் சமுதாயத்தில் இரட்டையாகப் பிறப்பதில் பல்வேறு ரகங்கள் உண்டு. ஒரே மாதிரியான இரட்டைக் குழந்தைகள், ஒட்டிப்பிறப்பவை, சகோதரக் கருவில் பிறப்பவை முதலியனவாம். இவையல்லாமல் சில விசித்திர ரகங்களும் உண்டு.

ஒரே மாதிரியான—அதாவது ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ பிறப்போர் ஒரே கருவின் அமைப்பாவர். அக் கரு இரண்டாய்ப் பிளந்து இரு தனி நபர்கள் அதில் உருவாகின்றனர். ஒரு கரு இரண்டாகப் பிளந்து அதன் பயனாய் உற்பத்தியாகும் குழந்தைகளின் வமிச பாரம்பரிய அம்சங்கள் ஒரே மாதிரியாய் இருக்கும். எனவே இந்த இரட்டைக் குழந்தைகள் ஒரே இனத்தைச் சேர்ந்தவையாகவே இருக்கும்.

ஒரு சகோதரக் கருவிலிருந்து பிறக்கும் குழந்தைகளின் கரு அமைப்பு வேறாம். இவை இரண்டும் முற்றிலும் வேறுபட்ட தனித் தனியான இரு கருக்களிலிருந்து உற்பத்தியாகி அபிவிருத்தியடைந்து பிறக்கின்றன. இம்மாதிரி பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் உருவில் வேறாயினும் வமிச பாரம்பரிய அம்சங்களில் ஒரே மாதிரியானவையேயாகும். ஆனால் சகோதரக் கரு அமைப்பிலிருந்து பிறக்கும் குழந்தைகளின் அமைப்பே முற்றிலும் வேறுபட்டதாம். முற்ற முற்ற வேறான இரு கருக்களிலிருந்து இக்குழந்தைகள் உற்பத்தியாகித் தற்செயலாய் ஏக காலத்தில் பிறக்கின்றன.

சகோதரக் கரு அமைப்பிலிருந்து பிறக்கும் இரட்டைக் குழந்தைகளின் இன உறவிலே வியக்கத்தக்க அளவு ஒருமைப்பாடு காணப்படுகின்றது. உதாரணமாக, பெண்களாகப் பிறந்த இரட்டையர் இருந்தனர். வயது வந்தவுடன் அவர்

சிங்கை 'தமிழ்முரசு' இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

கள் தனித் தனியாக வாழ்க்கை நடத்த ஆரம்பித்தனர். அந் நாட்டில் கிராமப் பிராந்திய மொன்றில் விவசாயி ஒருவரை மணந்து கொண்டு தனது கணவனுடன் வாழ இவர்களில் ஒருத்தி சென்று விட்டாள். நாட்டுப்புற வாழ்க்கையாத லால் சிறிது கஷ்டப்பட்டே இம்மாது காலம் கடத்த வேண்டி யிருந்தது. ஆனால், இவளது சகோதரியோ ஒரு கன்னிப் பெண்ணாகவே நகரத் தில் காலங் கழித்தாள். தனது ஜீவனோபாயத்திற்கு ஆரோக் கிய மிக்க சூழ்நிலையில் தையல் தொழில் நடத்தி வந்தாள். இவ் வாறு ஒரு சகோதரி நாட்டுப் புறத்தில் கஷ்டமான வாழ்க் கையில் ஈடுபட்டிருந்தாள். மற்றொருத்தி மேலே விவரிக்கப் பட்டிருப்பதைப்போல் இனிய சூழ்நிலையிலே நகரம் ஒன்றில் கன்னிப் பெண்ணாகவே இன்ப வாழ்க்கை நடத்தி வந்தாள். ஆயினும், ஒரே மாதத்தில் இரு வரும் ஏக காலத்தில் குருடர் களாயினர்; காதும் கேளாச் செவிடர்களாயினர்; ஒரே தினத்தில் இருவருக்கும் வலிப் பும் ஏற்பட்டது!

சகோதரக் கருவமைப்பில் பிறக்கும் இரட்டையர்களுக்கு ஒரே தந்தைதான் இருக்க வேண்டும் என்ற அவசியமு மில்லை. இது சம்பந்தமாக விவர் பூரில் நடைபெற்ற விசித்திர சம் பவம் ஒன்று அறிவிக்கப்படு கிறது. ஒருத்தி ஏககாலத்தில் இரு ஆண் குழந்தைகளை ஈன் றெடுத்தாள். இவற்றில் ஒன்று வெள்ளையாகவும் பிறிதொன்று வெள்ளையல்லாத மற்றோர் வண்ணமாகவும் இருந்தது. சகோதரக் கரு ஏற்பட்டுப் பிள்ளை பிரசவிப்பதற்குப் பழக் கம் ஒருத்திக்கு இருக்குமானால், அந்தப் பழக்கம் அவளது தாயிடமிருந்தே வாரிசு முறை யில் அவள் பெற்றிருக்க வேண் டும். இம்மாதிரியான விஷயத் தில் தாயின் பாரம்பரியம் மாத் திரம் ஒரே காரணமல்ல. ஏனென்றால் ஆடவர்கள் குடும் பங்களிலும் இரட்டைக் குழந் தைகளை ஈன்றெடுக்கும் பெருந் தன்மை இருந்து வருவதாக நிரூபிக்கப்பட்ட பல சம்பவங் கள் இருக்கின்றன. அண்மை யில் அத்தாட்சியுடன் இவ்விஷ யம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சில குடும்பங்களிலே இரட் டைக் குழந்தைகள் பிறப்பது ஒரு குணாதிசயமாக இருக்கிறது. ஒரு மாதின் குறிப்பிட்ட வயது களில் இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. ஆணாகவோ பெண்ணாகவோ இரட்டைக் குழந்தைகள் ஒரு மாது பெறு வதற்குற்ற வயது 30. சகோதர கருவுடைய இரட்டைக் குழந் தைகளைப் பெறும் வயது 35-க் கும் 40-க்கும் இடையிலாகும்.

ஒரே இன இரட்டையர்கள் எக்கருவின் பாதியிலிருந்து உற் பத்தியானார்களோ, அப்பாதிகள் பிரிக்கப்பட்டதன் முறையும் நிலைமையும் ஒரே இன இரட் டையர்களிடையே காணப் படும் வேறுபாடுகளுக்குக் கார ணங்களாக இருக்கலாம். இந் தப் பிரிவினை மிக இளங் கட்டத்

தில் கருவிலிருக்கும்போது ஏற்படுமானால், அதாவது உடலில் மாறுபாடு ஆரம்பமாவதற்கு முன்பு பிரிக்கப்படுமானால் ஒரே மாதிரியான குணாதிசயங்கள் அதிகமாகும். ஆனால் இப் பிரிவினை பிற்பாடு ஏற்பட்டால் ஒரு பாகம் மற்றோர் பாகத்தைக் காட்டிலும் வேறுபட்ட முறையில் அபிவிருத்தியடையலாம்.

ஒட்டிப் பிறக்கும் இரட்டைப் பிள்ளைகளின் நிலைமை வேறு. இவ்வாறு இரு குழந்தைகள் ஒட்டிப் பிறப்பது சயாமில்தான் அதிகம். அசல் கருவூலம் இரு கூறுகப் போவது இவர்கள் விஷயத்தில் ஏற்படுவதில்லை. தனிப்பட்ட இரு குழந்தைகளின் கருவூலங்கள் தொடர்ந்து ஒட்டிக் கொண்டிருப்பது அற்பமாக இருக்கும். அவர்களின் உடல்களின் ஒரு பாகத்தில்—அதாவது இடுப்புகள், தலைகள், பக்கங்கள், முதலியவற்றில் ஒட்டிக் கொண்டிருக்கும்.

ஒட்டிய முறையில் இரு குழந்தைகள் அண்மையில் பஞ்சாபைச் சேர்ந்த பாட்டிண்டா என்னும் ஊரில் ஒரு மாதுக்குப் பிறந்தனவாம். வயிற்றிலிருந்து இரு உடல்கள் அக் குழந்தையினிடம் காணப்பட்டன. அதாவது தனித் தனியே இரு தலைகள், இரண்டு ஜோடி கரங்கள், இரு இருதயங்கள் — முதலியன இருந்தன. ஆனால் கால்கள் மட்டும் ஒரே ஜோடி இருந்ததாம். இடுப்பில்தான் இவ்விரு குழந்தைகளும் ஒட்டியிருந்தன. இம்மாதிரியான அசம்பாவிதப் பிறப்புகள் எல்லாம் பிறப்பதற்கு முன்பே இறந்து விடுகின்றன. அல்லது பிறந்து சில வாரங்களுக்குட்

'ஜர்னலிசம்!'

'போஸ்டன் அட்வர்ட்டைசர்' என்ற பத்திரிகையின் நிருபர் ஒருவர் இத்தனாவது தொகுதி அங்கத்தினர் அனைவரும் புத்தியற்ற கழுதைகள்—என்று எழுதிவிட்டார். அந்த நிருபரை ஆசிரியர் அழைத்து இப்படி புத்திமதி கூறினார்: "பத்திரிகை நிருபர்கள் எப்போதும் உண்மையை அப்படியே எழுதிவிடக்கூடாது. அத்திப் பூத்ததைப்போல ஒரே ஒருவர் நீங்கலாக இத்தனாவது தொகுதி அங்கத்தினர்கள் அத்தனை பேரும் புத்தியற்ற கழுதைகள்—என எழுதியிருப்பீரேயானால், எல்லோரும் அந்த வாசகம் தன்னைத் தவிர வேறு யாரையோ குறிப்பிடுகிறது என எண்ணி பேசாமலிருந்திருப்பார்கள்; வசைமாரி பொழிய வேண்டுமென்ற உமது லட்சியமும் கைகூடி யிருந்திருக்கும்! இதுதான் 'ஜர்னலிசம்'!"

பிறகு இறந்து விடுகின்றன. ரண சிகிச்சை மூலம் இத்தகைய இரட்டை குழந்தைகளைப் பிரிப்பது அபூர்வமாகத்தான் சாத்தியமாகும்.

ஒட்டிப் பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் எல்லாம் ஒரே இனக் குழந்தைகள்தாமா என்பதை நிரூபிக்கத் தெளிவான அத்தாட்சியில்லாவிட்டாலும், பெரும்பாலும் இவை ஒரே இனத்தைச் சேர்ந்தவையாகவே இருக்கின்றன. சில அபூர்வமான சந்தர்ப்பங்களில் சகோதரக் கருக்களிலும் இவ்வாறு ஒன்று சேர்வது நிகழலாம். ஆரம்பக் கட்டத்தில் அவை எக் கருவூலங்களிலிருந்து ஏற்பட்டனவோ அவை ஒன்ருகச் சேர்ந்துவிடுமாஞல், இவ்வாறு ஒட்டிக்கொள்ளும் சம்பவம் நிகழ்கிறது.

19 வயதுள்ள கொரிய பெண்ணெருத்தியின் கண்ணில் கட்டி ஒன்று காணப்பட்டது. அதை ஜப்பான் கண் டாக்டர் ஒருவர் ரண சிகிச்சை செய்தார். கட்டியாகத் தோன்றிய அதற்குள் குழந்தை உற்பத்தியாகும் கரு ஒன்று காணப்பட்டதாம். அதாவது நுண்ணிய குழந்தை உரு அதில் இருந்ததாம். இந்தக் கருவூலம் அப் பெண்ணுடன் பிறக்க வேண்டிய இரட்டைக் குழந்தையாக இருக்கலாம் என்றும், அவள் பிறப்பதற்கு முன்பே அவளது கண்ணில் அது இடம் பெற்றுவிட்டதென்றும் கருதப்படுகிறது. அது புரு முட்டையொன்றின் பருமன் இருந்ததாம்.

பிள்ளைப் பேறிலே ஆஸ்திரேலிய அம்மை ஒருவரைத் தட்டிக்கொள்ள உலகிலேயே எவருமில்லை யென்று சொல்லலாம். இந்த அம்மையார் 69 குழந்தைகளைப் பெற்றெடுத்த பெரும் மகராசியாவார். நான்கு நான்காக நான்கு தடவையும், மும் மூன்ருக ஏழு தடவையும், இரண்டிரண்டாகப் பதிஞறு தடவையும் இவ்வம்மையார் மக்களை ஈன்றிருக்கிருர்.

இரட்டைப் பிள்ளைகள் பெறுதற்கான காரணங்கள் பலவாம். அவற்றிலே சூழ்நிலை சம்பந்தமான அம்சங்களும் உள. ஒருவரின் பரம்பரை எந்த அளவுக்கு இதில் சம்பந்தம் உடையதாய் இருக்கிறது என்பதைத் தீர்மானிப்பது கஷ்டமாகும். ஒரே மாதிரியான இன இரட்டையர்களும், ஒரு சகோதரக் கருவிலிருந்து உற்பத்தியாகும் இரட்டையர்களும் தோன்ற பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஆரம்பக் கருவில் அடங்கியிருக்கும் சில சக்தியைச் சார்ந்தே ஒரே இன இரட்டையர்கள் உற்பத்தியாகின்றனர். இக்கரு ஆரம்ப கட்டத்திலேயே இரண்டாகப் பிளந்து விடுகின்றன. இரட்டைப் பிள்ளைகள் தோற்றுவிக்கும் ஒருவித சக்தி தாய் மூலம் ஏற்படுவது போலவே தந்தை மூலமும் ஏற்படும். சில வெளிப்புறக் காரணங்களால்கூட மூலக் கரு பிழைபடக்கூடும். இம்மாதிரி ஏற்படும் சம்பவங்களில் தாயிஞல் தோற்றுவிக்கப்படும் பிறப்புக்கு முன்புள்ள

சூழ்நிலையும் இரட்டைக் குழந்தைகள் பிறப்பதைத் தீர்மானிக்கும் காரணங்களில் ஒன்று.

ஒரே சகோதரக் கருவிலிருந்து பிறக்கும் இரட்டைக் குழந்தைகளுக்கு அத்தியாவசியமாகத் திட்டமாய் வேண்டப்படுவது ஒன்றுண்டு. அதாவது தாய் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சினைகளைக் கருவிலிருந்து உற்பத்தி செய்ய வேண்டும். சில சந்தர்ப்பங்களிலே இரு கருக்கள் உள்ள ஒரே சினையை தாய் உற்பத்தி செய்துவிடலாம்: ஒரு முட்டையில் இரு கருக்கள் எப்பொழுதாவது காணப்படுவதுபோல இந்த இரு விஷயங்களிலும் ஒரே சகோதரக் கருவிலிருந்து உற்பத்தியாகும் இரட்டையர்களுக்கு மூலகர்த்தா தாயே யாவாள். இரு சினைகள் ஒரு கருவில் காணப்படுமானல், சகோதரக் கருவிலிருந்து இரட்டையர்களை உற்பத்தி செய்யும் தன்மையைச் சில தந்தையர்களும் பெற்றிருக்கின்றனர் என்பதற்கு அத்தாட்சி உண்டு.

விமர்சகன் !...

லாஸ் ஏஞ்செல்ஸ் நகரத்து சினிமாக் கொட்டகை கேஷியரிடம் சென்று ஒருவன் துப்பாக்கியை நீட்டி "உமது தியேட்டரில் ஓடிக் கொண்டிக்கும் சினிமாப் படம் எனக்குக கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆகவே எல்லோரும் கொடுத்துவிட்டுப்போன பணத்தை இப்படிக் கொடு"—என்று கூறி, அன்று வசூலான தொகை முழுவதையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டானம்.

—'டைம்'

....நிர்ப்பந்த மரணம் !

போரோ, விபத்தோ இல்லாமல், வேண்டுமென்றே குண்டுபோட்டு கப்பல்களை கடலில் அமிழ்த்தும் விசித்திர சம்பவத்தை நீங்கள் அறிவீர்களா? சூயஸ் கால்வாயில் அத்தகைய சம்பவங்கள் நடைபெறுமாம். நடுவழியில் கப்பல் ஏதேனும் பழுதடைந்து, பழுது சீர்படாது நிற்கக்கூடிய நிர்பந்த நிலை ஏற்பட்டுவிட்டால், அப்படியே குண்டுபோட்டு கடலில் அமிழ்த்தி விடுவார்கள். காரணம் என்ன தெரியுமா? அக்கல்வாய் மிகவும் குறுகலானது; கப்பல் போக்கு வரத்து வருமானமோ ஏராளம். ஒரு கப்பலால் பாதை தடைபட்டு போக்கு வரத்து நின்றுவிட்டால் ஏராளமான நஷ்டம் நேர்ந்து விடுமல்லவா? ஆகவேதான் பழுதான கப்பலுக்கு இப்படி நிர்ப்பந்த சாவு நேருகிறது!

பண்டிதரின் பதட்டம்!

1955-ம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் ஒரு நாள்-பிரதம மந்திரி பண்டித நேருவையும், அவரது குமாரி திருமதி இந்திரா காந்தி, ரயில்வே மந்திரி லால் பகதூர் சாஸ்திரி—ஆகியோரையும் சுமந்து செல்லும் ஆகாய விமானம் சென்னை வழியாக பாண்டிச்சேரிக்குப் பறந்து கொண்டிருந்தது.

விமானம் புறப்பட்டு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு பிரதம மந்திரி திடீரென்று ஆத்திரத்தின் வசமானார். எழுந்தார்; அங்குமிங்கும் அலைந்தார்; எதிரேயுள்ள பத்திரிகைப் பைல்களைப் புரட்டினார்; பிறகு ஜன்னலுக்கு உள்ளே போடப் பட்டிருக்கும் துணியைப் பிடித்து இழுத்தார்; மெத்தை பதிக்கப்பட்ட நாற்காலியைப் பார்த்து ஓங்கி ஒரு குத்து விட்டார்; மேலும் கீழும், குனிந்தும் நிமிர்ந்தும் தேடினார். ஆமாம்; அன்று காலையில் பத்திரிகைகளுக்குத் தரப்பட்ட ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனின் ரிப்போர்ட்டை அந்த ஏழு மணி நேரப் பிரயாணத்தின்போது புரட்டிப் பார்க்கலாம் என்று நினைத்திருந்தார். இப்போது அது காணமற் போய் விட்டதால் தேடிக் கொண்டிருக்கிறார்.

விமானத்திலிருந்த பிரயாணிகள் ஆச்சரியத்தோடு இதைக் கவனித்துக் கொண்டிருந்தனர். உடன் அவர் புதல்வி இந்திரா காந்தியார் அங்கு வந்து "விஷயம் என்ன?" என்று கேட்டார்.

"சற்று முன் நான் படித்துக் கொண்டிருந்த புத்தகம் எங்கே?"—வேகத்தோடு வினவினர். "ஒரு விநாடிக்கு முன்னால் இங்கே இருந்தது; இப்போது காணுமே!"

உடன் இந்திரா காந்தியார் நேருவை எழுந்திருக்கச் சொன்னார். ஆம்; அந்த 'ரிப்போர்ட்' புத்தகத்தின் மீதுதான் அவர் இதுவரை உட்கார்ந்து கொண்டே தேடிக் கொண்டிருக்கிறார்! கவர்ச்சிகரமான புன்சிரிப்பைத் தவழவிட்டபடி அவர் அப்பாவிடம் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தார்.

○

கல்கத்தாவிற்கு அருகிலுள்ள கல்யாணியில் காங்கிரஸ் கட்சி தன்னுடைய மாநாட்டைக் கூட்டி யிருந்தது. 'சப்ஜக்ட்ஸ் கமிட்டி' தன்னுடைய விசேஷ கூட்டத்தைக் கூட்டி யிருந்தது. அலங்காரமாக அமைக்கப் பட்ட மேடைமீது மெத்தைகளில் சாய்ந்தபடி அங்கத்தினர்கள் அமர்ந்திருந்தனர். வழக்கம்போல் நேரு 'பைல்'களைப் புரட்டிக் கொண்டிருந்தார். திடீரென்று அவர் தன்னுடைய மூக்குக் கண்ணாடியை நினைத்துக் கொண்டார். அது எங்கேயும் காணும். பக்கத்திலிருந்த கட்சிக் காரியதரிசி லால்பகதூர் சாஸ்திரியிடம் தன்

னுடைய கண்ணுடியைப் பார்த்தீர்களா?—என்று கேட்டார். அவரோ 'இல்லை' என்றுகூறினுர்.

கண்ணுடி தற்காலிகமாகக் காணுமற் போனதால் கோபமடைந்த நேரு துள்ளிக் குதித்தார்: முக்கினுர்: முணகினுர்! உடன் 'சப்ஜெக்ட்ஸ் கமிட்டி'யின் நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டன. பிறகு தான் ஒருவர் முன்வந்து நேரு இதுவரை சாய்ந்து கொண்டிருந்த மெத்தைக்குப் பின்னுலிருந்த மூக்குக் கண்ணுடியை கண்டுபிடித்துக் கொடுத்தார்.

○

அது உஷ்ணமான மே மாதத்தில் ஒருநாள் பிற்பகல்! பிரதம மந்திரி 'கொட்டாவி' விட்டுக் கொண்டிருந்தார். காலைமுதல் காங்கிரஸ் கமிட்டியின் செயற்குழுவினர் கூடி ஆலோசனை செய்து கொண்டிருந்தனர். பண்டித நேரு காந்திக் குல்லாயை கழற்றி கீழே வைத்துவிட்டு, ஒரு முறையோ, அல்லது இரு முறையோ தன்னுடைய வழுக்கைத் தலையைத் தடவிக் கொடுத்தார்; கொட்டாவி விட்டார்: பிறகு ஒரே சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார். பிறகு சாப்பாட்டு நேரத்துக்குக் கலைவதை எதிர்பார்த்துக் கொண்டு எல்லோருமே 'கொட்டாவி' விட ஆரம்பித்தனர்.

பிறகு நேரு தலையில் கை வைத்து தன்னுடைய குல்லாயைச் சரி செய்துகொள்ள முயன்ருர். என்ன விந்தை! அங்கே அவருடைய குல்லாய் இல்லை. பிறகு அங்கு கூடியிருந்த எல்லோரும் குல்லாய் எங்கே? எங்கே?—என்று கேட்கப்பட்டனர். பிறகு 'தேடும் படலம்' துவங்கியது.

பின்னர் அங்கே ஒரு சிறுவன் தூய்மையான கதருடையில் தோன்றி நேருவிடம் அவர் இதுவரை தேடிக் கொண்டிருந்த குல்லாயைக் கொடுத்தான்.

''அது எங்கே யிருந்தது?''—நேரு பையனைப் பார்த்துக் கேட்டார்.

அந்தப் பையன் சிரித்துக் கொண்டே, ''நீங்கள் இதுவரையில் பரிசீலனை செய்து கொண்டிருந்த 'பைலி'ல்தானே சார், உங்கள் குல்லாயும் இருந்தது!''—என்று இந்தியில் பதில் சொன்னுன்.

பிரதம மந்திரி ஒருவார்த்தையும் பேசாமல் குல்லாயை வாங்கிக் கொண்டார்.

●

சட்டம் ஒரு இருட்டறை (சென்ற இதழ் வழக்கின் தீர்ப்பு)

சென்ற மாத "முத்தாரம்" இதழில் வெளிவந்த கருங்கல் பாளையம் கொலை வழக்கில் பால சுந்தரம் நிரபராதி என்று அவன் வழக்கறிஞர் நிருபித்தார்.

அந்த வழக்கில் அபிராமி கொலை செய்யப்பட்டதை நேரில் பார்த்ததாக சாட்சியங்கள் இல்லை. காயங்களைக் கவனித்தால், ஒரு ஆளால் உண்டாக்கப்பட்டதாக சொல்ல முடியாது. படுக்கையிலேயே கொல்லப் பட்டிருந்தால், கீழேயோ, பக்கத்திலேயோ ரத்தம் சிந்தியிருக்க வேண்டும். அப்படி இல்லை. ஆகையால் தோட்டத்தில்தான் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும். பாலசுந்தரத்தின் கையில் அரிவாளைப் பார்த்ததாகக் கூறும் பேச்சியம்மாளோ, ஆதிசுந்தரத்தின் ஆதரவில் இருப்பவள். பாலசுந்தரத்தின்மீது காணப்படும் ரத்தக் கறைகள், மனைவிமீது விழுந்து அழுதபோது உண்டாகியிருக்கலாம். மனைவி இறப்பதால் பாலசுந்தரத்துக்கு எவ்வித ஆதாயமுமில்லை. பாலசுந்தரம் பைத்திய முதிர்ச்சியில் கொலை செய்திருப்பானு என்றுல் அப்படியும் இருக்க முடியாது. காரணம், கொலை செய்தவுடன் அமைதியாக அங்கேயே நின்று கொண்டிருக்க மாட்டான். அண்ணனுல் குற்றம் சுமத்தப் பட்ட போது "என் தலைவிதி" என்று மனக் குழப்பத்தில் சொல்லி யிருக்கிருன்.

பிறகு யார்தான் குற்றவாளி? குற்றமுள்ள நெஞ்சு மனித இருதயத்தின் பலவீனத்தை வெளிப் படுத்தும் என்பதற்குச் சான்ருக ஆதி சுந்தரத்தின் நடவடிக்கைகள் சாணப்படுகின்றன. தம்பிமீது குற்றம் சுமத்தி அவனை ஒழித்துவிட வேண்டும் என்ற சதித்திட்டப்படி அபிராமியைக் கொலை (ஆட்கள் உதவியுடன்) செய்து படுக்கையிலே கொண்டு வந்து போட்டு, நாடகம் நடத்தியிருக்கிருர். செய்த குற்றத்தை மறைக்க உடனடியாக அடக்கம் செய்ய வேண்டுமென்று அவசரப்பட்டிருக்கிருர். குற்றத்தை தம்பி மீது சுமத்தி விட்டால், ஒரே குறியில் இரு வெற்றிகள்! குடும்ப சொத்து பூராவும் தனக்கே வந்து விடும். மகள் தங்கத்துக்கும் எதிர்ப்பு இல்லை. அதற்கு அனுசரணையாக, புது ஆள் ஒருவனையும் காவலுக்குப் படுக்க வைத்திருக்கிருர்.

ஆகவே, ஆதிசுந்தரமே குற்றவாளி என்று நிருபணமாகிறது. நேரில் பார்த்ததாகச் சொல்லும் சாட்சியங்கள்கூட பொய் சொல்லலாம்; ஆனுல் சூழ்நிலை பொய் சொல்லா என்ற அரிய தத்துவம் இங்கே அழகுறக் காணக் கிடக்கிறது.

● குறிப்பு: இதே போன்றதொரு வழக்கு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்திருக்கிறது. வழக்கில் குறிப்பிடப் பட்ட ஊர், பெயர்கள் கற்பனை.

சட்டம் ஒரு
இருட்டறை
இரா. இளம் வழுதி எம்.ஏ.பி.எல்.

நாகரிகம், 20-ம் நூற்றுண்டுக்கு நீண்டு விட்டது: விஞ்ஞான அறிவு புது செவ்வாய்க் கிரகத்தையே சிருஷ்டி செய்ய வழி வகுக்கிறது; இறந்துபோன மனிதனை எழுப்பி நடமாடவிட முடியுமா என்ற ஆராய்ச்சியில் மருத்துவக் கலை வளர்ந்து வருகிறது; இயற்கையில் எழும்பும் பலவித சக்திகளையும், எப்படிப் பணிய வைக்கலாம் என்பதில் தீவிர கவனம் செலுத்தப் படுகிறது; இவைகளெல்லாம் இங்கல்ல; மேட்டில்!

ஆனால், நமது பழம் பெரும் நாட்டிலோ, பெரிய பாளையத்தம்மனுக்கு வேண்டிக் கொண்ட பக்தர்கள் வேப்பிலை சேலையைக் கட்டிக்கொண்டு வீதிவலம் வராமலில்லை; பேய், பூதம், பிசாசு, இருளன், காட்டேறி, முனியன் என்ற சொற்களைப் பயங்கர ஆயுதமாகக் கொண்டு மதம் கோலோச்சித்தான் வருகிறது. அறிவியல் படிக்கும் மேதை, கல்லூரி அறையைவிட்டு வெளி வந்தவுடன் இந்த நாட்டின் சூழ்நிலையில் விழுகிறுன், எல்லாம் சொல்லும் பல்லி கழுநீர்ப் பானையில் விழுவதுபோல. அம்மையா, மாரியாத்தாளுக்கு வேண்டிக் கொள்—தீராத வயிற்றுவலியா, எம்பெருமான் திருப்பதி வெங்கடேச பெருமானுக்கு வேண்டிக்கொள்; பழனி முருகனுக்கு காவடி தூக்கு; பரந்தாமனுக்கு அரிதண்டம் போடு; அக்னியில் இறங்கு; தாயத்துக்கட்டு; தரகனுக்குத் தட்சணை கொடு—ஆபத்தா, ஆண்டவனுக்குக் காணிக்கைக் கொடு; அதுவும் உயிர்ப் பலியானல் மிகவும் மெச்சத்தக்கது என்ற அறிவுரைகளை, பயமுறுத்தல்களைக் கேட்டு, எல்லாவற்றினையும் விதியின்மேல் பாரத்தைப் போட்டு நாட்களை ஒட்டும் பாமர மக்கள் நிறைந்த நமது நாட்டில், பச்சிளம் சிசு வொன்றைப் பக்தியின் பெயரைச் சொல்லி, பாதகன் ஒருவன் படுகொலை செய்த வழக்கு விவரம் தருகிறேன்.

முன்னுரை :—மலையூர் ஒரு பட்டிக்காடு: அங்கே வாழும் குடிகள் பெரும்பாலும் விவசாயிகள்; படிப்பு வாசனை அதிகம் இல்லாதவர்கள்; ஆனல் மூட நம்பிக்கைகளுக்கு முட்டுக் கொடுத்து, மதத்தை முரட்டுத்தனமாகப் பின்பற்றுபவர்கள். அவர்களில் ஆதிமூலம் சாதாரண ஒரு விவசாயி; அலமேலு அவனுடைய அன்பு மனைவி. இவர்களுக்கு இரு குழந்தைகள். அலுமேலுவின் சிறிய தாயார் அன்னம்மாவும் கூடவே இருந்து வருகிருள். அந்த ஊரில் ஒரு பூஜாரி; புண்யகோடி என்ற பெயருடையான்; அகப்பட்டதைச் சுருட்டும் ஆண்டியப்பன் அவன். ஏமாளிகளான அந்த ஏழை மக்களை, காளியாத்தா, மாரியாத்தா பெயரைச் சொல்லி ஏமாற்றி சுகவாசம் செய்பவன். ஒரு நாள் அந்தப் பூஜாரி ஆதிமூலத்தின் பச்சிளங் குழந்தையை எல்லைப் பிடாரி அம்மன் கோவிலுக்கு முன்னுல், கழுத்தை நெறித்து, கல்லில் மோதி, கொலை செய்து, பக்கத்தில் இருந்த சப்பாத்திப்

புதரில் போட்டுவிட்டு ஓடி விட்டான் என்று இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்துக்கு தகவல் கிடைக்கிறது. உடனே அவர் பரிவார சகிதம் மலையூருக்கு முகாமிட்டு வழக்கு விசாரணை துவங்குகிருர்.

ஆதிமுலம் :—

நான் ஒரு சாதாரண விவசாயி தான் : படிப்பும் அதிகம் இல்லாதவன். அலமேலு என் மனைவி. சின்னஞ்சிறு குழந்தைகள் இரண்டுண்டு எங்களுக்கு. மகிழ்ச்சியில் வாழ்ந்த எங்கள் குடும்பத்துக்குப் பேரிடி ஒன்று வந்தது. அதாவது, என் மனைவி அலமேலு கடுமையான வைசூரியால் தாக்கப்பட்டாள். ஆஸ்பத்திரி டாக்டர் என்றுலே எங்களுக்குப் பயம்; அதிலும் அம்மையாயிற்றே.டாக்டரை அழைக்கலாமா? ஆகவே வழக்கப்படி, வேப்பிலையால் வீட்டை அலங்கரித்து. மகமாயிக்கு வேண்டிய மரியாதைகள் செய்ய ஆரம்பித்தோம். உடுக்கை, பம்பை—எங்கள் வீட்டில் ஓயாமல் ஒலித்தன; மஞ்சள் துணி கட்டி, மாரியம்மன் மனம் கோணுமலிருக்க பலவித பூசைகள் செய்தோம்; அப்போதும் அம்மன் இறங்கவில்லை; வரவர நோய் அதிகரித்து வந்தது.

கடைசியில் ஊரில் பிரபலமாயிருந்த பூஜாரி புண்யகோடியை அழைத்தோம். அவரும் மூன்று நாள் ஓயாமல் பூசைகள் செய்தார். மூன்ரும் நாள் மாலை மணி ஏழு இருக்கும்; பூஜாரிமேல் ஆவேசம் வந்து, சாமியாடிக் கொண்டிருந்தார். நான் பயபக்தியுடன் "அம்மா தாயே! குற்றம் குறைகள் இருந்தால் மன்னித்து என் மனைவியைக் காப்பாற்று!" என்று கெஞ்சினேன். பூஜாரிமேல் சித்து விளையாடிய அம்மன்,"அடேய், எனக்குப் பசி அதிகமாகுதுடா! ஏதாவது கொடுடா! ரத்தப் பலி வேண்டுமடா! அதற்குப் பிறகுதாண்ட என் கோபம் குறையும். உன் மனைவியும் பிழைப்பாள்!" என்று வாக்கு சொல்லியது. "ஆடு, கோழி, தருகிறேன், தாயே" என்று நான் சொன்னதும் சாமி மலையேறி விட்டது. அதற்குப் பிறகு பூஜாரி போய்விட்டார். டாக்டர் வந்து மருந்து கொடுத்

நிர்ப்பந்த மரணம்!

சூயஸ் கால்வாயில் நடுவழியில் கப்பல் ஏதேனும் பழுதடைந்து, பழுது சீர்படாது நிற்கக்கூடிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டு விட்டால், அப்படியே குண்டுபோட்டு கடலில் அமிழ்த்தி விடுவார்கள். அக் கால்வாய் மிகவும் குறுகலானது. கப்பல் போக்குவரத்து வருமானமோ ஏராளம். ஒரு கப்பலால் பாதை தடைபட்டு போக்குவரத்து நின்றுவிட்டால் ஏராளமான நஷ்டம் நேர்ந்து விடுமல்லவா? ஆகவே தான் அக் கப்பலுக்கு இப்படி நிர்ப்பந்த சாவு நேருகிறது!

> **கேட்காத கேள்வியும்...**
>
> பெண்ணுக்குச் சம உரிமை தந்து நிடணைக்கும் படையில் எல்லோரையும் பெண்களாகவே சேர்த்துக் கொண்டால்?
>
> —விடை எதிர்ப் பக்கத்தில்

தால்தான் வியாதிகள் குணமடையுமாம்—எவ்வளவு பயித்தியக்காரத்தனமாக இந்தப் படித்தவர்கள் பேசுகிறார்கள்!

மறுநாள் நான் பூஜாரியைப் பார்க்கவில்லை. அதற்கடுத்த நாள் மாலை மணி 4 இருக்கும். புண்யகோடி எங்கள் வீட்டுக்கு வந்தார். வரும்போது நிதானமாகவே இருந்தார். வாசலில் உட்கார்ந்திருந்த என் சிறிய மாமியாரோடு நல்ல மாதிரியாகவே பேசிக் கொண்டிருந்தார்.

திடீரென்று, வாசலில் தவழ்ந்து கொண்டிருந்த என் ஐந்து மாதக் குழந்தையைப் பார்த்து பூஜாரி ஒரு மாதிரியாக சிரித்தார். உடனே அந்தக் குழந்தையைக் காலைப் பிடித்துத் தூக்கிச் சுற்றினார். எனக்கு ஒரே பயமாக இருந்தது; பூஜாரிமேல் சாமி வந்துவிட்டது. அப்போது, அந்தப் பக்கமாக வந்த என்னுடைய பெரிய குழந்தையையும் மயிரைப்பிடித்து இழுத்தார். நல்ல வேளை, அந்தக் குழந்தை அழுது கொண்டு தப்பி ஓடியது. பிறகு, பூஜாரி என் பச்சிளம் பாலகனை மட்டும் தூக்கிக்கொண்டு ஊருக்கு மேற்குப் பக்கம் ஓடினார். எனக்குப் பிரமை பிடித்தது போலாயிற்று. என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று பயந்து பூஜாரி பின்னால் ஓடினேன். எதிர் வீட்டு எல்லப்பனும் இன்னும் சிலரும் என்னோடு ஓடிவந்தார்கள். என் மாமியாரோ 'குய்யோ முறையோ' என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் எல்லைப் பிடாரி அம்மன் கோவிலில் பூஜாரியைப் பார்த்தோம். ஆனால், அங்கே நான் கண்ட காட்சி என்னை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. பூஜாரி கையில் சிக்கிக் கொண்டிருந்த என் குழந்தையை மகா கொடூரமாக, அவன் குரல்வளையை நெறித்து, பிடாரி அம்மனுக்கு முன்னாலிருந்த இன்னொரு சாமிமீது மோதிக் கொன்று, பக்கத்திலிருந்த சப்பாத்திப் புதரில் தூக்கி எறிந்தான். என்ன செய்வேன்? குழவியைக் கொன்று கூத்தாடிக் கொண்டிருந்த பூஜாரி, எங்களைப் பார்த்தவுடன், தலைவிரி கோலமாக பக்கத்தூர் பக்கம் ஓடி விட்டான். அணைந்து போன என் குல விளக்கை வாரியெடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தேன். ஊர் மக்கள் கூடியிருந்தனர். பட்டாமணியமும் அங்கே வந்தார். விசாரித்தார். அவர் மூலமாகப் போலீசுக்குப் பிராது அனுப்பினேன்.

* * *

அலமேலு :—

என் பச்சிளஞ்சிசு பூஜாரியால்

கொல்லப் பட்டது கேட்டு, புழுப்போல் துடித்து விட்டேன். என்னுடைய நிலையோ பயங்கரமானது. உடம்பு பூராவும் அம்மன் விளையாடிக் கொண்டிருந்தாள். அன்று எனக்கு மிகவும் ஆபத்தான கட்டம். உள்ளறையில் முனகிக் கொண்டு படுத்திருந்தேன். சற்றுத்தள்ளி வெளிப்பக்கம் என் கணவர் இருந்தார். திடீரென்று என் சின்னம்மா போட்ட கூச்சல் என்னை விழிப்புறச் செய்தது. அருகிலிருந்த கணவனையும் காணோம். என்னவென்று விசாரித்ததில், பூஜைக்கு வந்த புண்யகோடி ஆவேசம் வந்து ஆடிக் கொண்டு என் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடியதாகச் சொன்னார்கள். தாயே! நீதான் என் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும்—என்று அந்த நேரத்திலும் அம்பாளை வேண்டிக் கொண்டேன். பலி கேட்ட மாதா என் பச்சைக் குழந்தையின் ரத்தத்தையா பசி தீரக் குடிக்க வேண்டும்! என்னையே பலி வாங்கியிருக்கலாமே! கொஞ்ச நாழிகைக் கெல்லாம், சின்னஞ்சிறு கன்னங்கள் குழிய சிரித்து, எங்களை யெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய என் இளஞ் சிட்டை, பிணமாகக் கொண்டு வந்தார்களே! என் தலைவிதி இப்படியா இருக்க வேண்டும்!

* * *

அன்னம்மா :

அலமேலு என் அக்கா மகள். அவளுக்குக் கல்யாணமாகி, கணவன் வீட்டுக்கு வந்த போது, நானும் துணைக்காக, அலமேலுடன் வந்து அவளுடனேயே தங்கி விட்டேன். குடும்பம் குறைவறவே நடந்து வந்தது. ஆனால் யார் செய்த பாவமோ, அல்லது எங்கள் தலைவிதியோ திடீரென்று அலமேலுக்குப் பெரியம்மை கண்டது. பூஜாரி பூசைக்கு வந்தான். கேட்டதெல்லாம் அவனுக்குக் கொடுத்தோம். அடிக்கடி அவன்மேல் ஆவேசம் வரும் அம்மன் அவன்மேல் பூரணமாக அருள்பாலித்ததால், எப்படியும் அலமேலு தணமாகி விடுவாள் என்று நம்பிக் கொண்டிருந்தோம். கொலை நடந்த அன்று மாலை வழக்கம்போல் வீட்டுக்கு வந்த பூஜாரி, என்னிடம் வெற்றிலை பாக்த வாங்கிப் போட்டுக் கொண்டு நிதானமாகவே பேசிக் கொண்டிருந்தான். ஆனால், திடீரென்று காக்காய் வலிப்பு வந்தவன் போல் முகத்தைக் கோணலாக்கி, நெற்றியை உயர்த்தி, புருவத்தைச் சுளித்து, மருள் வந்தவன்போல் ஆடினான். பக்கத்தில் தவழ்ந்து கொண்டிருந்த அலமேலுவின் குலக்

வேண்டாத விடையும்!

'டிரஸ்' செய்துகொள்ள ஒரு மணி; பவுடர் பூச அரைமணி; தலை சீவ கால் மணி-அதற்குள் உலகமே வெந்து சாம்பலாகிவிடும்!

பிரிட்டிஷ் அஞ்சல் நிலையப் புத்தகத்தில் இப்படி இருந்தது:

● அரசாங்கச் சார்புடைய தந்திகளைத் தவிர மற்றவைகள் புரியும்படித் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

—'நியூயார்க் டைம்ஸ்'

பூசாரி பின்னால் அலங்கோலமாக ஓடுவதைப் பார்த்து நானும் ஓடினேன். எல்லைப்பிடாரி அம்மன் கோவிலுக்கு அருகில் போகும்போது, குழந்தையின் கழுத்தை நெறித்து, கருங்கல்லில் மோதி, பிணமாக்கி, பக்கத்திலிருந்த சப்பாத்திக் காட்டில்

கொழுந்தைப் பார்த்த அவன் என்ன எண்ணினானே தெரியாது; திடுதிப்பென்று அதன் காலைப் பிடித்துத் தலைகீழாகத் தூக்கிக் கரகரவென்று சுற்றினான். அருகே வந்த பெரிய குழந்தையின் மயிரைப் பிடித்து இழுக்க முயற்சித்தான்; ஆனால் அது அழுது கொண்டே தப்பி ஓடியது. பச்சிளங் குழந்தையைத் தூக்கி பேயாட்டம் ஆடிய அவன், வெறி பிடித்தவன்போல், ஊருக்கு மேற்கே ஓடினான். மருமகனும் மற்றும் சிலரும் அவன் பின்னால் ஓடினார்கள். நான் பெருங் கூச்சலிட்டுக் கதறினேன். கொஞ்ச நாழிகைக்குப் பிறகு குழந்தை பிரேதமாகக் கொண்டு வரப்பட்டபோது பைத்தியமே பிடித்துவிடும்போலிருந்தது.

* * *

எல்லப்பன் :

நான் ஆதிமூலத்தின் எதிர் வீட்டில் வசிக்கிறேன். அன்று மாலை, பூஜாரி ஆதிமூலத்தின் குழந்தையைத் தூக்கி ஓடுவதைப் பார்த்தேன். அம்மனுக்கு வேண்டுதலோ என்று எண்ணினேன். ஆனால் ஆதிமூலமும்

போட்டுவிட்டு ஓடினான் பூஜாரி. இறந்த குழந்தையை ஆதிமூலம் வீட்டுக்குத் தூக்கி வந்தான். ஆதிமூலத்தின் மனைவிக்குக் கண்டிருந்த அம்மைக்கு பூஜை செய்ய 4, 5 நாட்களாக பூஜாரி அவர்கள் வீட்டுக்கு வருவான்; போவான். பூஜாரி பரம பக்தன். அவன் வாக்கு பலிக்கும். ஊரில் நடக்கும் நல்லதுக்கும் பொல்லாததுக்கும் அவன் தான் முன்னிற்பான். சிறிது குடிப் பழக்கத்தைத் தவிர அவன் மிகவும் நல்லவன்.

* * *

பட்டாமணியம் பரமசிவானந்தம் :—

மலையூரின் மணியம் வேலையைச் சுமார் 10 ஆண்டுகளாகப் பார்த்து வருகிறேன்.

குழந்தை கொல்லப்பட்ட அன்று மாலை மணி 6 இருக்கும். நான் பக்கத்தூருக்கு வசூல் பாக்கிக்காக சென்றுவிட்டு தோட்டி தலையாரிகளோடு திரும்பி வந்துகொண்டிருந்தேன். ஊருக்கு 2 கல் தொலையிருக்கும். பூஜாரி புண்யகோடி பதைக்கப் பதைக்க ஓடிவந்

கடன்காரர் கண்ணில் படாமலிருக்கவும்...
மகாஜனங்களுக்கு சேவை-புரியவும்....
தற்காப்பு சாதனமாகவும்.....
அதுமட்டுமின்றி...
குடை மழை பெய்யும்போதும், காற்றடிக்கும்போதும் கூட 'பாரசூட்'டாக பயன்படலாம்
Che

'ஓவர் டைம்!'

வில்சன் போர்ட் என்ற நடிகர் இளகிய மனதுடையவர். தனது ஊழியர்களின் உழைப்புக்கு மதிப்பு தரக் கூடியவர். அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்வது கண்டு தான் நடிக்கும் நாடகம் ஒன்றுக்கு இலவச டிக்கெட்டுகள் கொடுத்து, ஒரு சனிக்கிழமை இரவு அவர்களை அழைத்துச் சென்றார். நாடகத்தை அவர்கள் மிகவும் ரசித்தார்கள். அதுகண்டு அவரும் மகிழ்ச்சி அடைந்தார்.

முதல் தேதி வந்தது. சம்பள தினமல்லவா? வேலைக்காரர்களின் சம்பளப் பட்டியலை வரவழைத்தார். அதில் ஒவ்வொரு வேலையாளின் பெயருக்கும் எதிரே புதியதாக ஏதோ குறிக்கப்பட்டிருந்தது. அதைப் படித்ததும் திடுக்கிட்டு விட்டார். அதில் இப்படி இருந்தது:

''சனிக்கிழமை இரவு நான்கு மணி நேரம் நாடகக் கொட்டகையில் 'ஓவர் டயம்' வேலை!''

தான். முகமெல்லாம் விகாரமாயிருந்தது. தலைவிரிகோலமாகவும், பைத்யக்காரன் போலவும் காட்சியளித்தான். அவனைத் தடுத்து நிறுத்தி விசாரித்தேன். என்னிடம் எப்பவும் மரியாதையாகவே நடந்து கொள்ளும் சுபாவம் உள்ளவன் அவன்; ஆனல் அன்று ஒரு மாதிரியாகப் பார்த்தான். பிறகு கொஞ்சம் தேம்பலுடன், ஆதிமூலத்தின் ஆண் சிசுவை எல்லைப்பிடாரி அம்மனுக்குத் தன் கைகளாலேயே காவு கொடுத்து, பிணத்தைத் தூக்கிப் பக்கத்து சப்பாத்திக் காட்டில் போட்டுவிட்டு ஓடிவருவதாகச் சொன்னன்.

இந்தப் பயங்கர சம்பவத்தைக் கேள்விப் பட்டதும், எல்லைப்பிடாரி அம்மன் கோவிலுக்கு ஓடினேன். ஆனல் அங்கு ஒருவருமில்லை. ஒருவேளை பூஜாரிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்ற சந்தேகத்துடன் ஆதிமூலத்தின் வீட்டுக்கு ஓடினேன். பால் மணம் மாறு பச்சிளங் குழந்தை பிணமாக அங்கே கிடத்தப் பட்டிருந்தது. அதன் கழுத்தை நெறுக்கியிருந்த அடையாளங்கள் புலப்பட்டன. ஆதிமூலமும் அவன் மாமியாரும் என்னைப் பார்த்ததும் கோவெனக் கதறினர்கள். போலீஸுக்குப் புகார் அனுப்பினேன்.

* * *

— பூஜாரி புண்யகோடி :

மலையூரில் நெடுங்காலமாக மாரியம்மன் கோவில் பூசாரியாக இருக்கிறேன். மகா சக்தி வாய்ந்த தேவதை அது. எனக்கு

அடிக்கடி மருள்வரும். அம்பாள் என் மூலமாகவே பக்த கோடிகளுக்கு அருள் புரிந்து வந்தாள். நாஸ்திகம் தலை விரித்தாடுகின்ற இந்தக் காலத்தில் பலருக்கு இதில் நம்பிக்கை இல்லாமலிருக்கலாம். ஆனால் என் போன்ற ஞானஸ்தானுக்கோ அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. முதல் நாளிரவு. அம்மன் என் கனவில் தோன்றி, தனக்கு நரபலி-அதிலும் இளஞ்சிசுவின் உயிர்வேண்டுமென்று என்னைக் கேட்டாள். நான் மறுக்க முடியுமா? பக்தனையிற்றே. பலி கொடுக்க மாட்டானா என்றுதானே அவள் கேட்டாள்! எனக்கோ குழந்தைகளில்லை. ஒருவேளை ஆதிமூலத்தின் குழந்தையையே பிடாரி அம்மனுக்குப் பலிகொடுத்தால் அலமேலுமீது விளையாடிக்கொண்டிருக்கும் அம்மன் இறங்கிவிடலாம் என்று நம்பினேன். ஆனால், மற்றவர்களுக்கு இதைச் சொல்லவில்லை. தேவ ரகசியமாயிற்றே! நான் வேண்டுமென்றே குழந்தையைக் கொலை செய்யவில்லை. கொலை என்று சொல்வதுகூட பாவம். என்னுடைய பராசக்தி. வேண்டும் வரம் கொடுக்கும் இஷ்ட தேவதை. ஆகையால் குழந்தையைக் காணிக்கையாக சமர்ப்பித்தேன்.

ஆதிமூலத்தின்மீது எனக்குக் கடுகத்தனையும் விரோதமில்லை. அதுமட்டுமல்ல; அவர்கள் குடும்பப் பூசாரி நான். மேலும் பச்சைக் குழந்தையைப் படுகொலை செய்யுமளவுக்கு அது எனக்கு எதிரியா? இல்லையே!

நான்கு வகை

சென்ற மகாயுத்தத்தின் போது ஜெர்மன் சேனாதிபதி ஒருவர் விடுத்த ஒரு சுற்றறிக்கையின் நகலில் இப்படி இருந்தது:

நான் என் உத்தியோகஸ்தர்களைப் பின்வருமாறு நான்கு வகையாகப் பிரிக்கிறேன்:

(1) கெட்டிக்காரத்தனமும் உழைப்பும் உள்ளவர்களை எனது காரியாலயத்தில் அமர்த்திக் கொள்ளுகிறேன்.

(2) முட்டாள்தனமும் சோம்பேறித்தனமும் உள்ளவர்களை சில சமயம் உபயோகித்துக் கொள்வேன்.

(3) கெட்டிக்காரத்தனமும் சோம்பேறித்தனமும் உள்ளவர்களை மிக உயர்ந்த தலைமைப் பதவிகளில் நியமிப்பேன். அவர்களுக்கு நெஞ்சுரமும், கடும் பிரச்னைகளுக்கு முடிவு காணும் மனத்தெளிவுமுண்டு.

(4) மூடத்தனமும், உழைப்பும் உள்ளவர்கள் தான் மிக்க அபாயமானவர்கள். அவர்களை விரட்டி விடுவேன்.

அலமேலுவுக்கு நல்லது செய்யவும், குழந்தைக்குப் புண்ணியம் தேடித் தரவும், அம்மனுக்கு ரத்தப்பசி தீரவுமே அந்தக் காரியத்தைச் செய்தேன். இல்லை யென்றால் ஊரையே நிர்மூலமாக்கி இருப்பாளே, அந்தக் காளி!

மேலும் குழந்தையைத் தூக்கிச் சென்றபோதும், அதை அம்மனுக்குப் பலிகொடுத்த போதும், என் நிதானம் என்னிடம் இல்லை. நான் குற்றவாளியா? ஒருக்காலுமில்லை.

* * *

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம்:-

மலையூர் கொலை, மிகவும் பயங்கரமானது; மிருகத்தனமானது. என்றாலும், குற்றவாளி புண்யகோடி கூறும் காரணங்களைப் பார்த்தால் நியாயம் போலவும் தெரிகிறது. கொலை நடந்த இடமான எல்லைப் பிடாரி அம்மன் கோவிலுக்குச் சென்று பார்த்தேன். 3 கல் நட்டு இருக்கிறார்கள். எதிரில் சிறு வேல். பக்கத்தில் இரண்டொரு கருங்கல்லாலான சிலைகள். சுற்றிலும் சப்பாத்திப் புதர்கள். இந்த இடத்தில் குழந்தையின் குரல்வளையை நெறித்துக் கொன்று பிடாரி அம்மனுக்குப் பலி கொடுத்ததை குற்றவாளி ஒத்துக் கொள்கிறான். சாட்சியங்களும் பலமானவை. சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் மத நம்பிக்கைக்கு அழுத்தமான ஆதாரமாகக் காட்டப்பட்டாலும், மனித உயிர் ஒன்றை அக்ரமமாகப் பறிக்க யாருக்கும் உரிமையில்லை. அது அக்ரமமில்லை என்கிறான் பூஜாரி. பழைய காலத்து சிறுத்தொண்டர் கதை இப்போது நடந்தால், சிறுத்தொண்டர், அவர் மனைவி, அவர்களைப் பரிசோதிக்க வந்த பரமசிவம்-ஆகிய மூவர் பேரிலும் 302 இ. பி. கோ. பிரிவுபடி வழக்கு தொடரப்பட்டுத் தானே ஆகும்!

குழந்தையின் பிரேதத்தைப் பரிசோதித்த மருத்துவரும், குரல்வளை நெறிக்கப்பட்டதால் குழந்தையின் உயிர் போயிருக்கும் என்று தன் கருத்தைத் தெரிவித்துள்ளார். ஆகவே, முறைப்படி இன்னும் சில சாட்சிகளை விசாரித்து, ஆக வேண்டிய காரியங்களை அணுவளவும் பிசகாமல் செய்து, கைது செய்யப்பட்டிருக்கும் பூஜாரி புண்யகோடிமீது, குழந்தையைக் கொலை செய்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

[முடிவுரை:—ஆகவே, மத நம்பிக்கையினாலும், மருள் வந்த வேகத்தாலும், மாதாவுக்குக் குழந்தையை அர்ப்பணம் செய்ததாக பூஜாரி பக்கம் வாதம் தரப்படுகிறது. அதற்கு அனுசரணையாக மற்ற சாட்சியங்கள் சிலவும் இருக்கின்றன. ஆதிமூலத்துக்கும் பூஜாரிக்கும் எந்த விதமான விரோதமுமில்லை என்பது வெள்ளிடைமலை. ஆகவே, கொலைக் குற்றம் சாட்டப்பட்டு கூண்டில் நிறுத்தப்பட்டுள்ள பூஜாரி குற்றவாளி தானா? சட்டம் அவனுக்குத் தண்டனை தருமா? முடிவு செய்யுங்கள்.] ●

லியோ டால்ஸ்டாயின்
புத்துயிர்
தமிழில்:
சொர்ணம்

புத்துயிர் பெற்றவனைப் போல், இருளரக்கனை எங்கேயோ விரட்டிவிட்ட நிம்மதியோடு பகலவன் பவனி புறப்பட்டான். களிப்புற்றுத் திரிந்த புள்ளினங்கள் வசந்த கால வனப்பின் சாயலைக் காட்டின.

அந்த அதிகாலை நேரத்தில்......

வெங்கொடுமைக்கும், தாங்கொணு சித்திரவதைகளுக்கும் உறைவிடமான மாஸ்கோ நகரத்து சிறைச்சாலையில் கரகரத்துப் போன ஒரு ஜெயிலரின் குரல் இப்படி அறிவித்தது: "இன்று ஏப்ரல் மாதம், இருபத்தெட்டாம் தேதி! மாஸ்லோவா வின் வழக்கு தினம். அவளும், வழக்கில் சம்மந்தப்பட்ட மற்ற இரு கைதிகளும் உடனே புறப்பட வேண்டும்!"

மறுகணம் வனப்பு குறையாத தேகக் கட்டும், கவர்ச்சியான முகத் தோற்றமும் கொண்ட ஒரு பெண் வெளியே வந்தாள். ஜெயிலர் அவளை இரு சிப்பாய்களிடம் ஒப்படைத்தான். அவர்கள் வழக்கு மன்றத்தை நோக்கி நடந்தனர்.

தான் ஒரு கைதி என்ற கவலையே இல்லாதவள்போல் நிமிர்ந்த நெஞ்சோடு நடந்தாள் அவள். தெருவிலே சென்று கொண்டிருந்தவர்கள் அனைவரும் அவளைப் பார்க்கத் தவற வில்லை. சிலர் பயப்படவும் செய்தனர். ஆமாம்; அவள் பயங்கரமானவள்; சமுதாயத்தின் அபாய அறிவிப்பு: அவமானச் சின்னம்—என்று எண்ணியவர்கள் தங்கள் கண்களை மறைத்துக் கொண்டு விலகி நடந்தனர். இந்தக் கொடிய நினைவு ஏற்படும் அளவுக்கு அவள் செய்த குற்றம்தான் என்ன? விரக்தி நிறைந்த விழிகளை நாற்புறமும் சுழற்றியபடியே வழக்கு மன்றத்தை அடைந்தாள், அவள்!

அதே நேரத்தில் அந்த வழக்கின் ஜூரிகளில் ஒருவனுன நிச்லியுடாவ் என்ற பிரபு அவசர அவசரமாக வழக்கு மன்றத்தில் நுழைந்து கொண்டிருந்தான். தான் தாமதமாக வருகிருேமோ என்ற நினைவு அவனுக்குத் தோன்றியது. ஆனுலும், அவன் வழக்கு மன்றம் செல்ல வேண்டிய அவசியம் குறித்து அன்று அதிகாலையிலேயே அவனுக்கு கடிதம் எழுதியிருந்தாள், கோர்ச்சாகின் குடும்பத்துக் கோமகள் மிஸ்ஸி!

"நினைவிருக்கட்டும், இன்று காலையில் நீங்கள் ஜூரிகளில் ஒருவராக கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும்; தவறினல் முன்னூறு ரூபிள் அபராதம்! அதோடு மற்ருென்றையும் நினைவு படுத்துகிறேன்; இன்றிரவு எங்கள் வீட்டு விருந்துக்கு அவசியம் வரவும். உங்கள் இடம் காலியாகவே விடப்பட்டிருக்கும்—மிஸ்ஸி"

மிஸ்ஸிக்கு ஏன் இவ்வளவு அக்கரை? கோர்ச்சாகின் குடும்பம் நகரில் மதிப்பு மட்டுமல்ல; மட்டற்ற செழிப்பும் கொண்டது. நாட்டிலே பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடினாலும், விருந்துக்கும் வீண் ஆடம்பரச் செலவுகளுக்கும் அங்கே குறைவே இருக்காது. அந்தக் குடும்பத்துப் பெண் மிஸ்ஸி—நிக்லியுடாவை காதலிக்கிருள். ஆகவேதான் அவனுக்கு கடமையை உணர்த்தியிருக்கிருள். நிக்லியுடாவ் மிஸ்ஸியின் நினைவோடு வழக்கு மன்றத்துக்குள் நுழைந்தான்.

அங்கே அவனைப்போல் பல துறைகளையும் சேர்ந்த இன்னும் பத்து பேர் ஜூரிகளாக உட்கார்ந்திருந்தனர். நீதிபதிகள் வராத காரணத்தால், அவரவர்கள் வழக்கு சம்மந்தமில்லாத வேறு பல உலக விஷயங்களை அலசிக் கொண்டிருந்தார்கள்.

"கோர்ட்டார் வருகின்றனர்" என்ற சேவகனின் குரலைத் தொடர்ந்து, மூன்று நீதிபதிகள் உள்ளே நுழைந்து, தங்கள் இடங்களில் அமர்ந்தனர்.

அடுத்தக் கட்டமாக, உருவிய வாளுடன் கூடிய இரண்டு போலீசார் புடைசூழ குற்றவாளிகள் உள்ளே நுழைந்தனர். முதலில் ஒரு ஆண் கைதி; அடுத்து ஒரு பெண்; மூன்ருவதாக மாஸ்லோவா—கோர்ட்டிலிருந்தோர் அனைவரின் ஏகப் பார்வையையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டு நுழைந்தாள். எல்லோரும் தத்தம் இடங்களில் உட்கார்ந்தனர்.

அங்கே நிலவியிருந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு வழக்கின் விபரத்தைப் படித்தான் குமாஸ்தா:

"சைபீரியாவைச் சேர்ந்த ஸ்மெல்கோவ் என்ற வியாபாரியை மாரிடேனியா என்ற ஓட்டலில் விஷமிட்டுக் கொன்று, அவரது பொருளைக் கொள்ளையிட்டதாக மாஸ்லோவா என்ற விபச்சாரியின் மீதும், ஓட்டல் வேலைக்காரன் ஸைமன் சார்ட்டின்கின், வேலைக்காரி போகோவாவின் மீதும் தொடரப்பட்ட வழக்கின் விபரம்..."

ஜூரிகளின் இடத்தில் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த நிக்லியுடாவ், விபச்சாரி என்ற குரல் காதில் பட்டதும் நிமிர்ந்து உட்கார்ந்தான். மாஸ்லோவா இருந்த பக்கம் தன் பார்வையைத் திருப்பினுன். மறுகணம் ஏனே திடுக்கிட்டான். அவன் மனதில் சிக்கலான கடும் போராட்டம் ஒன்று எழும்பியது.

வழக்கை விளக்கினுன் குமாஸ்தா:

"கொலை செய்யப்பட்ட ஸ்மெல்கோவ் என்ற வியாபாரி குடிப் பழக்கமும், வேசிகளின் வீடு செல்லும் கேவல நடத்தையும் கொண்டவர். கிடேவா என்பவள் நடத்தி வந்த விபச்சார விடுதியில் மாஸ்லோவா என்ற விபச்சாரியிடம் அவர் தொடர்பு கொண்டார். அவள்மீது ஏற்பட்ட நம்பிக்கையினாலும் அபிமானத்

திலும், சென்ற ஜனவரி மாதம் 17-ம் தேதி. அவர் விபச்சாரி யின் வீட்டில் இருந்தபோது, ஓட்டலில் தனது அறையிலிருந்து சிறிது பணம் எடுத்து வருவதற்காக தன் சாவியைக் கொடுத்து அனுப்பினர். ஆனால் அந்த நம்பிக்கை துரோகியோ, ஓட்ட லுக்குச் சென்று, மற்ற கைதிகளாகிய இருவரின் துணை கொண்டு, அவர் பெட்டியிலிருந்த பணம் முழுவதையும், மற்ற விலை உயர்ந்த பொருள்களையும் கொள்ளையிட்டாள். கொள்ளையை மறைப்பதற்காக அன்றைய தினமே அவரை மறுபடியும் ஓட்ட லுக்கு அழைத்து வந்து விஷமிட்டுக் கொன்ருள்...''

மாஸ்லோவாவின் முகம் கோபத்தால் 'குப்'பென்று சிவந்து விட்டிருந்தது. அவளையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த ஜுரி நிக்லியுடாவ் பிரபு அதை கவனித்தான். அதோடு அவன் மனதிலே எழும்பியிருந்த போராட்டமும் அப்போது உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. நகரில் உயர்ந்த கனவான் குழுவைச் சேர்ந்த அவனது தோற்றம், அப்போது செய்யத் தகாத ஒன்றை செய்துவிட்டு விழிக்கும் கண்ணியமற்றவனின் நிலையை ஒத்திருந்தது. அவனது பதட்டம் நிறைந்த கண்கள் மாஸ்லோவாவை விட்டு நகரவேயில்லை.

குமாஸ்தா மேலும் படித்தான்:

''கொள்ளையடித்த பொருளில் மாஸ்லோவாவின் பங்காக ஒரு வைர மோதிரம் கிடைத்தது. வியாபாரி மாண்ட மறுநாள் போகோவா என்ற வேலைக்காரி பாங்கியில் 1800 ரூபிள்களை தன் பெயரில் கட்டியிருக்கிருள். அது அவளது பங்கு போலும்! ஆனால் கொலை விபரம் தெரியாமல், அதிகமான குடியினல் வியா பாரி மாண்டுவிட்டதாக முதலில் அடக்கம் செய்யப்பட்டு விட்டார். ஆனால் அவரது சக வர்த்தகர் ஒருவர் அது இயற்கை யான சாவு அல்ல என்று தான் சந்தேகிப்பதாக சொன்ன காரணத் தால், நான்கு தினங்களுக்குப் பின் புதைக்கப்பட்ட வியாபாரி யின் உடல் தோண்டி எடுக்கப்பட்டது. பிரேத விசாரணையின் போது அவர் விஷமிட்டுக் கொல்லப்பட்ட சதி புலனுகியது...

''கொள்ளை, கொலை—இவற்றை பொழுது போக்காகக் கொண்டிருக்கும் சமுதாயத் துரோகிகளின் பட்டியலில் சேர்க் கப்பட வேண்டிய குற்றவாளிகள் மூவரும் இதோ நிற்கிருர்கள். ஜுரிகள் விசாரணையை கவனித்து தீர்ப்பளிக்க வேண்டுகிறேம்...''

கார்ட்டின்கின் தான் குற்றவாளி அல்ல என்று வாதாடினன். போகோவா, தான் அறைப் பக்கம் செல்லவே இல்லை என்றும், மாஸ்லோவாதான் சென்ருள் என்றும், அவள்தான் கொலைகாரி என்றும் சொன்னுள். நீதிபதி மாஸ்லோவாவின் பக் கம் திரும்பினர்.

''நீ குற்றத்தை ஒப்புக் கொள்கிருயா?'' என்ருர்.

மாஸ்லோவா பரபரப்புடன், "நான் குற்றவாளியல்ல! நான் பணத்தை எடுக்கவில்லை-எடுக்கவேயில்லை! ஆனல் மோதிரத்தை அவரேதான் எனக்குக் கொடுத்தார்! இதுதான் உண்மை!" என்று கத்தினுள்.

அவளது குரலைக் கேட்டதும் நிக்லியுடாவின் உள்ளத்தில் ஏதோ ஒரு உணர்ச்சி தோன்றியது. அங்கே உட்கார்ந்திருப்பதை அவன் விரும்பாதவனுகக் காணப்பட்டான்.

"பணத்தை நீ எடுக்கவில்லை என்கிருயா?" — நீதிபதி கேட்டார்.

"அவர் என்னை எடுத்துவரச் சொல்லிய 40 ரூபிள்களைத் தவிர வேறு எதையும் நான் தொடக்கூட வில்லை!"

"சரி, வியாபாரிக்கு பிராந்தியில் விஷம் கலந்து கொடுத்ததை ஒப்புக் கொள்கிருயா?..."

"ஆம். அதைச் செய்தேன். ஆனல் அது உயிர் குடிக்கும் நஞ்சு என்று எனக்குத் தெரியவே தெரியாது. தூக்க மருந்து என்றுதான் கார்ட்டின்கின் என்னிடம் சொன்னுன்! அப்போதிருந்த என் நிலையில் நான் எதையும் யோசிக்கவேயில்லை!..."

"நடந்ததை விளக்கிச் சொல்!" என்ருர் சர்க்கார் வக்கீல்.

"அன்று நான் ஓட்டலுக்கு அவருக்கு 'விருந்தா'கப் போனேன். திரும்பி வந்தேன் வீட்டுக்கு. என் எசமானியிடம் கிடைத்த பணத்தைக் கொடுத்துவிட்டு படுத்துவிட்டேன். நன்ருகத் தூங்க விரும்பினேன் நான். ஆனல் சற்று நேரத்திற்கெல்லாம் நான் எழுப்பப்பட்டேன்; "உன் வியாபாரி மறுபடியும் வந்துவிட்டான், போ!" என்ருள் ஒரு பெண். எஜமானிக்கு பயந்து நான் சென்றேன். அவர் அந்த விடுதியில் ஒரு விருந்தே வைத்தார். முடிவில் சாராயம் வாங்கிவர அவர் கையில் பணமில்லாமல் போகவே, என்னிடம் சாவியைக் கொடுத்து ஒட்டலுக்கு அனுப்பினுர். நான் ஓட்டலுக்குச் சென்று, இந்த இருவரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு, பெட்டியைத் திறந்து 40 ரூபிள் பணத்தை எடுத்து விடுதிக்கு வந்தேன். ஆனல் அந்தக் காமப்பேயோ என்னை விடவில்லை. மறுபடியும் என்னை ஓட்டல் அறைக்கு அழைத்து வந்தார். அப்போதுதான் மோதிரத்தை எனக்குக் கொடுத்தார்..."

ஒரு நீண்ட பெருமூச்சுக்குப் பின் மாஸ்லோவா மீண்டும் பேசினுள்:

"நான் ரொம்பவும் பயந்தேன். அந்த மனிதரின் ஹிம்சையை என்னல் பொறுக்க முடியவில்லை. நான் மிகவும் களைத்திருந்தேன். இதை நான் கார்ட்டின்கின்னிடம் சொன்னபோதுதான் அவன் தூக்க மருந்தென்று சொல்லி ஒரு தூளைக் கொடுத்தான். நானும் பிராந்தியில் கலந்து அவருக்குத் தந்தேன். அது நஞ்சு

என்று நான் அறியேன். அவ்வளவுதான் நான் அறிவேன். நான் குற்றவாளி யல்ல; உங்களுக்கு இஷ்டமானதைச் செய்து கொள்ளுங்கள்...'' என்றாள்.

காடுஷாவின் வக்கீல் அவளுக்காக வாதாடினார். வியாபாரியைக் கொல்ல வேண்டும் என்ற நோக்கம் அவளுக்கு இல்லை என்றார். சர்க்கார் சகித்துக்கொள்ளும் விபச்சாரத்தால் பெண்குலம் மட்டும் தொல்லைகள் அனுபவிப்பதையும், அவர்களை சந்தியில் இழுத்து விட்ட ஆண்வர்க்கம் மட்டும் தண்டிக்கப்படாமல் இருக்கும் கொடுமையையும் வெளிப்படுத்தி தன் சொல்வன்மையைக் காட்டினார்.

நிக்லியுடாவின் மனம் எரிமலையாகிவிட்டது. அப்போது ஜூரிகள் அலோசனை அறைக்குப் புறப்பட்டனர். அறையின் ஒரு மூலையில் தனியே உட்கார்ந்தான் நிக்லியுடாவ்.

''அவள்....அவள்....காடுஷா—காடுஷாதான்!......'' என்று முணு முணுத்தான் அவன். அவன் உள்ளத்தில் எங்கேயோ ஒரு மூலையிலிருந்து கோரமாக எழும்பிய மனச்சாட்சியின் கூக்குரல் ''குற்றவாளி அவள் அல்ல: துரோகியே, நீதான்; நீயேதான்!'' என்று அலறியது.

அவன் வெறி பிடித்தவனைப் போல தன் தலையைப் பிடித்துக் கொண்டான். மடைதிறந்து வெள்ளமென எண்ண அலைகள் பின்னோக்கிப் புரண்டன......

பத்து ஆண்டுகளுக்கு முன்பு...பூத்துக் குலுங்கும் புதுமலராக விளங்கிய காடுஷாதான், இன்று புழுதியிலே கசக்கி எறியப்பட்ட மாஸ்லோவாவாக மாறிவிட்டாள்...ஐயோ, இந்தக் கொடுமைக்கு நான்தானே காரணம்!—அவன் தவித்தான். தடுமாறிக் கொண்டிருந்த அவனது நெஞ்சத்து வீதியில் காடுஷா நடை போட்டாள்.

அன்று, காடுஷாவை முதன் முதலில் சந்தித்தபோது அவன் ஒரு கலாசாலை மாணவன். சோஷலிச எண்ணங்கள் மனதிலே அரும்ப உலகத்து அநீதிகளைக் கண்டு வெட்கப்பட்டுக் கொண்டிருந்த நேரம். விவசாயிகளுக்கே நிலம் உரிமை என்ற ஸ்பென்சரின் சமூக தத்துவத்தை அவன் உணர்ந்தவன். நில பாத்தியதை பற்றிய அந்தக் கருத்து அவனை மிகவும் கவர்ந்திருந்தது. ஆகவே அவன் துணிகரமான செயல் ஒன்றையும் அப்போது செய்ய முடிந்தது. தன் தந்தையிடமிருந்து அவனுக்குக் கிடைத்த பரம்பரை சொத்தாகி ஐநூறு ஏக்கர் நிலத்தை விவசாயிகளுக்கே கொடுத்தான். அந்த நேரத்தில் அவன் எழுதிக் கொண்டிருந்த நிலப்பங்கீடு பற்றிய கட்டுரையை நிம்மதியாக எழுதி முடிப்பதற்காக அவன் தேர்ந்தெடுத்த இடம் பனோவாவிலுள்ள அவனது அத்தைகளின் வீடுதான். அதற்காக அவன் சென்றிருந்தபோதுதான் காடுஷாவை சந்தித்தான்.

காடுஷா ஒரு விபச்சாரியின் மகள். குழந்தைகளைப் பெற்று அவைகளைக் கொன்று விடுவது அவளது தாயின் செயல். அந்தக் கோரத்திற்கு இலக்காகாமல் பரிதாபத்திற்குரிய சிசுவாக இருந்த போதே அவளைக் காப்பாற்றிவிட்டார்கள் நிக்லியுடாவின் அத்தைகள். அந்தக் காடுஷா வளர்ந்து பெரியவளாகிவிட்ட நேரத்தில் தான் மாணவன் நிக்லியுடாவ் அவர்களின் வீட்டுக்கு வந்தான். காடுஷாவின் கள்ளம் கபடற்ற முகத்தோற்றம் அவனை மிகவும் கவர்ந்தது. அதன் பிறகு அன்பினால் பிணைக்கப்பட்ட இரு உள்ளங்களுக்கிடையே ஏற்படக்கூடிய உறவு அவர்களிடம் தோன்றியது. அந்த உறவு வாழ்க்கை ஆனந்தத்தின் ஒரு சாதாரண கூறே என்று அவன் நினைத்தான். அதனால் தான் அக்கிராமத்தை விட்டுப் பிரிய நேர்ந்தபோது மிகவும் வருந்தவும் செய்தான்.

ஆனால், மறுபடியும் இரண்டு ஆண்டுகள் கழித்து அவனை சந்திக்க நேர்ந்தபோது, அவன் மிகவும் மாறிவிட்டிருந்தான். ராணுவத்தில் உயர் பதவி ஒன்றை ஏற்றுக் கொள்ளப்போகுமுன் அவன் தன் அத்தைகளின் வீட்டுக்கு வந்தான். அவன் இப்போது பழைய நிக்லியுடாவ் அல்ல; பழுத்த சுயநலமி! அன்று அறிவுப் பசி பிடித்து வந்த மாணவன்; இன்றோ உடற் பசியைத் தணிக்க வழி தேடிய முரடன்! சுருக்கமாகச் சொல்லப்போனால் அன்று அவன் ஒரு லட்சிய வீரன்; அதனால்தான் தன் சொந்த நிலத்தை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க முடிந்தது! இன்றோ அவன் தன் சுகமே பெரிதெனக் கருதும் உல்லாசி; உலுத்த எண்ணங்கள் படைத்த வெறும் கட்டை!

ஆகவே அவன் இப்போது காடுஷாவைப் பார்த்த பார்வை பயங்கரமாகத்தான் இருந்தது. அதிலே அன்பு இல்லை; சமயத்தை நழுவவிட்டுவிடாதே என்று அறிவிக்கும் மிருக இச்சை தான் பளிச்சிட்டது. அதே காரணத்திற்காக அவன் ஈஸ்டர் பண்டிகையைத் தன் அத்தைகள் வீட்டிலேயே கழிக்க ஒப்புக் கொண்டான்.

ஈஸ்டர் தினத்தன்று இரவுதான் அந்த பயங்கரச் சம்பவம் நடந்துவிட்டது. அன்று நள்ளிரவில் காடுஷா படுத்திருந்த தனி அறைக்குச் சென்றான் நிக்லியுடாவ். அவன் மனதிலே அப்போதைக்கப்போது தட்டுத் தடுமாறி தலைதூக்கிய தூய்மை எண்ணத்தை நசுக்கிவிட்டு எழுந்து நின்ற மிருக உணர்ச்சி அவனை அப்படி விரட்டியது.

"வேண்டாம், அன்புள்ள பிரபுவே! இதென்ன கேவலம்! என்னை விட்டுவிடுங்கள்!..." என்று கெஞ்சினாள் காடுஷா. பரிதவிக்கத்தான் செய்தாள். ஆனால் பச்சாதாப உணர்ச்சிக்கு அந்தப் பண்பு கெட்டவனின் உள்ளத்தில் கடுகளவும் இடமில்லையே என்ன செய்வது? காடுஷா பலியாகிவிட்டாள்!

அவளுக்குப் பணம் கொடுத்துவிட்டால் தனது பாபக்கறை மறைந்துவிடும் என்று கருதினனே என்னவோ, மறுநாள் அவள் கையில் நூறு ரூபிள் நோட்டுகளை வைத்து திணித்துவிட்டு கிராமத்தை விட்டுப் புறப்பட்டு விட்டான் நிக்லியுடாவ்!

அவனது அந்த இரக்கமற்ற, கொடிய, கோழைத்தனமான செய்கைக்கு இலக்கான காடுஷாதான், ஏழு வருடங்களுக்குப் பிறகு இன்று அவன் முன்னே கொலைகாரி மாஸ்லோவாவாக நிற்கிருள்.

அவன் வெட்கப்பட்டான். தனது கேவல செய்கைக்காக மட்டுமல்ல: தான் ஒரு பயங்கரவாதி என்று அவன் எண்ணிய மாத்திரத்தின் குன்றிப்போனுன். அதைத் தொடர்ந்து எழுந்த அவனது விம்மல் ஒலியைக்கூட கவனியாமல் மற்ற ஜூரிகள் வழக்கை பரிசீலித்துக் கொண்டிருந்தனர். முடிவில் "திருட வேண்டும் என்ற நோக்கத்தோடு எந்த சொத்தையும் திருட வில்லை மாஸ்லோவா!" என்ற முடிவுக்கு வந்தனர். கோர்ட்டுக் குத் திரும்பி வந்து அதைத் தெரிவித்தனர். ஆனல் அதே சமயத் தில் 'கொல்ல வேண்டு மென்ற நோக்க மில்லாமல் விஷத்தைக் கொடுத்தாள்' என்ற பகுதியையும் எழுத மறந்து விட்டனர்.

முடிவில் நீதிபதி தீர்ப்பைப் படித்தார். எல்லா சொத்து உரிமைகளையும் பறித்துவிட்டு, கார்ட்டின்கின்னுக்கு சைபீரியா வில் எட்டு வருட கடுங்காவல் தண்டனையும், காடுஷாவுக்கு நான்கு வருட கடுங்காவல் தண்டனையும், பொகோவாவிற்கு மூன்று வருட கடுங்காவல் தண்டனையும் விதித்தார்.

மறுகணம் வழக்கு மன்றத்தை "ஐயோ! நான் நிரபராதி!" என்ற காடுஷாவின் அலறல் கிடுகிடுக்க வைத்தது. அழுது புரண்ட அவளை சிப்பாய் இழுத்துச் சென்றுன்.

அக் கண நேரத்தில் நிக்லியுடாவின் உள்ளத்தில் ஏழு ஆண்டு களாக புதையுண்டு கிடந்த மனிதத் தன்மை புத்துயிர் பெற்று எழுந்து நின்றது. தன் ஒருவனல் சமுதாயத்தின் அதள பாதா ளத்திற்கு உருட்டித் தள்ளப்பட்டுவிட்ட காடுஷாவுக்காக இனி அவன் செய்ய வேண்டியவை நிறைய இருக்கிறது—அது அவன் கடமை—என்று எண்ணினுன்.

உடனடியாக அவன் பிரசித்தி பெற்ற வக்கீல் பானரினை வழக்கு மன்றத்திலேயே சந்தித்தான். காடுஷாவின் வழக்கு விபரத்தை எடுத்துச் சொல்லி, அவள் தண்டனையைக் குறைக்க மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய வேண்டும் என்று தெரிவித் தான். பானரின் அவனை இரண்டு நாள் கழித்து சந்திக்கும்படிச் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

பானரின் திறமையான வக்கீல்—அவரது வாதத்தின் வலு விற்கு வெற்றி நிச்சயம் உண்டு. அவர் அநீதிக்குப் போராடினு லும், நீதி தோற்றுத்தான் போகும். அவரது உதவி

கொண்டு காடுஷாவுக்கு உற்ற இன்னலைத் துடைத்து விடலாம்; இன்று முதல் தனக்கு புதிய — அவசியமான வேலை ஒன்று சுமத்தப்பட்டு விட்டது என்று எண்ணமிட்ட வண்ணம் நிக்லியுடாவ் நடந்தான். அப்போது அவனுக்கு காலையில் மிஸ்ஸி அனுப்பிய கடிதத்தின் ஞாபகம் வந்தது. விருந்துக்குச் செல்ல முழுமனம் இல்லை அவனுக்கு; இருந்தாலும் வண்டி ஒன்று அமர்த்திக் கொண்டு கோர்ச்சாகின் குடும்பத்துப் பிர் மாண்டமான மாளிகையை அடைந்தான்.

வழக்கத்திற்கு மாருக அவன் முகத்தில் கப்பிக்கிடந்த கவலை மேகத்தைக் கண்டு, அவனை மோகித்த மிஸ்ஸிகூட ஆச்சரியப் பட்டாள். அன்றைய விருந்து அவனுக்கு கொஞ்சமும் சுவைக் கவேயில்லை. அமைதியிழந்து தடுமாறும் அவனது குற்றம் புரிந்த நெஞ்சுக்கு அறுசுவை உணவும், ஆட்டம் பாட்டமும் வேம்பான தில் வியப்பென்ன? 'அவனது அர்த்தமற்ற போக்குக்குக்காரணம் தான் என்ன?' என்ற வினவை அந்த மாளிகையின் மூலைமுடுக் கெல்லாம் எழுப்பி விட்டு தன் வீடு போய்ச் சேர்ந்தான்.

வீடு சென்றது முதல் அவனது அமைதியின்மை விசுவரூபம் எடுத்துவிட்டது. திரும்பும் திசை எல்லாம் "துரோகி! துரோகி!" என்ற குரல் எழுப்பி, நீதியின் நீள் கரங்கள் தன் குரல்வளையை நெறிப்பதாக உணர்ந்தான்; பயந்தான்; உபயோகமற்ற வாழ்க் கைச் சேற்றில் சிக்கிக் கொண்டு விட்டதாகத் தடுமாறினன். சிக் கல்விடுபட என்ன செய்ய வேண்டும்? கோர்ச்சாகின் குடும்பத் துத் தொடர்பை எப்படித் துண்டித்துக்கொள்வது? காடுஷாவை விடுதலை செய்தபின் என்ன செய்வது?-இப்படிப் பல எண்ணங்க ளூடே அன்றைய துன்ப இரவு கழிந்தது.

○

மறுநாள் காலை வழக்கு மன்றம் சென்ற நிக்லியுடாவ் ஜெயில் அதிகாரியைச் சந்தித்து, சிறையில் காடுஷாவை சந்திப்பதற்கு அனுமதி பெற்றுக் கொண்டு, நேராக சிறைக்குச் சென்ருன்.

கைதிகளை சந்திக்கும் இரும்பு வேலியிட்ட அறைக்குள் அவன் அடியெடுத்து வைத்தபோது அவன் இருதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. காடுஷாவை எப்படி அழைப் பது? தன்னைப் பார்த்தவுடன் "என் சரிந்த வாழ்வுக்குக் காரண மான சதிகாரனே, ஓடிப்போ இதை விட்டு!" என்று விரட்டினல் என்ன செய்வது? மனப் போராட்டத்தோடு காடுஷாவைத் தேடினன் அவன். அந்த இடத்தில் ஒரே கூச்சலும் குழப்பமு மாக இருந்தது. கைதிகளைப் பார்க்க வந்திருந்தவர்கள், அபூர்வ மாகக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட எண்ணுதவர் களாக சூழ்நிலையை மறந்து பேசிக் கொண்டிருந்தனர். ஆனல் அதோ...காடுஷா!...வெள்ளை கௌன் அணிந்து, தலையில் வெள்ளை கைக்குட்டையைக் கட்டிக் கொண்டிருந்த அவளை சந்திக்க

யாருமே வரவில்லை!...நிக்லியுடாவ் தனியே நின்று கொண்டிருப்பதைப் பார்த்த பெண் வார்டர் "நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?" என்று அதட்டினாள்.

"காடுஷாவை!" என்றான் நிக்லியுடாவ். காடுஷா அழைக்கப்பட்டாள். அவள் தன்னைச் சுற்றி நின்ற கைதிகளை தள்ளிவிட்டு முன்னால் வந்து நிமிர்ந்து பார்த்தாள். அவனை எங்கேயோ பார்த்த ஞாபகம் அவளுக்கு வந்தது. மனத்திரையிலிருந்து அழிந்து போய் விட்ட அவனை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்து விட்டாள். ஆனால் நிக்லியுடாவ் நினைத்ததைப்போல் சீறிப் பாயவில்லை. அவன் தன்னைப் பார்க்க வந்திருக்கிறான் என்பதை அவளால் நம்பவே முடியவில்லை. "என்னை ஏன் பார்க்க வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"நீ என்னை மன்னிக்க வேண்டும்: அதற்காக. என் பாபத்திற்கு பரிகாரம் தேட விரும்புகிறேன்; அதற்காக!..."—நிக்லியுடாவ் மனம்விட்டுப் பேசுவதில் தவறில்லை என்று எண்ணினான்.

பரிதாபமாகச் சிரித்தாள் காடுஷா. "நடந்தது நடந்துபோய் விட்டது. இப்போது நான் சைபீரியாவுக்கு அனுப்பப்பட இருக்கின்ற கைதி..." என்றாள்.

"உன்னை விடுவிக்க நான் முடிந்ததை எல்லாம் செய்யப் போகிறேன்...மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப் போகிறேன். ஏனெனில் நீ குற்றவாளியல்ல; எனக்குத் தெரியும்!..."-நிக்லியுடாவ் இன்னும் எதுவோ சொல்ல நினைத்தான். அதற்குள் "நேரமாகிவிட்டது" என்ற அறிவிப்பு கிளம்பியது.

நிக்லியுடாவ் திரும்பினான். 'அவள் விழித்து எழுந்து முன்பு எப்படி இருந்தாளோ, அப்படி ஆக வேண்டும்' என்று எண்ணியபடி நடந்தான்.

காடுஷாவுக்கு அன்றைய சம்பவம் எதிர்பாராததாக இருந்தது. நிக்லியுடாவின் சந்திப்பு பழைய நினைவுகளைத் தோற்றுவித்தது.......

அவனுடன் அவள் கொண்டிருந்த ஒரு நாள் உறவு—அவள் வயிற்றிலே கருவாக வளர்ந்தது. மன வேதனையின் கொடுமை தாங்காது அந்த வீட்டிலிருந்து வெளியேறினாள். வேலைக்குச் சென்ற மற்ற இடங்களிலெல்லாம், சமூகத்தின் முன்னே உயர்ந்த மனிதர்கள் என்று நடமாடியவர்கள்கூட அவளை இம்சித்தனர். பைத்தியக்காரி, கற்பு இனிமேலாவது காப்பாற்றப்பட வேண்டும் என்று கருதினாளோ என்னவோ—எங்கெங்கோ ஓடினாள். முடிவில் கள்ளத்தனமாக சாராயம் விற்கும் ஒரு மருத்துவச்சியின் வீட்டில் குழந்தை பெற்றாள். குழந்தையும் இறந்து விட்டது; அது நல்லது என்றுதான் அவள் நினைத்தாள். பிறகும் அவள் தன்னைப்

பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. விபச்சார விடுதி நடத்தும் ஒருத்தியிடம் சிக்கிவிட்டாள். அதன்பின் பத்தில் ஒன்பது பெண்களுக்கு பயங்கர வியாதியை—மரணத்தை விளைவிக்கும் கோர வாழ்க்கையைத் துவங்கிவிட்டாள். பகல் முழுவதும் தூக்கம்; இரவில் ஓய்வற்ற ஈனத் தொழில்—இப்படி ஏழு வருடங்கள் உருண்ட பின்தான், அவளுக்கு அங்கிருந்து 'விடுதலை' வழங்கி, சிறைக்குள் தள்ளிய அந்தச் சம்பவம் நடைபெற்றது.

'நிக்லியுடாவ் நான் முன்பு சந்தித்த மாணவன் அல்ல; இப்போது அவன் ஒரு பணக்காரன். அவனை நன்கு பயன் படுத்திக்கொள்ள வேண்டும்' என்ற நினைவோடு சிறைக் கோட்டம் அடைந்தாள் காடுஷா.

○

அடுத்தமுறை நிக்லியுடாவ் சிறைக்குச் சென்றபோது வக்கீல் பானரினிடமிருந்து பெற்ற அப்பீல் மனுவையும் கொண்டு சென்றிருந்தான். அனுமதியுடன் காடுஷாவை சந்தித்து, அதில் கையெழுத்தும் வாங்கிக் கொண்டான். அன்று கொஞ்சம் நெருங்கிப் பழகினாள் காடுஷா. தான் சொல்ல நினைத்ததை சொல்லிவிட எண்ணினான் நிக்லியுடாவ். "இந்த மனுவால் பலன் கிடைக்காவிட்டால், மன்னரிடமே அப்பீல் செய்ய எண்ணியிருக்கிறேன், காடுஷா! என் தவறுக்கு பிராயச்சித்தம் வேண்டாமா? வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல; செயலின் மூலமும் தான். நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டேன்..." என்றான், துணிவுடன்.

மறுகணம் காடுஷாவின் முகத்தில் பீதிக் களை பரவியது. "நான் ஒரு கைதி; விபச்சாரி! என் விலை அற்ப பத்து ரூபிள் நோட்டுதான்! நீங்கள் பெரிய மனிதர்; பிரபு! வேண்டாம் இந்த எண்ணம்! அதை விட நான் தூக்குப் போட்டுக் கொண்டு விடுவேன்!" என்று சொல்லிவிட்டு விறு விறுவென்று நடந்தாள்.

"இருந்தாலும் நான் உனக்கு சேவை செய்துகொண்டுதான் இருப்பேன்!" என்று நிக்லியுடாவ் குரல் தழு தழுக்க சொல்லியதைக்கூட அவள் காதில் வாங்கவில்லை.

நிக்லியுடாவ் வெளியேறியபோது ஒரு ஜெயிலர் அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனான். அரசியல் கைதிகளின் வார்டில் இருக்கும் ஒரு பெண் கைதி அனுப்பிய கடிதம் அது. நிக்லியுடாவ் அதைப் படித்தான்:

"கிரிமினல் கைதி ஒருத்தியின்பால் அக்கறை கொண்டிருக்கும் உங்களை நான் சந்திக்க விரும்புகிறேன். நான் நிறைய பேச வேண்டும்; முயற்சிக்கவும்.—வேரா டுகோவா"

அவளை நிக்லியுடாவ் முன்பு ஒருமுறை சந்தித்திருக்கிறான். அவள் ஒரு பள்ளி ஆசிரியை. ஒருமுறை அவன் வேட்

டைக்குச் சென்றிருந்தபோது, ''பணத்தை பல வழிகளிலும் பாழாக்கும் நீங்கள், என் படிப்புக்கு உதவக்கூடாதா?'' என்று கேட்டாள். நிக்லியுடாவ் அவளது கலாசாலைக் கல்விக்கு அப்போது எண்பது ரூபிள் பணம் கொடுத்தான். இப்போது அவள் புரட்சிக்காரி—அரசாங்க விரோதி! அவளை எப்படியும் சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்தான் அவன்.

○

உதவி கவர்னராக இருந்த தன் பால்ய நண்பனிடம் அனுமதி பெற்று மறுநாள் சிறைச்சாலைக்குச் சென்றான் நிக்லியுடாவ். அவனது பணக்காரத் தோற்றத்தையும், கைதிகளின் பால் அவன் அக்கரை கொண்டிருக்கிறான் என்பதையும் கேள்விப்பட்டிருந்த கைதிகள் அவனைப் பிரியமுடன் பார்த்தனர். சிறைச்சாலை—சித்திரவதைக்கூடம் என்று சொல்லி அழுதனர். பாஸ்போர்ட் இல்லாமல் சொந்த மாகாணத்திலிருந்து அங்கு வந்ததிற்காக அடைக்கப்பட்டிருந்த 130 கைதிகள் அவனைச் சூழ்ந்துகொண்டு முறையிட்டனர்.

''நாயைவிடக் கேவலமாக நடத்தப்படுகிறோம்; எங்களை வெளியேற்ற உதவுங்கள், தர்மப் பிரபுவே!'' என்று கெஞ்சினார்கள். ஆவன செய்வதாக உறுதி தந்தான் அவன்.

கடைசியில் வெராடுகோவாவை சந்தித்தான். அவள், தான் புரட்சிக்காரியான கதையைச் சொன்னான். நிக்லியுடாவின் உதவியால் அவள் படித்து முடிந்ததும், தொழிற்சாலைகளிலும், கிராமப் புறங்களிலும் அரசாங்க எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து வந்த ரகசிய இயக்கத்தில் சேர்ந்து விட்டாளாம். ''என்னை நாடுகடத்தப் போகிறார்களாம்: இருந்தாலும் நான் மகிழ்கிறேன்!'' என்றாள். கடைசியில் தான் அவனை சந்திக்க விரும்பியதன் காரணத்தைச் சொன்னாள்.

புரட்சி இயக்கத்தில் எந்தவித தொடர்பும் கொள்ளாத அவளது தோழி ஒருத்தியை பீட்டர்ஸ் பாச்கில் ஐந்து மாதமாக சிறை வைத்திருப்பதாகவும், அவளை விடுதலை செய்ய முயற்சிக்கும்படியும் வேண்டினாள்.

காடுஷாவின் அப்பீல் வழக்கு சம்மந்தமாக தான் பீட்டர்ஸ்பர்க் செல்லும்போது அது விஷயத்தைக் கவனிப்பதாகச் சொன்னான் நிக்லியுடாவ்.

○

மறுபடி அவன் பாஸ்போர்ட் இல்லாதவர்களை விடுவிக்க வேண்டும் என்று கேட்க தன் நண்பனான கவர்னரை சந்திக்கச் சென்றான். அவன் மனைவி அன்றைய தினம் நடத்திய விருந்தில் கோர்ச்சாகின் குடும்பத்து மிஸ்ஸியை சந்தித்தான். தன்னை அவன் மறந்துவிட்டதாகக் குற்றம் சாட்டினாள் அவள்.

"ஆமாம்! இப்போது உங்களை எல்லாம் சந்திப்பதைவிட முக்கியமான வேலைகள் எனக்கு இருக்கின்றன." என்று வேண்டா வெறுப்புடன் பதில் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

உண்மையில் இப்போது அவனுக்கு அதிக வேலைகள்தான் இருந்தன. காடுஷாவின் வழக்கு இரண்டு வாரத்திற்குள் மேல் கோர்ட்டுக்கு வர இருந்தது. அப்போது அவன் பீட்டர்ஸ் பர்க்கில் இருக்க வேண்டும். வழக்கு தோற்ருல் அவளை சைபீரியாவுக்கு அனுப்பிவிடுவார்கள். அவனும் அவளுடனேயே சைபீரியாவுக்கு சென்றுவிட வேண்டுமே! அதற்கிடையில் தனது ஜமீன் நிலங்கள் சம்மந்தமாக சில ஏற்பாடுகள் செய்ய விரும்பினுன்.

முதலில் அவன் தன் தாயாரின் மூலமாகத் தனக்குக் கிடைத்த குஸ்மினஸ்கி ஜமீனுக்குப் போனுன். அதை நிர்வகித்து வந்த கங்காணி குடியானவர்களைக் கொடுமைப் படுத்திக் கொண்டிருந் ததை உணர்ந்து வெட்கினுன். மாணவனுக இருந்த காலத்தில் தன் தந்தையிடமிருந்து கிடைத்த நிலத்தை குடியானவர்களுக்கே பகிர்ந்து தந்துவிட்ட தங்கமான உள்ளத்தையும் — பின் தரம் கெட்டு தான்தோன்றியாகத் திரிந்த நிலையையும் ஒப்பிட்டான். உடனடியாக குடியானவர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டி, நிலத்தை குடியானவர்களே சொந்தத்தில் சாகுபடி செய்து கொள்ள வேண்டுமென்றும், ஜமீனுக்கு குறைந்த அளவு வாரம் செலுத்திஞல் போதும் என்றும் அறிவித்தான். தான் நினைத்தபடி செய்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியுடன், அடுத்தபடியாக அத்தைகளிடமிருந்து தனக்குக் கிடைத்த பனேவா ஜமீனுக் குச் சென்ருன்.

அங்கு அவன் மனம் மிகவும் வேதனைப்பட்டது. கட்டுரை எழுத வந்தபோது காடுஷாவை முதன் முதலில் அங்குதானே சந்தித்தான்; மறுபடியும் வந்து அவளது அழிவுக்கு வித்திட்ட தும் அங்குதானே! பொலிவு இழந்து கிடந்த அந்த மாளிகை அவனைத் தூற்றுவதாக உணர்ந்தான்: பித்தனைப்போல் தடுமாறினுன்.

கிராமத்தைச் சுற்றியபோது, அங்கு வக்கிர ஆட்சி செலுத் திய வறுமையையும், ஜமீன் பொறுப்பாளர் நடத்திய சித்திரவதை களையும் புரிந்து கொண்டான்.

ஹென்றி ஜார்ஜின் நில அடிப்படைத் தத்துவம் அவன் நினைவுக்கு வந்தது. "நிலம் ஒருவருக்கும் சொந்தமில்லை; காற்று, நீர்—இவைபோல அதிலும் எல்லோருக்கும் பங்குண்டு; அது தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமே சொந்தமாக முடியாது!" என்பதில் அடங்கியுள்ள உண்மையை உணர்ந்தான். உடனடி யாக குடியானவர்களைக் கூட்டினுன் நிக்லியுடாவ். நிலத்தை

விற்க உரிமையின்றி, எல்லோருக்கும் பகிர்ந்தளிக்க முடிவுசெய்து விட்டதைத் தெரிவித்தான். இப்போது அவனுக்கு பூரண திருப்தி ஏற்பட்டது. அத்தையின் வீட்டையும், மற்ற சாமான்களையும்கூட பத்தில் ஒரு பங்கு விலைக்கு விற்றுவிட்டான். அப்போது தற்செயலாகக் கிடைத்த ஒரு பழைய புகைப் படத்தை மட்டும் பத்திரப்படுத்திக் கொண், டான். அது அவன் பனேவாவுக்கு முன்பு வந்திருந்தபோது எடுத்தது. அதிலே, அவன், அவனது அத்தைகளுடன், எழில் பொங்கும் காடுஷாவுடனும் இருந்தான்.

வாழ்வுக் காலத்தில் தான் சாதிக்க வேண்டியவற்றுள் துணிகரமான சிலவற்றை முடித்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியோடு அவன் நகரத்திற்குத் திரும்பினன்.

○

வந்ததும் முதல் காரியமாக சிறைக்குச் சென்று காடுஷாவை சந்தித்தான். அவள் இப்போது கொஞ்சம் மகிழ்ச்சியுடன் இருந்தாள். அப்பீல் சம்மந்தமாக தான் பீட்டர்ஸ்பர்க் செல்லப் போவதாகத் தெரிவித்தான், நிக்லியுடாவ். அத்தை வீட்டிலிருந்து எடுத்து வந்த புகைப்படத்தை அவளிடம் தந்தான். அதைப் பார்த்ததும் காடுஷாவின் கண்கள் கலங்கிவிட்டன.

அவள் நிலையைக் கண்ட நிக்லியுடாவ், ''தண்டனை ரத்தாகி விடலாம் காடுஷா! அதன்பின்...'' என்று ஆரம்பித்தான்.

''என் மறுப்பை நீங்கள் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லையா? நம் திருமணம் நடக்கக் கூடாத ஒன்று!'' என்ருள் அவள்.

''நீ சைபீரியா சென்ருலும், அல்லது உலகத்தின் எந்த மூலைக்குத்தான் போனலும் உன்னைப் பிரியமாட்டேன் காடுஷா! உனக்கு சேவை செய்ய ஓடோடியும் வருவேன்!'' என்று உறுதியுடன் சொல்லிவிட்டு நகர்ந்தான் நிக்லியுடாவ்!

○

நிக்லியுடாவ் பீட்டர்ஸ்பர்க் வந்தபோது தன் தாயின் தங்கையான சிமோட்டி ஒருத்தியின் வீட்டில் தங்கினன். அவளது கணவன் ஒரு மாஜி மந்திரி. காடுஷாவின் சம்மந்தமாக நிக்லியுடாவ் எடுத்துக்கொண்ட முயற்சி அவன் தகுதிக்குக் கீழ்ப்பட்டது என்று அவர்கள் கருதினர்கள். இருந்தாலும் அவரது சிற்றப்பா அப்பீல் குழு உறுப்பினர் ஒருவரான உல்ப் என்பவருக்குக் கடிதம் கொடுத்தார்.

முன்பு மாஸ்கோ சிறைச்சாலையில் அரசியல் கைதியான வெராடுக்கோவா, தன் தோழி ஒருத்தி அநியாயமாக சிறைப் பட்டிருப்பது பற்றி தெரிவித்திருந்தாளல்லவா, அது பற்றியும்

சொன்னான் நிக்லியுடாவ். புரட்சி இயக்கத்தை சபித்துக் கொண்டே தன் தோழி ஒருத்திக்குக் கடிதம் கொடுத்தாள் அவளது சிற்றன்னை. அவளது கணவன் ஓர் உயர்ந்த அதிகாரி— அவனால்தான் அந்தப் பெண் விடுதலையாக முடியும் என்றும் சொன்னாள்.

இரண்டொரு நாட்களில் அவனுக்கு நல்ல பதில் கிடைத்தது. "சிறை கமாண்டருக்கு என் கணவர் கடிதம் எழுதிவிட்டார். ஷுஸ்டோவா என்ற அந்த நிரபராதி விடுதலை செய்யப் படுவாள்." என்று அவனது சிற்றன்னையின் தோழி கடிதம் எழுதியிருந்தாள்.

○

காடுஷாவின் வழக்கு தினத்தன்று மாஸ்கோவிலிருந்து வக்கீல் பானரினும் வந்துவிட்டார். பிரமாண்டமான அப்பீல் கோர்ட்டில், மகத்தான சக்தி பெற்ற நான்கு நீதிபதிகள் காடுஷாவின் எதிர்காலம் பற்றி என்ன முடிவுக்கு வரப்போகிறார்களோ— என்ற பதட்டத்துடன் காத்திருந்தான் நிக்லியுடாவ்.

நான்கு நீதிபதிகளில் ஒருவரான உல்ப் காடுஷாவின் விடுதலைக்காக வாதாடினார். அவர் நிக்லியுடாவின் சிற்றப்பாவிடமிருந்து கடிதம் பெற்றவராயிற்றே! மற்ற மூவரும் மூன்று கோணங்களிலே நிற்பவர்கள். தீர்ப்பு என்னவாகுமோ என்று பதறிக் கொண்டிருந்தான் நிக்லியுடாவ். முடிவில் "அக்கிரமம்! அக்கிரமம்!!" என்ற அவனது அலறலோடு, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது!

'கீழ்க் கோர்ட்டில் வழக்கு பாழாகிவிட்டது. என்ன செய்வது?' என்று வருத்தப்பட்டுக் கொண்டார் சர்க்கார் வக்கீல்!

அன்று இரவு முழுவதும் நிக்லியுடாவ் தூங்கவேயில்லை. முயற்சி வியர்த்தமானது கண்டு அவன் புழுங்கினான். காடுஷா சைபீரியாவுக்குப் போக வேண்டியதுதானா? "ஒரு சர்க்கார் நீதிக்குப் புறம்பாக யாரையும் சிறையில் அடைக்குமானால், அந்த சர்க்காரின் கீழ் நல்லவர்கள் இருக்க வேண்டிய இடம் சிறைச்சாலைதான்" என்று யாரோ ஓர் அமெரிக்க எழுத்தாளர் எழுதியிருந்தது அவன் நினைவுக்கு வந்தது.

○

தோல்வியுடன் பீட்டர்ஸ் பர்க்கை விட்டு அவன் மாஸ்கோ சென்றதும் சிறைக்குச் சென்று காடுஷாவை சந்தித்தான்.

"உனக்கு ஒரு கெட்ட செய்தி கொண்டு வந்திருக்கிறேன், காடுஷா! அப்பீலில் உன் வழக்கு தள்ளப்பட்டு விட்டது!"— என்றான்.

காடுஷா எதுவும் பதில் பேசாது குனிந்தபடி நின்றாள். 'உங்களுக்கு ஏன் இந்த வீண் தொல்லை?' என்று கேட்பதைப்போல

இருந்தது அந்த மௌனம். "இருந்தாலும் நான் சோர்ந்துவிடவில்லை; மன்னருக்கு மனு அனுப்புவோம்—ஒரு வேளை வெற்றி கிடைக்கலாம்" என்றான்.

மன்னருக்கு அனுப்ப வேண்டிய மனுவில் அவள் கையெழுத்துப் போட நிமிர்ந்தபோது, அவளது கண்களில் ததும்பி நின்ற கண்ணீரை கவனித்தான் நிக்லியுடாவ். "கவலைப் படாதே காடுஷா! நானும் உன்னுடன் சைபீரியாவுக்கு வரப் போகிறேன்!" என்றான். ஆனால் அதை விரும்பாதவள்போன்ற முகத் தோற்றத்தை வைத்துக் கொண்டு காடுஷா போய் விட்டாள்.

○

ஜூலை மாதம் ஐந்தாம் தேதி! கைதிகள் சைபீரியாவுக்கு அன்றுதான் அழைத்துச் செல்லப்பட இருந்தார்கள். முதல் நாளே நிக்லியுடாவ் தன் சாமான்களை எல்லாம் தயார் செய்து கொண்டான். தானும் சைபீரியாவுக்கு செல்லுவதுதான் கடமை என்று உறுதியாக நம்பினான். அது பற்றி அவனிடம் வாதாடிய தன் சகோதரியிடமும், அவள் கணவனிடமும்கூட சற்று ஆத்திர மாகப் பேசிவிட்டான்.

சிறைச்சாலையிலிருந்து 623 ஆண் கைதிகளும், 64 பெண் கைதிகளும் கடும் வெய்யலில் கால்நடையாக புகைவண்டி நிலையத்தை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டனர். 'நாங்கள் வைத்ததுதான் சட்டம்' என்பதைப்போல சிப்பாய்கள் அவர்களை மாட்டு மந்தைபோல் விரட்டிக் கொண்டு சென்றனர்.

அந்த கோர ஊர்வலத்தை வேடிக்கை பார்த்த நகர மக்கள் பெருமூச்சு விட்டனர். வண்டியில் வந்துகொண்டிருந்த நிக்லியுடாவ், பெண் கைதிகளின் கும்பலினிடையே காடுஷாவைக் கண்டுபிடித்து விட்டான். அவனும் பின் தொடர்ந்து சென்றான். அவன் சிறிதும் வெட்கப்படவில்லை; தானும் அவர்களில் ஒருவன் தானே—என்ற எண்ணம் அவன் மனதில் குடி கொண்டிருந்தது. மேலும், தான் சைபீரியாவில் காடுஷாவுடன் தொல்லைகள் பல அனுபவிப்பதாக முன்பே பல முறை கற்பனை செய்து பார்த்திருக்கிறான்.

வெய்யலின் கொடுமை தாளாது—குடிக்கத் தண்ணீரும் கிடைக்காது—கைதிகளில் ஐவர் செத்தனர். சிப்பாய்களுக்கு என்ன கவலை? செத்த பிணங்களை போலீஸ் ஸ்டேஷனுக்குத் தூக்கி அனுப்பிவிட்டு, மற்ற கைதிகளை விரட்டிக் கொண்டு சென்றனர்.

மாலை மூன்று மணி சுமாருக்கு கைதிகள் மாஸ்கோ புகை வண்டி நிலையத்தை அடைந்தார்கள். தயாராக இருந்த கைதிகளுக்கான புகைவண்டியில் ஏற்றப்பட்டார்கள். அவர்களது சுற்றத்தார்

களின் அழுகை ஒலி புகைவண்டி நிலையம் எங்கும் கேட்டது. வண்டியிலிருந்த காடுஷாவை சந்தித்தான் நிக்லியுடாவ். "ஏன்? நீங்களும் புறப்பட்டுவிட்டீர்களா?" என்று பதட்டத்துடன் கேட்டாள் அவள்.

"ஆமாம்! அடுத்த வண்டியில் வருகிறேன்" என்முன் அவன். காடுஷா நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

புகைவண்டி நிலையத்தில் தங்கள் குடும்பத்தைக் காலி செய்துவிட்டு, வேறு நகருக்குச் செல்லுவதற்காக வந்த கோர்ச்சாகின் குடும்பத்தினரையும், அவனைக் காதலித்த மிஸ்ஸியையும் சந்தித்தான், நிக்லியுடாவ். மிஸ்ஸி வேருெரு ஆடவனுடன் சிரித்துப் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தாள். அது கண்டு நிக்லியுடாவ் ஆத்திரப்படவில்லை; அந்தத் தொடர்பும் தன்னைவிட்டு அறுபடுவது குறித்து மகிழ்ந்தான்.

அங்கே வந்த அவனது சகோதரி அவனது பயணத்தை நிறுத்திவிட எவ்வளவோ பாடுபட்டாள். முடிவில் தன் உடன் பிறந்தாளையும், வளர்ந்து வாழ்ந்த மாஸ்கோவையும் பிரிந்து, காடுஷாவுக்காக ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்த சைபீரியாவுக்குப் புறப்பட்டு விட்டான்.

O

புகைவண்டியிலும், படகிலுமாக கைதிகள் மூவாயிரம் மைல் பிரயாணம் சென்று பிரேம் நகரை அடைந்தனர். கிரிமினல் குற்றவாளிகளுக்கிடையே தொல்லைகள் பல அனுபவித்த காரணத்தால், அரசியல் கைதிகளுடன் பிரயாணம் செய்ய காடுஷாவுக்கு அனுமதி வாங்கித் தந்தான், நிக்லியுடாவ். அரசியல் கைதிகளுடன் பழகுவதில் காடுஷா சிறிது மகிழ்ச்சி அடைந்தாள். புரட்சிக்காரி வெராடுக்கோவா—கொலைசெய்யப்பட்ட மிருகங்களின் தோலால் காலணிகள் அணிவதுகூட கேடுகெட்ட செயல் என்று கருதி, ரப்பர் பூட்ஸ் அணிந்திருந்த அஹிம்சாவாதி ஸைமன்சன்—போன்ற இன்னும் பலருடைய பேச்சும், கொள்கைகளும் அவளை மிகவும் கவர்ந்தன. ஸைமன்சன் விசித்திரமானவன். அவன் கையில் எப்போதும் ஒரு நோட்டுப் புத்தகம் இருக்கும். அப்போதைக்கப்போது அவன் மனதில் தோன்றும் எண்ணங்களை உயர்ந்த கருத்துக்களாக நினைத்து அதில் எழுதிக் கொள்வான். அக்கருத்து தவறுனது என்று யாரேனும் சொன்னுல், எதிர்த்து வாதாட சிறிதும் தயங்கமாட்டான். அவனது வாழ்க்கையும் தடை பல குறுக்கிட்ட பெருங் கதை. அவன் சம்பளப் பட்டுவாடா செய்யும் ஒரு உயர்ந்த சர்க்கார் அதிகாரியின் மகன். ஆகவே 'கொல்லைப்புற' வழியிலும் அவன் தந்தை நிறைய சம்பாதித்தார். அவரது வருமானம் நீதிக்குப் புறம்பான அற்ப வழியில் வருகிறது என்று தந்தையைக் கண்டித்தான்.

அவனது லட்சிய எண்ணங்களுக்கு வீடு ஒரு சிறைதானே! வீட்டைவிட்டு வெளியேறி பள்ளி ஆசிரியனுகப் பணிபாற்றினுன். தன் மனதில் நல்லவை என்று பட்டதை பள்ளியிலும் ஏழைப் பகுதிகளிலும் எடுத்துரைத்தான்; அநீதி என்று நினைத்ததை எதிர்த்தான். அதற்கு மேலும் பொறுக்குமா அரசாங்கம்? கைது செய்து விசாரணைக்கு இழுத்தது. அவனே தன்னை விசாரிக்க நீதிபதிகளுக்கு உரிமையில்லை என்று மௌனம் சாதித்தான். கடைசியில் அவனை நாடு கடத்திவிட்டார்கள். அவன், காடுஷா தன் கருத்துக்களை ஏற்றுக் கொள்வாள் என்று கருதினுன்; அவளுடன் பழகுவதை விரும்பினுன்.

ஒவ்வொரு நாளும் பதினைந்து முதல் இருபது மைல் வரை நடை; இரண்டு நாள் நடந்தபின் ஒருநாள் ஓய்வு; இப்படி ஊர்ந்து கொண்டிருந்தது அவர்களது பிரயாணம்.

நிக்லியுடாவ் காடுஷாவை சந்தித்தபோதெல்லாம் வழக்கத் திற்கு மாருக அவள் மகிழ்ச்சியோடிருந்தாள். அரசியல் கைதிக ளோடு—குறிப்பாக ஸைமன்சோடு பழகியதால் அவள் நிறைய கற்றுக்கொண்டதாக நினைத்தாள்.

நிக்லியுடாவும் புரட்சி இயக்கத்தைப் பற்றி தெரிந்து கொண் டான். ரஷ்யாவில் புரட்சி இயக்கம் ஆரம்பமாகி, இரண்டாவது அலெக்சாண்டர் மன்னன் கொல்லப்பட்ட நேரத்தில் அவன் புரட்சிக்காரர்களை வெறுத்தான். ஆனுல் இப்போதோ அவர்கள் வேறு எதுவும் செய்திருக்க முடியாது என்று உணர்ந்தான். புரட் சிக்காரர்களில் பல ரகத்தினர். கொடுமையை எதிர்க்க வேண்டு மென்று உண்மையிலேயே கடமையுணர்ச்சி கொண்டவர்கள்; சுயநலத்திற்காகப் புகுந்தவர்கள்; அபாயங்களைச் சமாளிப்பதில் மகிழ்ச்சி இருப்பதாக எண்ணியவர்கள்—இப்படிப் பலப் பலர். எனினும் அவர்கள் நீதியைப் பிரதானமாகக் கருதினுர்கள். சேறும் சகதியும் நிறைந்த பாதையில் அவன் பயணம் நடத்தியபோது புரட்சிக்காரர்கள் தங்கள் சோகக் கதையை—துணிகர வாழ்க் கையை சொல்லுவார்கள். அதையெல்லாம் கேட்ட நிக்லியுடாவ் அவர்களை விரும்பினுன்.

○

ஒருநாள் ஏதோ ஒரு இடத்தில் கைதிகள் தங்கியிருந்தபோது காவல் அதிகாரியின் அனுமதிபெற்று, காடுஷாவைப் பார்க்கச் சென்ருன். அவள் அப்போது மிகவும் சுறுசுறுப்பாகக் காணப் பட்டாள். ஸைமன்சனுக்கு அவள் நிறைய பணிவிடைகள் செய்தாள்.

நிக்லியுடாவைக் கண்ட ஸைமன்சன் "நான் உங்களிடம் கொஞ்சம் தனியாகப் பேச விரும்புகிறேன்" என்ருன். இருவரும் தனி இடம் சென்றனர். "தவருக நினைத்துவிடாதீர்கள்...நான்

உங்களிடம் சொல்லிவிட வேண்டியது எனது கடமை. ஏனெனில் காடுஷாவுக்கும் உங்களுக்கும் உள்ள உறவை நான் நன்கு அறிவேன்...'' என்றான்.

இந்தப் பீடிகை எல்லாம் எதற்காக என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நிக்லியுடாவ், அந்த நேரத்தில் மிகவும் துடித்துக் கொண்டிருந்தான். "என்ன செய்தி?'' என்று கேட்டான்

"நான் காடுஷாவை நேசிக்கிறேன்......அவளைத் திருமணம் செய்துகொள்ளவும் தீர்மானித்திருக்கிறேன்...''

நிக்லியுடாவ் கணநேரம் ஏதோ ஒரு பயங்கர சக்தியால் தாக்கப்பட்டவனாக ஆனான். சற்று நேரம் கழித்து, "அதற்கு நான் என்ன செய்வது? அது அவள் சொந்த விஷயம்!'' என்றான்.

"உங்களுடைய தியாகத்தை காடுஷா ஏற்க மாட்டாள். ஆகவே அவளுக்கு புது வாழ்வு அளிக்க நான் விரும்புவது தவறல்லவே!'' என்று சொன்ன ஸைமன்சன் நிக்லியுடாவை முத்தமிட்டான்.

அன்று இரவும் மறுநாள் பயணத்தின் போதும் நிக்லியுடாவின் மனம் ஒரு நிலையில் இல்லை. காடுஷா—ஸைமன்சன் பிரச்சினை அவனை ஆட்டிவைத்தது. அவன் என்றோ ஒருநாள் தான் செய்து விட்ட தவறுக்காக காடுஷாவை மணக்க முடிவு செய்திருக்கிறான்; ஆனால் ஸைமன்சனோ காடுஷாவின் இன்றைய நிலையிலும் அவளை விரும்புகிறான்! இப்போது தன்னுடைய கடமை என்ன? —என்றெல்லாம் யோசித்தான்.

O

அடுத்த முகாமை அவர்கள் அடைந்தபோது, நிக்லியுடாவுக்கு அவனது நண்பனிடமிருந்து களிப்புச் செய்தியைத் தாங்கிக் கொண்டு கடிதம் ஒன்று வந்தது. மன்னரிடம் சமர்ப்பிக்கப்பட்ட காடுஷாவின் மனு வெற்றி அடைந்துவிட்டது! மன்னர் காரியாலய உத்தரவின் நகலும் அதில் இருந்தது. "காடுஷாவின் கடுங்காவல் தண்டனை, சைபீரியாவின் அருகில் உள்ள இடத்தில் ரத்து செய்யப்படுகிறது!'' என்பதைப் படித்ததும் அவன் மகிழ்ந்தான். அவனது போராட்டம் வெற்றியைத் தந்து விட்டது! உடனே இந்த நெஞ்சு குளிப்பாட்டும் செய்தியைத் தூக்கிக்கொண்டு காவல் முகாமுக்கு ஓடினான். 'நானும் வாழ வேண்டும்; குழந்தை குட்டிகளுடன் வாழ்க்கை நடத்துவதில்தான் எத்தகைய இன்பம் இருக்கிறது!' என்ற எண்ணம் அப்போது அவன் மனதில் தோன்றியது. காடுஷா அவனை வரவேற்றாள்.

"உன் தண்டனை குறைந்துவிட்டது தெரியுமா, காடுஷா? உத்திரவு இங்கு வந்தவுடன் உனக்கு விடுதலைதான்! நாம் எங்கு குடியேறுவது என்பதுபற்றி யோசிக்க...''

மகிழ்ச்சியோடு அவன் பேசிக் கொண்டிருந்தபோது காடுஷா பரபரப்புடன் இடைமறித்து, "யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? ஸைமன்சன் எங்கு இருக்கிறாரோ, அங்குதான் நான் இருக்கவேண்டும்!"

"என்ன? நீ சொல்வது உண்மையா?"

"நான் வேறு எதையும் எதிர்பார்க்க வில்லை: இதைவிட வேறு பெரிய இன்பமும் எனக்குக் கிடைக்க முடியாது!"

நிக்லியுடாவின் மனம் கண நேரத்தில் எங்கெல்லாமோ சுற்றியது. 'காடுஷா ஸைமன்சனைக் காதலிக்கிறாளா? இல்லை; இல்லை: அவள் என்னையேதான் காதலிக்கிறாள். ஆனால் நான்—உயர்ந்த மனிதன் என்று ஊரார் சொல்லும் நான் அவளை மணந்து கொண்டாலோ...எனக்கு இழிவு நேரும்; பழி குவியும்: என் வாழ்வு பாழாகும்; அதை அவள் விரும்பவில்லை; ஆகவே என் நன்மையைக் கருதியே அவள் என் தியாகத்தை ஏற்க மறுக்கிறாள்' என்று நினைத்தான். அவன் முகத்தில் ரத்தம் பாய்ந்தது. "போய் வருகிறேன்; மன்னியுங்கள்!" என்று தழுதழுத்த குரலில் காடுஷா சொன்னதுகூட எங்கோ கிணற்றிலிருந்து எழுவதுபோல அவனுக்குக் கேட்டது. காடுஷா வேகமாக அவன் பார்வையிலிருந்து மறைந்துவிட்டாள்.

○

அன்று இரவு நிக்லியுடாவ் தூங்கவில்லை. அவளது வாழ்வைக் குலைக்கக்கூடாது என்ற தூய எண்ணத்துடன் காடுஷா அவனை விட்டு வெகு தூரத்திற்குப் போய்விட்டாள். அவளுக்காக எடுத்துக் கொண்ட முயற்சியில் அவன் தோற்றுப்போகவில்லை; வெற்றியைத்தான் அடைந்தான். ஆனால், அவன் முன்னால் இப்போது கோடிக்கணக்கான பிரச்சினைகள் எழுந்து நிற்பதாகத் தெரிந்தது. உயிர் குடிக்கும் பயங்கரத் தொத்து நோய்களுக்கும் உள்ளத்தைக் கறுப்பாக்கும் துர் எண்ணங்களைப் பிறப்பிக்கும் பயங்கர வாழ்க்கைக்கும் காரணமான சிறைக்கூடங்கள்—திருத்த வேண்டியதற்குப் பதிலாக தீக்குணத்தைத் திணிக்கும் சிறை அதிகாரிகள்—அலட்சிய மனப்பான்மை கொண்ட அரசாங்கத் தூதுவர்கள்—அவர்களின் காலடியிலே மிருகத்தனமாக நசுக்கப்படும் பாமர மக்கள்—இவர்களைப் பற்றி எல்லாம் அவன் இப்போது நிறையத் தெரிந்துகொண்டான். அவைகளைத்தீர்க்க வேண்டியதும் தன் கடமை யல்லவா என்று உணர்ந்தான். முகத்திலே புதிய ஒளி பிரகாசிக்க இங்கு மங்கும் நடக்க ஆரம்பித்தான். அந்த நள்ளிரவில் அவன் முன் புதிய வாழ்க்கை உதயமாயிற்று: இந்தப் புதிய கட்டம் எப்படி முடியுமோ—காலம்தான் நிரூபிக்க வேண்டும்!

●●●

198945

செப்டம்பர் 29 உ முதல்

சென்னை
வெலிங்டன்
பிரபாத், ராக்ஸி.
மற்றும் தமிழ் நாடெங்கும்

குலதெய்வம்

எஸ்.கே.பிக்சர்ஸ்
...தயாரிப்பு...

வசனம்:
மாறன் எம்.ஏ.

டைரக்ஷன்:
கிருஷ்ணன் பஞ்சு

ஸ்டுடியோ:
ஏவி எம்

Wrapper printed at Shanti Press, Madras-1.